69

சக்தி

இந்தப் படம் கும்பகோணம் மகாமகத் திருவிழாவை ஞாபகப்படுத்துகிறது. கும்பகோணம் மகாமகத்தைப் போலவே கும்பகோணம் வெற்றிலையும் பெயர்பெற்றது. அந்த வெற்றிலைக்கு உகந்த, உயர்ந்த பாக்குத்தூள்

அசோகா

→ பாக்குத் தூள் ←

No. 1506 அசோகா MILD SCENTED ASOKA நெ. 1506

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
88870
சென்னை-600 008

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

OF THE REGISTRAR OF BOOKS 12 MAY 1947

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகாணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

பொருள் அடக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1941

●

அன்பை உபதேசியுங்கள்	...	மகாத்மா காந்தி	1
ஆசியா விழித்துக்கொண்டது	...	சரோஜனி தேவி	5
மலை	...	ல. சண்முகசுந்தரம்	7
ஸயாமில் ராமாயணக் கதகளி	...	டி. ஸொனகுல்	8
நாட்டுப் பாடல்கள்	...	டி. எம். மஜும்தார்	13
எழுத்தாளர் நேரு	...	ஸ்ரீமதி சியாங் கை ஷேக்	17
ருஷ்யர்களின் காதல் முறை	...	ஜீன் எப்பெல்	20
அழகிய கூந்தல்	...	'லக்ஷ்மி'	24
பிரசுரிக்காத கட்டுரைகள்	...	தி. ஜ. ர.	29
அந்தமான் தீவுகள்	...	அரசியல்வாதி	32
நடை அழகு	...	சுப. நாராயணன்	34
சுகப் பிரசவம்	...	நிக்கோலாய் ஐவனேவ்	37
மராத்தி இலக்கியம்	...	எஸ். ஆர். திகேகர்	40
சீனாவில் நடப்பது என்ன?	...	வி. ஆவரின்	44
வைஸ்ராயின் மனைவி	...	விக்டோரியா சாப்பல்லி	51
நாய்	...	பா ஜின்	54
அரசியல் வினா—விடை		ஸ்டாலின்-எலியட் ரூஸ்வெல்ட்	61
ஹென்றி போர்டு	...	'பிரயாணி'	63
ஜார்ஜ் டிமித்ராவ்	...	ஆர். எச். நாதன்	65
காலம் மாறும்	...	பண்டித நேரு	69
புத்தக உலகம்	...	சாக்கியன்; ராமையா	70

முதலியவை

அட்டைப் படம்: ஸ்ரீ என். ராமகிருஷ்ண, மாயவரம்

✲

சர்வசித்து சித்திரை

மலர் 14 இதழ் 1

சக்தி

நீங்கள் நேரில் வந்து பரீக்ஷை செய்யுங்கள்



முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானல் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் பாபாலால் கம்பெனியிலிருந்து வாங்கினதானல் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்கு கவலே வேண்டியதில்லே. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS

சர்வசித்து
மலர் 14

சக்தி

சித்திரை
இதழ் 1

மெய்ப் பொருள் காண்பது அறிவு

•

அன்பை உபதேசியுங்கள்

மகாத்மா காந்தி

நான் ஓர் அந்நிய பாஷையில் பேசப் போகிறேன். அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன். கூட்டத்தின் கடைகோடி வரைக்கும் இந்த ஒலி பெருக்கியின் குரல் கேட்குமா என்பது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. நான் பேசுவது கூட்டத்தி லுள்ள சிலருக்குக் கேட்காவிட்டால், அது ஒலி பெருக்கியின் குற்றம்தான் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை என்று கூறினேன்; கேட்கமாட்டேன்; ஏனென்றால், என் தாய்ப் பாஷையில் பேசினால் உங்களுக்குப் புரியாது. அதனால் என் சொந்தப் பாஷையில் (குஜராத்தியில்) பேசி உங்களை அவமதிக்க நான் விரும்பவில்லை. எங்களுடைய தேசிய பாஷை ஹிந்துஸ்தானி. அது சர்வதேசிய பாஷையாக மாற இன்னும் எவ்வளவோ காலமாகும் என்று கருதுகிறேன். சர்வதேச வியாபாரத்துக்கு இங்கிலிஷ்தான் சந்தேகத்துக்கு இடமின்றி முதல் ஸ்தானத்தைப் பெறுகிறது. பிரெஞ்சு பாஷையை ராஜதந்திர பாஷையென்று சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஐரோப்பாவில் எல்லா இடங்களுக்கும் நான் போக விரும்பினால் பிரெஞ்சு பாஷையைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று என் சிறு வயசில் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் எல்லோரும் பேசுவதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நான் பிரெஞ்சுப் பாஷையைக் கற்க முயன்றேன். ஆனால், பிரெஞ்சுப் பாஷைக்கும், ஆங்கில பாஷைக்கும் ஒரு போட்டி இருந்துகொண்டே இருக்கிறது. நான் ஆங்கிலத்தைக் கற்றிருந்ததால் அதையே துணையாகக் கொள்ளத் தொடங்கிவிட்டேன்.

உங்கள் முன் எதைப் பேசுவது என்று நான் திகைத்தேன். என் சிந்தனைகளைக் குவித்து உருவாக்க வேண்டுமென்று விரும்பினேன். ஆனால், எனக்கு அவகாச மில்லாமல் போய்விட்டது என்பதை

உங்கள் முன் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும், ஏதோ ஒரு சில வார்த்தைகள் பேசுகிறேன் என்று நேற்று நான் வாக்களித்துவிட்டேன். பாட்ஷா கானுடன் நான் வந்து கொண்டிருந்தபோது அவரிடம் ஒரு கடுதாசித் துண்டும், ஒரு பென்ஸிலும் வேண்டும் என்று கேட்டேன். ஒரு சில வார்த்தைகளைக் கிறுக்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று முயன்றேன். கடைசியில் அந்தக் கடுதாசித் துண்டு இப்போது என் அருகில் இல்லை என்பதைக் கேட்க நீங்கள் வருந்துவீர்கள். ஆனாலும், நான் சொல்ல நினைத்தது என் ஞாபகத்தில் இருக்கிறது.

நண்பர்களே! நீங்கள் உண்மையான இந்தியாவை இன்னும் பார்க்கவில்லை. உண்மையான இந்தியாவின் நடுவே இந்த மகாநாடு கூட்டப்பெறவில்லை. டில்லி, பம்பாய், சென்னை, கல்கத்தா, லாகூர் இவையெல்லாம் பிரம்மாண்டமான நகரங்கள்; ஆகவே, மேல்நாட்டுப் பண்பினால் பாதிக்கப்பட்டவை அவை.

சற்று முன்னால், எனக்கு ஒரு கதை ஞாபகத்துக்கு வந்தது. அது பிரெஞ்சுப் பாஷையில் எழுதப்பட்டிருந்தது. எனக்காக அதை ஓர் ஆங்கிலோ பிரெஞ்சுத் தத்துவ ஆசிரியர் மொழிபெயர்த்துக் கொடுத்தார். அவர் சுயநலமற்ற மனிதர். என் முகமறியாமலே என்னோடு நட்புக்கொண்டவர். ஏனென்றால், அவர் எப்போதும் சிறுபான்மையினரை ஆதரிக்கக் கூடிய மனிதர். அந்தச் சமயத்தில் நான் என் தாய் நாட்டில் இல்லை. அப்போது நான் மிக அற்பமான ஒரு சிறுபான்மைக் கூட்டத்தினனாகக்கூட இல்லாமல், கேவலப்படுத்தப்பட்ட சிறுபான்மைக் கூட்டத்தினனாக இருந்தேன். இப்படிச் சொல்லுவதற்காக, தென்னாப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியர்கள் என்னை மன்னிக்கவேண்டும்.

நான் ஒரு கூலி வக்கீலாக இருந்தேன். அந்தச் சமயத்தில் அங்கே ஒரு கூலி டாக்டரும் கிடையாது; ஒரு கூலி வக்கீலும் கிடையாது. நான்தான் அங்கே குடியிருந்த முதல் கூலி* வக்கீல். "கூலி" என்ற பதத்திற்கு என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

நான் குறிப்பிட்டேனே, அந்த நண்பருடைய தாயார் ஒரு பிரெஞ்சு மாது; தகப்பனார் ஆங்கிலேயர். அந்த நண்பர் சொன்னதாவது: "உங்களுக்காக ஒரு பிரெஞ்சுக் கதையை மொழிபெயர்த்துக் கூற விரும்புகிறேன். ஒரு காலத்தில் பிரான்சில் மூன்று விஞ்ஞானிகள் இருந்தார்களாம். உண்மையைக் கண்டறிவதற்காக அம் மூவரும் பிரான்சிலிருந்து வெளியே புறப்பட்டார்களாம்; ஆசியாவின் பல பகுதிகளுக்கும் அவர்கள் சென்றார்கள். அவர்களில் ஒருவர் இந்தியாவை நோக்கிச் சென்றார். அவர் அங்கே உண்மையைத் தேடி அலைந்தார். அந்தக் காலத்தில், அதாவது பிரிட்டிஷாரின் ஆட்சிக்கும், முகலாய ஆட்சிக்கும் முற்பட்ட காலத்தில், நகரங்கள் என்று அழைக்கப்பட்ட இடங்களுக்கெல்லாம் போனார். உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்பட்டவர்களை, ஆண் பெண் அடங்கலாக எல்லோரையுமே போய்ப் பார்த்தார்.

---

* தென்னாப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியர்கள் இந்தியர்களைக் 'கூலி' என்ற கேவலமான சொல்லால் அழைப்பார்கள்.
—ஆசிரியர், சக்தி

தமக்கு அலுப்புத் தட்டும் வரையும் பார்த்தார். கடைசியில், ஒரு சாதாரண கிராமத்தில் உள்ள ஒரு சிறு குடிசைக்குப் போனார். அது ஒரு பங்கியின் குடிசை. அங்கே தான் அவர் காண வந்த உண்மையைக் கண்டார்.''

ஆகவே, நீங்கள் உண்மையான இந்தியாவைப் பார்க்க விரும்பினால் சாதாரண கிராமங்களில் உள்ள பங்கிக் குடிசைகளுக்குச் செல்லவேண்டும். இப்படி ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. அவைகளில் முப்பத்து எட்டுக்கோடி மக்கள் வசிக்கிறார்கள்.

நீங்கள் கிராமங்களைப் போய்ப் பார்த்தால், அவற்றின் காட்சி உங்களை வசீகரிக்கப்போவதில்லை. சாணிக் குவியலைத்தான் நீங்கள் அங்கே காண்பீர்கள். ஆனால், ஒரு காலத்தில் அவை ஸ்வர்க்கங்களாக இருந்தன என்று நான் சொன்னால், அது கட்டுக் கதையாகாது. இப்போது அவை முன் போல் இல்லை; வெறும் சாணிக் குவியல்களாகத்தாம் இருக்கின்றன. நான் சரித்திரப் புஸ்தகத்தைப் பார்த்து இவற்றையெல்லாம் சொல்லவில்லை; என் கண்ணாரக் கண்டதையே நான் சொல்லுகிறேன். இந்தியாவின் கடைகோடித் திசைகள் வரையிலும் நான் பிரயாணம் செய்து, ஒளியிழந்த கண்களுடன் மனித வர்க்கம் துன்பத்தில் உழலும் காட்சியை நேரில் பார்த்திருக்கிறேன். அந்தக் காட்சிதான் இந்தியா. அந்தச் சாணிக் குவியல்களுக்கு மத்தியிலே, குடிசைகளிலேதான் நீங்கள் ஏழைப் பங்கிகளைக் காணமுடியும். அவர்களிடம்தான் ஞானத்தின் சாரமெல்லாம் குவிந்து கிடக்கிறது.

தவிரவும், புஸ்தகங்களிலிருந்தும், ஆங்கிலச் சரித்திராசிரியர்களால் எழுதப்பட்ட புஸ்தகங்களிலிருந்தும் நான் மேற்படி விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆங்கிலச்சரித்திராசிரியர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புஸ்தகங்களைத்தான் நாங்கள் படிக்கிறோம். நாங்கள் எங்கள் தாய்ப் பாஷையிலோ அல்லது தேசிய பாஷையாகிய ஹிந்துஸ்தானியிலோ எழுதுவது கிடையாது. சரித்திரத்தை மூல நூல்களில் படிப்பதைவிட ஆங்கிலத்தில் படிப்பதுதான் நாங்கள் செய்து வரும் காரியம். இப்படித்தான் கலாசார ரீதியில் இந்தியா பணிந்து கொடுத்துவிட்டது.

அறிவு ஞானம் கிழக்கேயிருந்துதான் மேற்கே சென்றது. இந்த அறிவு ஞானத்தைப் பரப்பியவர்களில் முதலாமவர் ஜொராஸ்டர்: அவர் கீழ் நாட்டைச் சேர்ந்தவர். அவருக்குப் பின்னால் புத்தர் கிளம்பினார். அவரும் கீழ் நாட்டவர்; இந்தியாக்காரர். புத்தருக்கப்புறம் தலை எடுத்தவர்கள் யார்? ஏசுநாதர். அவரும் கீழ் நாட்டைச் சேர்ந்தவரே. ஏசுநாதருக்கு முன்னாலிருந்த மோசஸ் எகிப்தில்தான் பிறந்தவர் என்றாலும் பாலஸ்தீனத்துக்காரர்தாம். ஏசுவுக்குப் பிறகு முகம்மது வந்தார். இங்கே கிருஷ்ணனைப் பற்றியும், ராமனைப் பற்றியும் மற்றும் பல ஞான ஜோதிகளைப் பற்றியும் நான் குறிப்பிடாமல் விட்டு விட்டேன். அவர்களை நான் அரை குறையான ஞான ஜோதிகள் என்று கருதவில்லை; ஆனால், அவர்கள் இலக்கிய உலகுக்கு அரை குறையாக அறிமுகமானவர்கள். உலகம் முழுவதிலுமே நான் முன்னால் குறிப்

பிட்டவர்களில் யாராவது ஒருவருக்கு ஈடானவர்கூட எவரும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், பலன் என்ன? கிறிஸ்தவ மதம் மேல் நாட்டுக்குப் போனதும் அது கோர உருவம் பெற்றுவிட்டது. இதைச் சொல்லவேண்டி நேர்ந்ததற்கு நான் வருந்துகிறேன். இதற்கு மேல் இதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை.

நகரங்களில் நீங்கள் உண்மை இந்தியாவைக்காணவில்லை என்பதை உங்களுக்கு விளக்கவே நான் அந்தக் கதையைச் சொன்னேன். இந்தியாவில் இப்போது நம் கண் முன் நடைபெறும் வெட்டும் குத்தும் வெட்கப்பட வேண்டிய காரியங்கள். நேற்று உங்களிடம் நான் சொன்னதுபோல், இந்தியாவை விட்டு நீங்கள் செல்லும்போது இந்த வெட்டுக் குத்தின் ஞாபகத்தைக் கொண்டு செல்லாதீர்கள்.

நீங்கள் ஆசியாவின் தர்மத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே நான் ஆசைப்படுகிறேன். அதைத் தெரிந்துகொள்ள மேல்நாட்டுக் கண்ணாடி தரிக்கவோ, அணுக் குண்டு முறையைக் 'காப்பி' யடிக்கவோ கூடாது. நீங்கள் மேல் நாட்டுக்குத் தர்மோபதேசம் செய்ய விரும்பினால், அன்பையும், சத்தியத்தையும் உபதேசியுங்கள். உங்கள் அறிவைத் திருப்ப மாத்திரம் நான் விரும்பவில்லை. உங்கள் இருதயத்தைக் கொள்ளை கொள்ளவே நான் விரும்புகிறேன்.

இந்த ஜனநாயக சகாப்தத்தில், ஏழைகளிலும் பரம ஏழைகளாக இருப்பவர்களும் கண் விழித்துக் கொண்ட இந்தச் சகாப்தத்தில், முன் சொன்ன தர்மத்தை மிகவும் அழுத்தமாக மறுபடியும் உபதேசியுங்கள். உங்களைச் சுரண்டியதற்காக மேல் நாட்டைப் பழிவாங்குவதன் மூலம் அவர்களை நீங்கள் வென்றுவிட முடியாது; ஆனால், உண்மையான நட்பினால்தான் வெல்ல முடியும். அந்தக் கீழ் நாட்டு ஞானிகள் நமக்கு உபதேசித்துச் சென்ற தர்மத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், நீங்கள் எல்லோரும் உங்கள் அறிவை மட்டுமல்லாமல் உங்கள் இருதயங்களையும் ஒன்ருக்க வேண்டும். அப்போதுதான் காரியம் சாத்தியமாகும். அந்த ஞானிகளின் தர்மத்துக்கு ஏற்றபடி உண்மையில் நாம் யோக்கியதை படைத்தவர்களாகிவிட்டால் மேல் நாட்டை வென்றுவிடலாம். இந்த வெற்றியை மேல் நாட்டவர்களும் விரும்புவார்கள்.

ஞானத்தில் இப்போது மேல் நாடுகளுக்கு அதிகத் தேட்டம் ஏற்பட்டிருக்கிறது. அணுக்குண்டுகளின் உற்பத்திப் பெருக்கால் அந் நாடுகள் பயந்து திக்குத் தெரியாது தவிக்கின்றன. அணுக் குண்டுகள் என்றால் மேல் நாட்டுக்கு மட்டுமல்லாமல் உலகம் முழுவதற்கும் சர்வ நாசம் என்றுதான் அர்த்தம். பைபிளில் கூறப்பட்டபடி, உலகம் எல்லாம் வெள்ளத்தில் ஆழ்ந்துவிடப் போகிறதா? உலகுக்குப் பாவ, புண்ணியங்களை எடுத்துச் சொல்ல வேண்டியது உங்கள் கடமை. உங்களுடைய ஆசான்களும், என்னுடைய ஆசான்களும், ஆசியாவுக்குக் கற்பித்த பாடம் அதுதான்.

[ஆசிய உறவு மாநாட்டில் காந்திஜி பேசியது]

காந்தி மலர் 3 விலை ரூபாய் ஆறு

புதுமைப் பதிப்பகம் லிமிடெட் :: காரைக்குடி, சென்னை

1.	கார்ல் மார்க்ஸ்	ஆர். எச். நாதன்	3	0	0
2.	லெனின் சரித்திரக் கதைகள்	தி. ஜ. ர.	3	12	0
3.	சீனமக்களும் சீனமும்	லின்-யூ-டாங்	7	8	0
4.	ஆத்ம சிந்தனை	ராஜாஜி	1	8	0
5.	சாரதையின் தந்திரம்	கல்கி	4	8	0
6.	பாரதியும் கவிதையும்	தங்கம்மாள் பாரதி	2	8	0
7.	நாடக உலகம்	கொத்தமங்கலம் சுப்பு	3	12	0

(தபால் செலவு தனி)

*

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்

காரைக்குடி :: சென்னை

அஜீர்ணமுண்டாகும் ஆகாரங்களை குழந்தைகளுக்கு கொடுக்காதீர்கள். நீங்கள் உட்கொள்ளும் ஆகாரங்களையோ, பானங்களையோ குழந்தைகளுக்கு கொடுப்பதினால் குடலுக்கு கோளார் ஏற்படலாம். இம்மாதிரி தவறுதலான போஷிப்பில் ஜாக்கிரதை வேண்டும்.

ஆரம்ப அறிகுறிகளை கவனிக்கவும்

அடிக்கடி ஜுரம் ஏற்படுதல், மலச்சிக்கல், அதிக பேதிப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், பொதுவாக சோர்ந்திருத்தல், அடிக்கடி சிணு சிணுத்தல்.

நேர்மையான குணமளிக்கும் சிகிச்சை செய்யுங்கள்

ஜம்மியின் லிவர் க்யூர் கொடுப்பதினால், உமது கவலையை நீக்கி, பணச் செலவை குறைத்து, வியாதியை முற்ற விடாமல் பின்னிட்டு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிற்கும்.

ஜம்மியின்
லிவர்க்யூர்
உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலைக்கட்டிக்கு ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்
மைலாபூர் — மதராஸ்.

[illegible]

கவிராஜ் R. N. சென்குப்தாவின்

அமிர்த ஸலஸா
(ரிஜிஸ்டர்ட்)

(தங்க ஸத்துக் கலந்தது)

எல்லா விதமான சரும வியாதிகள், ரத்த அசுத்தம், கட்டிகள், வாத நோய்கள், ரத்தசோகை முதலியவற்றிற்கும் குழந்தை பிறந்தவுடன் ஏற்படும் பலவீனத்திற்கும் ஓர் சிறந்த ஔஷதம்.

ஒரு வாரம் உபயோகித்தால் அதன் குணம் நன்கு தெரியும். ரத்தம் சுத்தம் அடைந்து நாளடைவில் நல்ல ரத்தம் அதிகரிக்கிறது. எல்லா வியாதிகளும் நீங்கி அவயவங்கள் நல்ல சுவாதீனம் அடைகிறது. யௌவன சக்தியை மீண்டும் பெறுகிறது.

பாடில் 1க்கு ரூ. 1-0-0

1 டஜன் ரூ. 10-0-0
(தபால் செலவு தனி)

ஏஜண்டுகள் தேவை

Mahat Ayurvediya Ausadhalaya
144/1, Upper Chitpore Road, Calcutta

ஆசியா விழித்துக்கொண்டது

சரோஜனி தேவி

பழம் பெருமை படைத்த, ஆனல், என்றும் இளமை நிறைந்திருக்கும் நம் பாரதத் தாய் ஆசிய நாடுகள் அனைத்துக்கும் பண்டை நாளில் கூறியது போல இன்றும் நல்வரவு கூறி நிற்கிருள். அவளுடைய அழைப்புக்கு இணங்கி வானத்தைத் தொடும் மலைகளையும் கடந்து, ஏழு கடலையும் தாண்டி மக்கள் வந்துள்ளனர். பாரத மாதாவின் ஆசி மொழிகளைப் பெறவும், நாட்டின் அறிவு, பண்பு, என்றும் அழியாத சமாதான நோக்குடைமை முதலியவற்றை அள்ளிப் பருகவும் இரவு பகலாக வானவெளியில், மேகங்களின் ஊடே பறந்துவந்து சேர்ந்துள்ளனர்.

பலமான அஸ்திவாரத்தின் மீது நம் எதிர்காலத்தை நிர்மாணிக்க வேண்டிய சக்தியும், எழுச்சியும் பெறுவதற்காகவே அவர்கள்—வாழ்க்கையின் யாத்திரீகர்கள்—இங்கு வந்துள்ளார்கள். அந்த எதிர்கால அமைப்பு, அந் நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும் நல்வாழ்வையும் அடிகோலுவதோடு தொன்று தொட்டு வழங்கிவரும் பழக்க வழக்கங்களுடன் ஒன்றியதாகவே இருக்கும். பழமையின் சாயல் இருந்தாலும், புத்துணர்ச்சி பெற்று வீறுகொண்ட ஆசியா, நாகரிக உலகோடு சமமாக நிற்க அவை உறுதுணையாக உதவும்.

ஆசிய மாநாட்டிற்கு அண்டை நாடுகளி லிருந்து வந்துள்ளார்கள்; நெடுந் தொலைவிலுள்ள யாருக்கும் தெரியாத, ஆசிய நாட்டு மூலை முடுக்குகளி லிருந்தும் வந்திருக்கிருர்கள். பல திறப்பட்ட நாகரிகமுடையவர்கள்; முரண்பட்ட கோட்பாடு உடையவர்கள்; பல்வேறு மொழிகள் பேசுகிறவர்கள்; இவர்களின் வாழ்க்கை முறையும் வேறுபாடுடையதே. வாழ்க்கையின் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க அவர்கள் கடைப்பிடிக்கும் வழிகளும் வித்தியாசப்படுகின்றன.

நம் பாரதத் தாயின் அழைப்புக்கிணங்கி, அந்நிய நாட்டி லிருந்து அனைவரும் வந்து குழுமியுள்ளனர். பழம் பெருமைகளை நினைவூட்டும் இந்தியத் தேசத்தில் அனைவரும் சந்தித்து, வரும் காலம் என்னும் அழகான சிலையை விதி என்னும் தறியில் நெய்ய முன் வந்துள்ளனர். பகற் கனவான ஒன்றை நடைமுறையில் நடத்திக்காட்ட நம் இந்தியத் தாயாலன்றி வேறு யாரால்

ஆசிய உறவு மாநாட்டுக்கு வருமாறு இந்தியா பிற நாடுகளுக்கு விடுத்த அழைப்பின் நோக்கத்தை, ஸ்ரீமதி சரோஜனி தேவி ஹிந்துஸ்தான் டைம்சில் இக் கட்டுரை மூலம் தெரிவித்துள்ளார்.

முடியும்? ஏனெனில், ஆசிய மா நாடு, மகத்தான நாடகம்; அரும் பெரும் காரியங்களைச் சாதிக்க வல்ல ஒரு காவிய நிகழ்ச்சி.

நேற்று வரை, இந்த நாடுகள் நமக்கு நெடுந் தொலைவில் இருந்தன. போக்குவரவே இல்லாத அந்நிய நாடுகளாக இருந்தன. நாம் சிறு பிராயத்தில் இருந்தபொழுது சீனா, ஈரான், பர்மா, சயாம், ஜாவா, எகிப்து, அரேபியா முதலிய நாடுகளும் கைபர் கணவாய்க்கு அப்பாலுள்ள மலைப்பாங்கான நாடுகளும், அவைகளின் பெருமைகளும், சிறப்புகளும் நம்மைப் பரவசப் படுத்தின. திபேத்—அதை நாம் கதைகளில்தான் படித்திருந்தோம். மங்கோலியா நமக்கு ஒரு புதிராக இருந்தது. அந் நாட்டின் நகரங்கள் புராணக் கதைகளில் வரும் நகரங்களாக இருந்தன. ஆனால், இன்று ஆசியா விழிப்புற்றுள்ளது. பல நூற்றாண்டுகளாகத் தூங்கிக்கொண்டிருந்த நாட்டை, காலத்தோடு ஒத்து, உலகத்தோடு சமமாக நிற்கும் உணர்வு தட்டி எழுப்பியுள்ளது. சமூக, பொருளாதார, தேசிய, ஆத்ம விலங்குகளை உடைத்தெறியாவிட்டால், அந்த நாடு அழிந்துவிடுவது திண்ணம் என்பதை உணர்ந்துள்ளது ஆசியா.

சுதந்தரம்தான் ஆசிய மக்களின் மனத்தில் ஆழப் பதிந்திருக்கும் வேட்கை. புத்துயிர் பெற்ற இந்தியா புனர்ஜன்மம் எய்திய பிற ஆசிய நாடுகளுக்கு எக்காளம் ஊதி அழைப்பு விடுக்கிறது. அர்த்தமற்ற லட்சியமாயிருக்கும் சமாதானத்தைத் தழுவி நிற்போம் என்று ஒன்று கூடிப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளக் கூவி யழைக்கிறது இந்தியா.

சமாதானம்தான் நாகரிகத்திற்கும் கலாசாரத்திற்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடும். அதுதான் மனித சமூகத்தைக் கட்டி வளர்த்து இடைஞ்சலற்ற சுதந்தரத்தையும், சௌந்தரியத்தைச் சிருஷ்டிக்கும் சந்தர்ப்பத்தையும், சத்திய நெறியில் ஒழுகி மாறாத அன்புணர்ச்சி யூட்டும் உண்மையான நட்பையும் கொடுக்க வல்லது.

✲

உங்களுக்குத் தெரியுமா?

(1) முதல் முதலாக 1798-ம் வருஷத்தில்தான் இங்கிலாந்தில் ஒரு தற்காலிகமான யுத்தகால ஏற்பாடாக வருமான வரி விதிக்கப்பட்டது.

(2) கிரேக்கர்களுடைய பூர்வீக காலத்திலேயே கோலி விளையாட்டு உண்டு.

(3) அம்மை குத்துவதை முதல் முதலில் கண்டு பிடித்தவர் எட்வர்ட் ஜென்னர் என்ற ஆங்கில டாக்டர்.

(4) லண்டனில் மூட்டம் போட்டிருக்கும் ஒரு நாளில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு தடவை மூச்சை உள்ளே இழுக்கும்போது 75 லட்சம் அணுக்கள் நிறைந்த தூசி அவன் இருதயத்துக்குள் போகிறது.

(5) உலகத்தில் உற்பத்தியாகும் தேயிலையில் பாதியைப் பிரிட்டனே வாங்கிக்கொள்ளுகிறது.

(6) இங்கிலாந்தில் 1888-ல் தான் முதல் முதலாகக் கால் பந்தாட்டச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

மலை

ல. சண்முகசுந்தரம்

நோயெல்லாம் நீக்கி, நெஞ்சின்
நொடியெல்லாம் போக்கி, யார்க்கும்
தாயென எண்ணில் நன்மை
தழைத்தருள் மருந்தைத் தந்தாய்,
காய்தலும் உவப்பும் தானும்
வேரறக் களைந்தோர் வாழக்
கோயிலாம் குகையும் தந்த
குன்று சூழ்மலையே, எந்தாய்!

ஆவலாய் மேகச் சேய்கள்
ஒன்றன்மேல் ஒன்ருய் ஆர்த்துத்
தாவியே உன்றன் தோள்மேல்
முறைமுறை தழுவித் தூங்கிக்
கூவியும், அணைத்துக் கொஞ்சிக்
குழறியும், வான மங்கை
நீவியும், மௌனம் பூண்டாய்,
நிலைநின்ற குவட்டுக் குன்றே!

நித்தில மலையென்ன
நிரை நிரை உடுக்கள் மின்ன
பத்தினி வானம் வெள்ளிக்
கிண்ணத்தில் பசுந்தேன் வார்த்துச்
சித்தமோடிந்த தென்னத்
திங்களும் அருகே தோன்ற
இத்தனை கண்டும் காணுர்
போலநீ இருப்ப தென்னே?

ஆர்ப்புற்று மண்ணும் விண்ணும்
அமைவற்றுக் கடலும் நெஞ்சும்
ஏற்பின்றித் தழுவி நாளும்
இரியல்பட் டொழிந்து, அன்பில்
தோற்பதா யெண்ணி, உன்றன்
சூக்கும நோக்கம் தன்னைப்
பார்ப்பதே தொழிலாம் என்று
பார்த்துஉன் பெருமை கண்டேன்

அன்பினைப் பெற்று, கொஞ்சம்
அரைக்கணம் கழியு முன்பு
அன்பினைத் திருப்பி ஈயும்
அங்காடிப் பேர மின்றி
அன்பினைப் பெற்று, அன்பின்
அருந்துணை தன்னல், இங்கு
மன்பதை முழுதும் காக்கும்
மாண்புக்கோர் உருவம் நீயே!

ஸயாமில் ராமாயணக் கதகளி

●

டி. ஸொனகுல்

இந்தியாவின் பழைய இதிகாசமாகிய ராமாயணத்தை எங்கள் நாட்டில் ராமாகியன் என்று அழைப்போம். ராமனுடைய பெருமையைக் கூறும் இந்தக் கதை எங்கள் நாட்டுப் புராண நாடகத்துக்கு அஸ்திவாரமாக உள்ளது.

ராமாயணத்தை ஆசியாவின் * ஓதூஸியம் என்று சொல்லுவதுண்டு. தென் கிழக்கு ஆசியாவில் பரவியுள்ள இந்தியக் கதைகளில் மக்களுக்கு நன்கு அறிமுகமான கதை ராமாயணம் தான். கிறிஸ்தவர்கள் பைபிளுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்திருக்கிறார்களோ, அவ்வளவு மதிப்பை இந்துக்கள் இந்தப் புஸ்தகத்துக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்துக்கள் வசிக்காத பிரதேசங்களுக்கும் இந்தக் கதை பரவி, புகழும், மதிப்பும் பெற்றிருக்கிறது.

இந்த ராம கதை ஸயாமுக்குள் பிரவேசித்ததை ஆராயப் புகுந்தால் அதுவே ஒரு பெரிய கதையாகிவிடும். இந்தியர்கள் அடுத்தடுத்துத் தொடர்ச்சியாக இந்தோ சைனவிலும் இந்தோனேஷியாவிலும் குடியேறிக் கொண்டு வந்தபோது தங்கள் அரசியல், கலாசாரச் செல்வாக்கையும் இந்நாடுகளில் விதைத்து விட்டார்கள். ஹிந்து அரசாங்கங்கள், அல்லது ஹிந்துமதச் செல்வாக்குப் பெற்ற அரசாங்கங்கள், ஒரு காலத்தில் இல்லாவிட்டால் ஒரு காலத்தில் மலேயா தீபகற்பத்திலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும், கம்போடியாவிலும், எங்கள் நாட்டிலும் சீர் பெற்றுத் திகழ்ந்தன.

ராமாயணம், ஜாவா, கம்போடியா முதலிய நாடுகளின் மூலமாகத்தான் அநேகமாக எங்கள் நாட்டில் நுழைந்தது. ஸயாம் சரித்திரத்தில் அயுத்தயன் வம்சம் (1350-1767) ஆண்ட காலத்தில் ராமனுடைய கதை, இலக்கியம், சிற்பம், மணிச் சிற்பம், மற்றும் அலங்கிருதக் கலைகள் முதலியவற்றின் மூலம் மிகவும் பிரசித்தியடைந்திருந்தது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன.

ஆரம்ப காலத்தில் முழுக் கதையும் புஸ்தக உருவில் எழுதப்படாமல், நிழல் பொம்மை ஆட்ட நாடகத்தின்போது தாள லயத்துடன் பாடும் பாடல்களாகச் சிதறுண்டிருந்தது. இந்த கிழலாட்டம் அயுத்தயன் காலத்திலேயே தோன்றியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இந்த நிழல் ஆட்ட நாடகத்தைக் காம்பாக் என்று சொல்லுவார்கள். ஸயாம், கம்போடியா போன்ற பௌத்த மதஸ்தர்கள் வாழும் நாடுகளில் ராமாயணம் தெய்விகத் தன்மையை இழந்திருக்

மலையாள நாட்டில் உள்ள கதகளி நாட்டியத்தைப்போல் ஸயாமிலும் கதகளி ஆடுகிறார்கள். நாட்டுக்கு நாடு ஆடும் முறைகளும் பண்பும் வேறுபடுகின்றனவே ஒழிய, மூலத்தின் சாரம் ஒன்றுதான். ராமாயணத்திற்குத் தரப்படும் மூல மதிப்பும் ஒன்றாகத்தான் இருக்கிறது. தி நேஷனல் ஜாகரபி மாகஸினின் விருந்து.

* ஓதூஸியம், கி. மு. 850-ல் வாழ்ந்த கிரேக்க மகாகவி ஹோமர் என்பவரால் எழுதப்பட்ட காவியம்.

ஓர் அரக்கனைக் கொன்றதற்காக ராமன் ஹனுமானைப் பாராட்டுகிறான்

கும் என்று சொல்லத் தேவையில்லை.

1798-ம் வருஷத்துக்குப் பிறகு தான் பாங்காக்கில் ஆண்ட சாக்ரி வம்சத்தை ஸ்தாபித்த அரசன் ஒருவன் ஸயாமிய பாஷையில் ராமாகியன் என்ற ராமாயணத்தை எழுதத் தொடங்கினன். இவ்வரசனுக்கு இந்த உத்வேகத்தை யளித்ததற்குக் காம்பாக் போன்ற ஒரு ஸயாமிய ராம கதையோ அல்லது கம்போடியாவின் ராம்கேர் என்ற நூலோ மூல காரணமாக இருந்திருக்கலாம். ஆனல், ராமாகியன் மேற்கூறிய இரண்டு நூல்களினின்றும் வேறுபட்ட ஓர் அமைப்பில் எழுதப்பட்டுள்ளது. நிழல் ஆட்ட நாடகத்துக்குப் பாடும் பாடல்களைப்போல் இல்லாமல், நாட்டியத்துக்குப் பின்னணியாகப் பாடும் அகத்துறை தழுவிய பத சாஹித்யங்களாக இந்த ராமாகியன் எழுதப்பட்டுள்ளது. இதில் மொத்தம் இரண்டு லட்சம் சொற்கள் அடங்கியுள்ளன. ராம கதையை எழுதிய ஸயாம் கவி இலங்கை மகாயுத்தத்துடன், அதைப் போன்ற வேருெரு மகா யுத்தத்தையும், இரண்டு சிறு போர்களையும் கதையில் இணைத்துப் பாடியிருக்கிருர்.

கோன் என்று அழைக்கப்படும் நாட்டிய அரங்கிலும், நாங் என்று அழைக்கப்படும் நிழல் ஆட்டத் திரையிலும் ராம கதை இடம் பெற்றுள்ளது. நடிகர்கள் பலவகையான முகமூடிகளைத் தரித்து நடிக்கும் கோன் என்ற நாட்டிய முறை, நாங் என்ற நிழலாட்ட நாடகத்தின் அடிப்படையில்தான் தோன்றியிருக்கும் என்பது என் அபிப்பிராயம். ஏனென்ருல், இப்போதும், ஒரு வகையான கோன் நாட்டியத்தில், பின்னணியில் ஒரு வெள்ளைத் திரையைக் கட்டி அதில் பொம்மையின் நிழல்கள் விழும்படி செய்யப்படுகின்றன.

கோன் நாட்டிய அரங்கில், வாத்திய கோஷ்டியினர் மேடையின் ஒரு பக்கத்தில், ஒரு பொன்னிறமான பெஞ்சுக்குப் பின்புறமாகவோ, அல்லது அதற்கென்று அமைக்கப்பட்ட குழியிலோ உட்கார்ந்துகொள்ளுவார்கள். ஆறுபேரிலிருந்து இருபது பேர் வரை பலவகையான தாளவாத்தியங்கள், ராக வாத்தியங்கள் முதலியவைகளை வாசிப்பார்கள். வாத்திய கோஷ்டியோடு 'கோர' ஸாகவாய்ப்பாட்டுப் பாடும் பாடகர்களும், மறந்துவிட்டவைகளை ஞாபகப்படுத்தும் ஒருவனும் சேர்ந்து இருப்பார்கள். அவன் ஞாபகப்படுத்துவது சிலசமயம் சபைக்குப் பகிரங்கமாகக்கூடத் தெரியும்! மேடையில் உள்ள நாட்டியக்காரர்கள் முகமூடி யணிந்திருப்பதால் பேசுவதற்குச் சாத்தியப்படாது. ஆகவே, ஞாபக மூட்டும் ஆசாமியின் குறிப்பைக் கண்டு அதன்படி நடித்து வாத்தியக் கோஷ்டியினரின் பாடலுக்கு ஏற்றபடி தாள லயத்துடன் ஆடுவார்கள்.

நாட்டியத்தில், பலவகைப்பட்ட அவசங்களும் (நிலைகளும்) அபிநயங்களும் நிறைந்திருக்கும். நாட்டியத்தில், உடலை வளைத்து நடிப்பதோடு, சிந்தனையையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்தியாக வேண்டும்.

காலைத் தரையில் ஓங்கி மிதிப்பதன் மூலமும், கை ஜாடைகளின் மூலமும் கோப உணர்ச்சி அபிநயிக்கப்படுகிறது. விரல்களால் பற்றி மேல் உதட்டைச் சற்று உயரத் தள்ளும்போது புன்னகையின் தோற்றம் உண்டாகிறது.

அது சந்தோஷத்தை வெளிப்படுத்த உதவுகிறது. கையை ஒரு வகையாக வீசிக்கொண்டு உடம்பை விறைப்பாக்கிக் காட்டினால், அது மோக உணர்ச்சிக்கு அடையாளம். நெற்றியின் மேற் பகுதியைக் கையால் தாங்கிக் கொண்டால், அந்த நிலை துக்கத்தைக் காட்டும்.

ஓடுவது, சண்டை செய்வது, அழுவது போன்ற நடர்களின் இயக்கங்களுக்குச் சங்கீதம் வழி காட்டியாக இருக்கிறது. பூதாகாரமான அரக்கர்கள், அகம்பாவம் நிறைந்த கர்வம், வெறி நிறைந்த மோகம், மூர்க்கத்தனம் முதலியவற்றோடு கௌரவத்துக் கும்கூட எடுத்துக்காட்டாகத் தோன்றுவார்கள். ராமனுடைய சைனியங்களான குரங்கு வேஷக்காரர்கள்,கயிற்றின் மேல் வித்தை செய்யும் கூத்தாடிகளைப் போல அவ்வளவு சாமர்த்தியமாகக் குரங்காகவே நடிக்கிறார்கள்.

பாத்திரங்களை வேறுபடுத்திக் காட்டவே முகமூடிகள் அணியப்படுகின்றன. ராமன் முகமூடி அணிந்துகொண்டால் அவனுடைய ஊசியான ராஜகிரீடமும்,பச்சைநிறமுகமும் அவனைச் சட்டென்று அடையாளம் காண்பிக்கிறது. ஆனாலும், அவனும் அவன் தம்பியும் அடிக்கடி முகமூடி யணியாமலே நடிக்கிறார்கள். ராவணனுக்குப் பச்சை நிறமான முகமூடி. அவனுடைய கிரீடம் ஒரு புது மாதிரியாக இருக்கும். அந்தக் கிரீடத்தில் சிறுசிறு தலைகள் வரையப்பட்டு அவனுக்குப் பத்துத் தலைகள் இருப்பது காண்பிக்கப்பட்டிருக்கும். ஸயாம்காரர்களாகிய நாங்கள் பத்துக் கழுத்துடையவன் என்ற பொருளைக் குறிக்கும் தசகந்த் (தசகண்டன்) என்று அவனைச் சொல்லுவோம்.

குரங்கினத் தரசனும், தசகண்டனின் இரு சகோதரர்களும், அவனுடைய மூத்த மகன் இந்திரஜித்தும் பச்சை நிறமான முகமூடிகள்தாம் போட்டுக் கொள்ளுவார்கள் என்றாலும், முகத்தோற்றம், கிரீட அமைப்பு முதலியவற்றால் ஒருவருக் கொருவர் வித்தியாச மாகவே காணப்படுவார்கள். அநேகமாக, பச்சை முகமூடி யணிவது உயர்ந்த அந்தஸ்தைக் குறிப்பிடும்.

ராமனுடைய நம்பிக்கைக் குரிய தோழனும், போர் வீரனுமாகிய ஹனுமான் வெள்ளை நிறமான குரங்கு முகமூடியை அணிந்திருப்பான். மற்றப் பாத்திரங்கள் மஞ்சள், ஊதா, சிவப்பு முதலிய நிறங்களில் முகமூடி அணிந்திருப்பார்கள். மேல்நாடுகளில் பெரும்பாலும் காணப்படும் ஊதா, நீலம் முதலிய வர்ணங்கள் தீட்டப்பட்ட முகமூடிகள் சாதாரண பாத்திரங்களுக்குத்தான் கொடுக்கப்படுகின்றன.

நடிகைகள் தங்கள் உடலின் கீழ்ப் பாகத்தில் கால்சராய் போன்ற ஓர் உடையையும், மேல் பாகத்தில் கனமான தாவணியையும் அணிந்துகொள்ளுவார்கள். கைகள் திறந்தே இருக்கும்.

நடிகர்கள் பனுங் என்று சொல்லப்படும் ஒருவகை கால் சராயைப் போட்டு அதன் மேல் ஒரு நீளக் கால் சட்டையைப் போட்டுக் கொள்ளுவார்கள். கால் சட்டையின் கீழ்பாகம் அழகான வேலைப்பாடுகளுடன் பளபளக்கும். உடம்பில் இறுக்கமான சட்டை போட்டிருப்பார்கள். அவர்களின் புஜங்களில்

மேல் நோக்கியிருக்கும் சின்னஞ் சிறு சிறகைப் போன்ற அலங்கார அமைப்பு ஒன்று இருக்கும். அரக்கர்களுக்கும் இதே மாதிரி உடைகள்தாம். குரங்கு வேஷக்காரர்கள் இந்தச் சிறகுகளில்லாமல், வால்களை அணிந்து கொள்ளுவார்கள். ஆடையாபரண அலங்காரம் கண்ணைப் பறிக்கும்படியாக மின்வெட்டு வெட்டிக்கொண்டிருக்கும்.

* * *

கோன் என்பதோடு, லாகோன் என்ற ஓர் இசை நாட்டியமும் உண்டு. இதில், பின்னணியில் பலர் சேர்ந்து கோரஸாகப் பாடுவார்கள். ஒரு காலத்தில் கோன் ஆண்கள் ஆடும் நாட்டியமாகவும், லாகோன் பெண்கள் ஆடும் நாட்டியமாகவும் இருந்தன. என்றாலும் இப்போது இரண்டு நாட்டியங்களிலும் இருபாலரும் நடிக்கிறார்கள். லாகோனில் முகமூடி சமாச்சாரம் கிடையாது. முகஜாடை காட்டாமல் கை ஜாடைகளும், மற்றும் ஓர் ஒழுங்கு முறைக்குட்பட்ட சைகைகளும் காட்டப்படுகின்றன. இதோடு ராபம் என்ற நாட்டிய வகையும் உண்டு. சங்கீதத்துக்கு இசைந்து சில சமயங்களில் கவிதைகளையும் இசையுடன் பாடுவதைப் பின்னணியாகக் கொண்டு ராபம் நாட்டியம் ஆடப்படும். இந்த ராபம் நாட்டியம் பெரும்பாலும் நாடகங்களின் நடுவேதான் ஆடப்படும்.

மேலை நாட்டுக் கிரேக்க முறையை ஒட்டிய, வசனமும் சம்பாஷணையும் உள்ள நாடகங்கள் மத்திய காலத்தில் இந்தியாவில் சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்டன. ஆனால், அந்த மாதிரி நாடகம் எங்கள் நாட்டில் பிரவேசிக்காமல் இருந்துவிட்டது. எங்களுடைய நிழல் ஆட்டம், நாடகம், நாட்டியம் எல்லாமே பின்னணியில் கதையைப் பாட்டாகப்பாட அதற்கிசைய நடிப்பதாகத்தான் இருக்கின்றன. இப்போது எங்கள் நாட்டில் ஏராளமாக உள்ள சம்பாஷணை நாடகங்கள் மேலை நாட்டு, முக்கியமாக ஆங்கில நாட்டு, முறையை அநுசரித்தவைதாம். காலஞ்சென்ற ஆறுவது ராம மன்னர் (1910—1925) ஷேக்ஸ்பியரின் பக்தர். அந்த மகா கவியின் நாடகங்களில் சிலவற்றையும் ஷெரிடன், மோலியர், பினெரோ முதலியவர்களின் நாடகங்களில் சிலவற்றையும் அவர் ஸயாம் பாஷையில் தழுவி எழுதியிருப்பதோடு, சொந்தமாகவும் பல நாடகங்கள் எழுதியிருக்கிறார்.

எங்கள் நாட்டில் சினிமாவை நாங் என்றுதான் எங்கள் ஜனங்கள் அழைக்கிறார்கள். நாங் என்பதற்குத் தோல் என்று பொருள். சினிமாவுக்கும் ஸயாமின் நாடகத்துக்கும் மூலப்பிதாவாக இருக்கும் நிழலாட்டப் பொம்மைகள் தோலினாலேயே செய்யப்பட்டதால் சினிமாவையும் நாங் என்று சொல்லிவிட்டார்கள்.

மூலப் பொருள்கள்

முகஸ்துதியும் மதுவும்தான் பிராபல்யத்தின் மூலப் பொருள்கள்.

—எச். எஸ். மெர்ரிமேன்

உயர்தரமான கைக் கடிகாரங்கள்

ஸ்விட்ஸர்லந்தில் செய்யப் பட்டவை. உயர்ந்த வேலைப்பாடுள்ளவை, ஒவ்வொன்றும்மூன்று வருஷங்கள் உத்தரவாதம். படத்தில் காண்பதைவிட அழகானவை. ப்ளாஸ்டிக் ஸ்ட்ராப் அல்லது சங்கிலியுடன் அழகிய பெட்டியில் வைத்து சப்ளை செய்யப்படும்.



No. W—101

பளபளப்பான குரோமியம் கேஸ்
(ஜுவெல் இல்லாதது) ரு. 28/-
உயர்தரம் , 4-ஜுவெல்கள் ரு. 38/-
,, ,, 7 ,, ரு. 40/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 58/-
15-ஜுவெல்கள் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ரு. 68/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 88/-



No. W—102

பளபளப்பான குரோமியம் (ராஸ்கோப் மூவ்மெண்ட்) ரு. 30/-
உயர்தரம் ,, 4-ஜுவெல்கள் ரு. 40/-
,, ,, 7 ,, ரு. 44/-
ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 60/-
15-ஜுவெல்கள் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ரு. 70/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 90/-



No. M—103

பளபளப்பான குரோமியம்
4-ஜுவெல்கள் ரு. 42/-
உயர்தரம் 7-ஜுவெல்கள் ரு. 45/-
,, ரோல்ட் கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 62/-
15-ஜுவெல்கள் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ரு. 72/-
,, ரோல்ட்கோல்ட் (10-வருடம் உத்தரவாதம்) ரு. 92/-

மேல்கண்டவகைகளில் லேடி, ஸைஸிற்கு 12½% அதிகம். பாகிங் போஸ்டேஜ் 0-12-0 தனி. ஒரே சமயத்தில் இரண்டு கடிகாரங்களுக்கு ஆர்டர் செய்தால தபால் செலவு இனும். ஆர்டர் செய்யும்பொழுதும் கடிகாரத்தின் நம்பர் எழுதவேண்டும்.

பயோனீர் வாட்ச் கம்பெனி
போஸ்ட் பாக்ஸ் நம்பர் 11428, கல்கத்தா
ஷோ ரூம்: 318-A சித்தரஞ்சன் அவென்யூ

பொன் விழா வரும்போது

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

நாட்டில் தேக சுகத்தையும் சுபீட்சத்தையும் பரவச் செய்வதில் தொடர்ந்து ஐம்பது வருஷங்களாக நிலையான ஊழியம் புரிந்து வந்திருப்பதில் பெருமை யடைகின்றோம்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி-நகர் . . . மதராஸ்.

EASTERNS 379.

THE UNITED COMMERCIAL BANK LIMITED

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 4-கோடி
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 2-கோடி
ரிசர்வு நிதி	ரூ. 17½-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

ஸ்ரீ. எம். ஏ. இஸ்பஹானி
(வைஸ்-சேர்மன்)

ஸ்ரீ. ரமன்லால் ஜி. ஸாய்யா
(வைஸ்-சேர்மன்)

எல்லா விதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன

பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளன

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

சென்னை கிளைகள்:

310-311, லிங்க செட்டி தெரு	சௌகார்பேட்டை
கே. ஆர். கே. ஐயங்கார்	ஆர். வேணுகோபால்
கிளை மானேஜர்	கிளை மானேஜர்

நாட்டுப் பாடல்கள்

●

டி. என். மஜும்தார்

கிராமியக் கதைகள், புராணக் கதைகள், கிராமியப் பாடல்கள், சிற்பங்கள் முதலியன பூர்வத்தில் வாழ்ந்த மக்களின் அறிவு வளர்ச்சிக்கு அடையாளங்களாக இருக்கின்றன. மனிதனுக்கும் சுற்றுப்புற சக்திகளுக்கும் இடையே உள்ள உறவையும், காட்டு வாழ்க்கையின் உணர்ச்சி உத்வேகம் நிறைந்த தன்மையையும் அந்தப் பாடல்கள் விளக்குகின்றன. ராய் சொல்லுவது போல, அந்தப் பூர்விக மனிதர்களின் அந்தரங்க இருதயத்தின் உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும், முயற்சிகளையும், சௌந்தர்ய ரசனையையும் அந்தப் பாடல்கள் வெளியிடுகின்றன.

இந்தியாவில் நாட்டுப் பாடல்களுக்குக் குறைவில்லை. ஆனால், மனித இனம் வளர்ந்த சரித்திரத்தை நாம் ஆராயத் தொடங்கிய காலத்தில் நாட்டுப் பாடல்களைச் சேகரிக்கப் போதிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த நாட்டுப் பாடல்கள், பற்பல வகுப்பினராகப் பிரிந்து பிற்போக்கான நிலையில் இருக்கும் சுமார் ஒன்பது கோடி மக்களிடையே வழங்கி வந்தன. முதல் முதலாக இந்தப் பாடல்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் சில சமூக சாஸ்திர ஞானிகள்தாம். புரொபஸர் ஜே. எச். ஹட்டன் என்பவரும் ஜே. பி. மில்ஸ் என்பவரும் அஸ்ஸாமில் நாட்டுப் பாடல்களைச் சேகரித்தார்கள். வெர்ரியர் எல்வின் என்பவர் தொண்டர்களிடத்திலும் பைகர்களிடத்திலும் பாடல்களைக் கேட்டு எழுதிக் கொண்டார். சார்லஸ் இ. கோவர் என்பவர் தென்னிந்தியாவிலும், சி. இ. ஆர்ச்சர் என்பவர் சாந்தல ஜாதியினரிடமும் பாடல்களைத் தேடிச் சேகரித்தனர். சமீப காலத்தில் இந்தியாவின் பண்டிதர்களாகவும், சமூக சாஸ்திர ஞானிகளாகவும் உள்ள தினேஷ் சந்திர சென், சந்திர குமார் டே முதலியவர்கள் வங்காளத்திலும், ராம் சரண் தாஸ், ஹர்ஜித் சிங் என்பவர்கள் பஞ்சாபிலும் பாடல்களைத் தேடிச் சேகரித்து நம் நாட்டின் நாட்டுப் பாடல்கள் பிற நாட்டின் நாட்டுப் பாடல்களையும் வென்று விடத்தக்க சிறப்பும் செல்வமும் பெற்றிருந்ததன் அடையாளங்களைக் காட்டியுள்ளார்கள்.

தேவேந்திர சத்யார்த்தி என்ற நாடோடி யாத்ரீகரின் சேகரிப்புகளையும் நாம் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். கடந்த இருபது வருஷ காலமாக அவர் இந்தியா, பர்மா, சிலோன் முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து, சுமார் ஐம்பது பாஷைகளில் உள்ள மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பாடல்களைச் சேகரித்திருக்கிறார். நாடோடிப்

நம் நாட்டில் பள்ளிக்கூடத்தில் கல்விப் பயிற்சி பெறாத நாட்டுமக்களின் கலைஞானத்தின் அளவைக் காட்டும் 'கிராப்' படம்தான் நாட்டுப் பாடல் என்பது. இந்த நாட்டுப் பாடலின் சிறப்பையும், வரவர இது குறைந்து கொண்டுவருவதன் காரணத்தையும் பற்றிக் கூறுகிறார் கட்டுரையாசிரியர். சினிமா பரவி விட்டதும் நாட்டுப் பாடல் குறைந்ததற்கு ஒரு காரணம் என்பதையும் குறிப்பிட வேண்டும். இந்திய இனங்களும் கலாச்சாரங்களும் என்ற புத்தகத்தி லிருந்து.

பாடகர்களும், கிராமியப் பாடல்களைப் பாடுபவர்களும் சொன்ன பாடல்களை யெல்லாம் கவிதை உருவிலும், வசன உருவிலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார். இந்திய நாட்டிலேயே பொதுவாகப் பரவியிருக்கும் உணர்ச்சி உத்வேகங்கள் அந்தப் பாடல்களில் நாதம் செய்கின்றன.

பற்பல ஜாதியினரால் அவர்கள் செய்யும் தொழில் முறையை அநுசரித்துத்தான் நாட்டுப் பாடல்கள் பாடப்பட்டன. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தை ஒட்டிப் பாடப்பட்ட மேற்படிப் பாடல்கள் பலதடவைகள் கைமாறி, தலைமுறை தலைமுறையாகப் பாடப்பட்டு வருகின்றன. நடையிலும் தாளத்திலும் எளிமையுடன் அமைந்த அந்தப் பாடல்கள் சாதாரண மனிதனுடைய உணர்ச்சிகள், நம்பிக்கைகள், அச்சங்கள், சுக துக்கங்கள், விருப்பு வெறுப்புக்கள், மனக்கோட்டைகள், ஏமாற்றங்கள் முதலியவைகளை யெல்லாம் பிரதிபலிக்கின்றன. இந்த உணர்ச்சிகள் மனிதவர்க்கத்துக்குப் பொதுவானவையே.

பற்பல ஜாதி மதஸ்தர்களாலும், பற்பல தொழில் செய்பவர்களாலும், பற்பல சந்தர்ப்பங்களில் நாட்டுப் பாடல்கள் இயற்றப்பட்டவை என்றாலும், பன்மையிலும் ஒருமை தழுவியிருக்கும் இந்தியாவின் கலாசார ஒற்றுமையை அவை வெளியிடுகின்றன. இந்திய மக்கள் பல திறப்பட்டவர்களாக இருந்தபோதிலும், அவர்களுடைய வாழ்க்கை முறை, குண குணங்கள், கலைப் பண்பு முதலியன வெல்லாம் எப்படி ஒன்று போலவே இருக்கின்றன என்பதற்கு நாட்டுப் பாடல்களும் அவைகளுடைய பண்களுமே தக்க சான்றுகள்.

காஷ்மீரத்தில் நாட்டுப் பாடல்கள் படகோட்டிகளால் பாடப்படுகின்றன. திருவாங்கூரில் படகோட்டிகள் பாடும் நாட்டுப் பாடல்களும் இவைகளைப் போலப் பிராபல்ய மடைந்துள்ளன. பஞ்சாப்பில் நாட்டிய விழாக்கள் ஏராளம். அந் நாட்டுக் கித்தா பாடல்கள் என்பவை ஆண் பெண் பாலரின் உடல் அழகால் தூண்டப்பட்ட காதலைப் பற்றியே பாடப்பட்டவை. இந்தப் பாடல்கள் மட்டுக்கு மீறி உணர்ச்சிப் பிரவாகமாகவும் இன்பாநுபவம் அளிப்பனவாகவும் இருப்பதால்தான் குரு நானக் இவற்றை ஆத்மார்த்த இன்பத்துக்கு ஒப்பிட்டார். பஞ்சாப்பில் நூல் நூற்புப் போட்டிகள் அதிகமாக நடக்கும். இரவும் பகலும் விடாமல் போட்டி போட்டு நூற்றுக்கொண்டே இருப்பார்கள். அப்போது பாடல்களையும் இசைப் படுத்திப் பாடுவார்கள். இந்த நூல் நூற்புப் பாடல்கள் ஈரடிப் பாடல்களாக, காதலைப் பொருளாகக் கொண்டவை. அவை வெளிப்படையாகக் கீழ்க்கண்ட முறையில் கருத்தைத் தெரிவிக்கும்.

கனவில் வந்த காதலனைக்
கட்டித் தழுவிவிட்டேன்.
கண் திறந்து பார்க்கையிலோ
காதலனைக் காணவில்லை.

சந்தர்ப்பத்தை ஒட்டியே பாடல்கள் பாடப்பட்டன. அநேகப் பாடல்கள் புது மணம் முடித்த தம்பதிகளையும், கல்யாணம் செய்துகொள்ளப் போகும் பெண்ணையும் பரிகாசம் செய்வனவாக இருக்கும். கிண்டல், கேலி, 'பளிச்' சென்று விஷயத்தைத் தைக்கும்படி சொல்லல், சாவதானமாக முடிவற்று நீளும்

தேவேந்திர சத்யார்த்தி

சம்பாஷணை இந்த முறைகளில் தான் நூல் நூற்கும்போது பாடல்களை அமைப்பார்கள்.

ராஜபுதனம் போர் வீரர்கள் நிறைந்த நாடு. ஆனல், அங்கே வீரர்கள் மட்டும் அல்லாமல், போர்க்களத்தின் வீரதீரங்களைப் பற்றிப் பாடும் கவிராயர்களும் உண்டு.

ரவீந்திரநாத தாகூர் கூறுகிருர்: "ராஜபுதனம் தான் சிந்திய ரத்தத்தைப் பொருளாக வைத்துச் சிருஷ்டித்த இலக்கியத்துக்கு ஈடு இணை கிடையாது. வாழ்க்கையில் நிதரிசனமாகக் காணும் கஷ்டம் பொதிந்த உண்மையைக் கண்டு அதற்கேற்பவும் போர் முரசின் முழக்கத்துக் கிசையவும் பாடப்பட்ட அந்தப் பாடல்களைப்போல் யார்தான் எழுத முடியும்? அவர்கள் பாடிய அந்த ஈரடிப் பாடல்கள், ஆண்மையையும், உத்வேகத்தையும் ஊட்டும். அந்தப் பாடல்கள் இந்தியாவுக்கே பெருமை அளிப்பவையாகும். இன்றும்கூட அந்தப் பாடல்களின் உணர்ச்சி குன்றி விடவில்லை."

வடமேற்கு எல்லைப்புற வாசிகளாகிய பட்டாணியரின் பாடல்களில் காதலும் வீரமும் நிறைந்திருக்கும். தேவேந்திர சத்யார்த்தியால் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கீழ்க்காணும் பாடல் இதற்கு ஒரு தக்க உதாரணம்.

போருக்கெழுந்து விட்டால்
  போர்க்களத்தில் மாய்ந்துவிடும்

வீரருக்குக் கல்லறையோ
  வெய்யதொரு போர்க்களமே!

காதல! உம் போன்ருர்க்குப்
  போர்க்களம்தான் காஷ்மீரம்

பேதைநெஞ்சக் கோழைகட்கப்
  பீடுலகில் ஏது இடம்?

பாரையஞ்சா வீரரெலாம்
  பஞ்சணையில் மாய்வதில்லை

போர்வீரர் நீராடல்
  போர்முகத்தின் ரத்தமன்ருே?

இந்த நாட்டுப் பாடகர்கள் இம் மாதிரியான போர்க்களப் பாடல்களைப் பாடிக்கொண்டு தேச மெங்கும் யாத்திரை செய்வார்கள்.

வங்காளத்தின் நாட்டுப்பாடல்களில் இனிய நாதமும், கற்பனைத் திறனும், சொல்லழகும் நிறைந்துள்ளன. அவற்றை மொழிபெயர்த்து அந்தச் சிறந்த அம்சங்களைக் காட்டிவிட முடியாது.

"வங்காளமே! உன் பொக்கிஷத்தில் உள்ள வைர வைடூரியங்கள் அனந்தம்" என்று பாடுகிருர், மதுசூதன் தத். அந்த வைரங்களைவிடச் சிறந்த அபூர்வமான

வஸ்து எதுவென்ருல், வைரங்களுக் கெல்லாம் சுரங்கமாக இருக்கும் வங்க பாஷையே என்று அவர் கூறுகிருர்.

சாத்திஸ்காரின் காட்டு மனிதர்களின் பாடல்கள் அவர்களுடைய ஆத்மீக மரபைக் கூறுகின்றன. கீழ்க்கண்ட பாட்டு ஒரு கதையைச் சொல்லுகிறது:

பெற்ற தகப்பனே
பெண்டாளும் மாபாவி

ஒற்றைத் தனிவீட்டில்
உடனிருந்தாள் பெற்ற மகள்

தான்பெற்ற பெண்ணவளைத்
தன்மனைவி போல்நடத்திக்

கூன்பட்ட பேய்க் கிழவன்
குடியிருந்தான் ஊரறிய

முதனில் ரகசியமாய்
முடிவிலே அம்பலமாய்

கதைநடத்தி வாழ்ந்தனவே
காமக் கொடும்பேய்கள்

காலம்சில சென்றபின்னர்
கருவானின் மேகங்கள்

ஓலப் புயல், இடியாய்
ஓயாது நீர்கொட்டி

'பட்'டென்று நின்றதுவே;
பாக்கியுள்ள நாளெல்லாம்

பட்டைஉரிக்கும் வெயில்
பயிர் விளைய ஏதுஉண்டோ?

காட்டுப்பிராணி யெல்லாம்
காட்டைவிட்டுப் போயினவே

நாட்டில், குளம் கரையில்
நண்டு மில்லை! மீனு மில்லை!

தின்னக் கிழங்கற்றுத்
தீவாந்தர மாச்சு

சின்னத்தனக் கிழவன்
சிறுக்கி யவளோடு துய்த்த

காமத்தைத் தண்டிக்க இக்
கதிவந்து சேர்ந்ததுவே.

கீழ்க்காணும் பாடல் பிரமாதமாக இருக்கிறது:

தங்கத்தைக் கொண்டு செய்த
பாத்திரம் இது!—நல்ல

தனி வெள்ளி கொண்டு செய்த
பாத்திரம் இது!

எங்கிருந்தோ சேற்றுநீரைக்
கொண்டு வந்து நீ—தங்காய்!

ஏற்றமுள்ள பாத்திரத்தில்
ஊற்றிடல் வேண்டாம்.

இந்தியா ஒரு விவசாய நாடு. இங்கே நீர் வறட்சியும் பஞ்சமும் சகஜமாகப் போய்விட்டன. ஆகவே, மழையை வேண்டிப் பாடும் மழைப் பாடல்கள் எல்லாப் பகுதிகளிலும் ஏராளமாக இருக்கும் என்பது எதிர்பார்க்கப் பட வேண்டிய விஷயம். மழை பெய்யாமல் ஏமாற்றிவிட்டால் குடியானவர்கள் தெருக்களில் மழைப் பாட்டைப் பாடி ஆடிக் கொண்டே போவார்கள். பாட்டு மழையைத் தருவிக்கும் சக்தி பெற்றிருந்தால் எந்தக் காலத்திலோ பூமகளின் புன்னகையாய்ப் பூத்துப் பாலைவனம் எல்லாம் சோலைவனம் ஆகியிருக்கும். ஆனல், இங்கு ஏற்பட்ட நீர் வறட்சி நமக்கு அநேக அருமையான பாடல்களையும், தனி மோஸ்தரான நாட்டியத்தையும் கொடுத்துவிட்டது.

ஜி. கே. செஸ்டர்டன் கூறுகிருர்: "பாங்கிகளில் வேலைபார்க்கும் குமாஸ்தாக்கள் 'உம்மணாமூஞ்சி'யை வைத்துக்கொள்ளாதபடி, குடியானவர்களைப் போல வேலை செய்துகொண்டும் பாடிக்கொண்டும் இருந்தால் பரஸ்பரம் ஒருவருக் கொருவர் உற்சாகமாயிருக்க முடியுமே! குடியானவர்கள் மணிக் கணக்காக வயல்களில் வேலை செய்துகொண்டு பாடுகிருர்களே! ஆனல், இப்போது யந்திரக் கலப்பைகள் வந்துவிட்டதனல் பழைய குடியான வர்க்கத்தின் கூட்டம் குறைந்து கொண்டே வருகிறது; அத்துடன் பழைய நாட்டுப் பாடல்களும் நசித்துவிட்டன."



சென்னை பிரதமர்

மகாத்மாவும், வைஸ்ராய் தம்பதிகளும்

எழுத்தாளர் நேரு

ஸ்ரீமதி சியாங் கை ஷேக்

பொதுவாக, வாதப் பிரதிவாதங்கள் நிறைந்த அரசியல் விவகாரங்களில் பிரதானமான பங்கெடுத்துக்கொண்டிருக்கும் எந்த மனிதரைப் பற்றியும், அவர் நடத்தையைப் பற்றியும் அவருடைய வாழ்நாளிலேயே, மற்ற அறிஞர்களிடையே ஓர் உண்மையான அபிப்பிராயத்தை எதிர்பார்ப்பது கஷ்டமான காரியம். குறிப்பாக, ஒருவர் கொள்கைகளுக்காகப் போராடுகிறவராகவும், கொள்கைகளை விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்து கொள்ளச் சம்மதிக்காதவராகவும் இருந்தால், மேலே சொன்ன அபிப்பிராயம் அவர் விஷயத்தில் நன்கு பொருந்திவிடும். அவர் கீழ்க்காணும் இரண்டு வழிகளிலும் கஷ்டப்பட நேரிடும். அவருடைய பரிவாரங்கள் அவரை அதிமானுஷ்ய பீடத்தில் தூக்கி வைப்பார்கள். அதே சமயத்தில் அவருடைய அரசியல் விரோதிகள் குற்றம் குறைகள் சொல்லித் தூஷிப்பதன் மூலம் அவருடைய அந்தஸ்தைத் தாழ்த்தி இறக்க முயலுவார்கள்.

நேருவை ஓர் அரசியல் ஞானியாகவோ, அல்லது அரசியல் தலைவராகவோ சித்திரித்து எழுதப் புகும் ஒருவரை, மேலே காட்டிய இரண்டு உண்மைகளும் தெரிந்தோ தெரியாமலோ பீடித்து விடுவது நிச்சயம். நேருவைப் பற்றி அவருடைய அரசியல் விரோதி ஒருவர் எழுதினல், அவரைத் தவருன வழியில் திருப்பப்பட்ட, ஓர் ஆபத்தான கைகாரர் என்று வருணிப்பார். அவரைப் பாராட்டும் ஒருவர் எழுதினலோ, தம் உயிரையே இந்திய சுதந்தரத்தின் பலிபீடத்தில் அர்ப்பணம் செய்த தேசத் தியாகி என்று கூறுவார்.

ஆனலும், நேருவின் நண்பர்களும் விரோதிகளும் சந்தித்துக் கொள்ள ஒரு பொது அரங்கம் இருக்கிறது. ஆங்கிலத்தைத் தாய்ப் பாஷையாகக் கொண்டவர்கள் எழுதுவது போல, அந்தப் பாஷையை அவ்வளவு சௌகரியமாகவும், சுகமாகவும் கையாளும் ஒருசில கீழ் நாட்டு எழுத்தாளர்களில் நேருவும் ஒருவர் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம். யார் யாருடைய ஆங்கிலப் பிரயோகங்கள் நன்ருக இருக்கின்றன என்று உதாரணங்கள் காட்டினல், அது மற்றவர்களின் வீண் பொருமையைத் தூண்டிவிட்டுவிடும். ஆங்கில நடையைக் கையாண்டு வெற்றி பெற்றவர்கள் மிக மிகக் குறைவு. இந்திய, சீன பாஷைகள் பலவற்றில் ஒன்றைத் தாய்ப் பாஷையாகக் கொண்டு, ஆங்கிலத்திலும் தன்னிகரற்று எழுதுபவர்களை ஒரு கையின் விரல்களாலேயே எண்ணிவிடலாம்.

இலக்கியப் பிராபல்யம் அடைய விரும்புகிறவர்கள், தாம் எழுதும் ஒவ்வொரு வரியிலும், சொற்களின் உணர்ச்சியைத் தெரிந்து பயன்படுத்தி, அவைகளை வாக்கி

இந்தக் கட்டுரை ஆசிரியை சீனத் தலைவர் சியாங் கை ஷேக்கின் மனைவி; ஆங்கில அறிவு நிரம்பப் பெற்றவர்; தம் கணவருக்கு மொழிபெயர்ப்பாளர். உலகச் சரிதத்தில் இவரைப் போன்ற பெண்மணிகள் ஒரு சிலரைத்தான் பார்க்க முடியும். அவர் எழுதிய இந்தக் கட்டுரை, "நேரு உங்கள் அண்டை வீட்டுக்காரர்" என்ற புத்தகத்திலிருந்து எடுத்தது.

யங்களாகக் கோக்கும் திறன் படைத்திராவிட்டால், அவர்கள் வெகு சீக்கிரத்தில் மதிப்பு இழந்துவிடுவது திண்ணம். அப்படி நன்ருக எழுதினல்தான் வாசகர்களுக்கு குதூகலமாக இருக்கும். நேருவுக்கு இந்தத் திறமை இருப்பதுடன், குற்றத்தைச் சொல்லி விவகாரம் பண்ணவும், சமாதானம் சொல்லிச் சாந்தப்படுத்தவும், கோபாக்கினி கொதிக்க இடி முழக்கம் செய்யவும், கவிதையைப் போன்ற இனிய நாதத்துடன் செவிக்குச் சுகமளிக்கவும் ஏற்ற சொற்களைக் கையாளும் திறமையிலும் நேருவை யாரும் மிஞ்ச முடியாது. நேருவின் அரசியல் அபிப்பிராயங்களைக் கொஞ்சம்கூடப் பிடிக்காதவர்களிலும், ஒளிவு மறைவற்று இருப்பவர்கள் சந்தோஷத்துடன் முன் வந்து, ஆங்கில இலக்கியக் கோவிலில் நேருவுக்கு ஒரு தெய்வஸ்தானம் உண்டு என்று உரிமை கொண்டாடுகிருர்கள்.

நேருவை ஓர் எழுத்தாளர் என்ற ரீதியில் நான் மதிப்பிட்டிருப்பதைப் போல, நல்ல ஆங்கிலத்தை வாசிப்பதில் இன்பம் காணும் எல்லோரும் மதிப்பிட்டிருக்கிருர்கள். ஒரு நல்ல வைரத்தின் பிரதானமான பட்டையை நேருக்கு நேர் நின்று பார்க்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றிப் பெருமகிழ்ச்சி. அந்த வைரத்தின் இந்தக் கோணத்தில் அநேக உண்மைகள் புலனுகின்றன. அரசியல் போராட்டத்தின் கூச்சலும் குழப்பங்களும் செத்தொழிந்து, எல்லாம் பழைய ஞாபகமாக மாறும்போது, இலக்கியப் பிராபல்யம் மட்டும் நீடித்துக்கொண்டிருக்கும். ஆகவே, ஆங்கில இலக்கிய வானில் நேரு ஒரு நக்ஷத்திரமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பார் என்று சொல்லிவிடுவது, முட்டாள்தனமான ஒரு துணிவல்ல. ஆங்கில பாஷை உள்ள அளவும் அவர் நிச்சயம் ஒளி வீசிப் பிரகாசிப்பார்.

குழப்பங்களுக்கும் நாசகரமான நிகழ்ச்சிகளுக்கும் நடுவே உபதேசம் செய்யும் சோகம் தேங்கிய ஒரு தீர்க்கதரிசியாக அவர் இல்லை. உற்சாகம், ஹாஸ்யரசம், சொந்த உணர்ச்சியை வெளிக்குக் காட்டாத தன்மை எல்லாமே அவர் அலசி ஆராயும் எந்த விஷயத்திலும் இடம் பெற்றுவிடுகின்றன.

உயர்ந்த பண்பும், தம் சகாக்களிடத்தில் கனிந்த அன்பு காட்டும் நாகரிகப் பான்மையும் நிறைந்த அவர், எப்படி எப்படியெல்லாம் இருக்கிருரோ அப்படியேதான் எழுதுகிருர். உண்மைகளையும், மனிதர்களையும் அவர் எப்படிக் காண்கிருரோ அப்படியேதான் விமரிசனம் செய்கிருர். அநியாயமும், முட்டாள்தனமும் அநாவசியமானவை என்று கருதி அப்படிப் பட்ட தன்மைகள் உள்ளவர்களைப் பார்த்து வருந்துகிருர். மனிதர்கள் ஒரு நல்ல எதிர்காலத்தைச் சமைக்க முயன்ருல், அது நிச்சயம் கிட்டும் என்ற விஷயத்தில், அவர் ஒரு நிமிஷம் கூட நம்பிக்கை இழந்ததில்லை. சிந்தனையில் மூழ்கி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டிருக்கும் சாதுவைப்போ லில்லாமல், உற்சாகமாகவும், சுதந்தரமாகவும் இருக்கிருர் நேரு. நிதரிசனமாக விஷயத்தை விளக்கும் அழகான பாஷையில், தாம் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லுகிருர். ஆனுலும், உள்

ளுக்குள்ளேயே எதற்கும் ஓர் அளவு வைத்துக்கொண் டிருக்கிறார். அந்தச் சுய கட்டுப்பாட்டினால் இன்னும் கொஞ்ச அதிக பலன்தான் கிடைக்கிறது. ஏனென்றால், அந்தப் பண்பு தர்க்க வாத ஞானத்தால் நிதானப்படுத்தப்பட்ட ஒன்றாகும். மேலும், எதிலும் ஓரளவோடு நிற்பது, சொல்ல வந்ததைத் துல்லியமாக விளக்கிவிடும்.

ஆங்கிலத்தில் எழுதுபவர்களில் தலைமை வகிக்கிறார் நேரு என்ற என் அபிப்பிராயத்தைச் சான்றுகளுடன் தெரிவித்திருக்கிறேன். அவரைச் சாதாரணமாக 'நேரு' என்று மாத்திரம் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். பெரிய மனிதர்களின் பெயரோடு கௌரவப் பட்டங்களைச் சேர்த்து எழுதுவது கிடையாது. அவர் அரசியல் சுதந்தரத்துக்குப் பாடுபட்டது இந்தியாவுக்கு நிரந்தரமாகப் பயனளிக்கும். உலகத்துக்கோ அவர் எழுத்துக்கள் நிரந்தரமாகப் பயனளிக்கும்.

அரசியல் தலைவர்களின் செல்வாக்குக் காலத்தால் அழிந்து விடக் கூடியது. ஆனால், ஆக்கம் தேடும் சிந்தனையாளராகிய நேருவால் எழுதி வைக்கப்பட்ட அநுபவங்கள், முயற்சிகள், வெற்றிகள் எல்லாம் அவருடைய காலத்திலேயே வாழ்கின்றவர்களின் கருத்துக்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், மனித சரித்திரத்திலேயே அழிக்க முடியாத ஒரு முத்திரையைப் பொறித்து விடும். மனிதன் என்ற முறையில் நேரு என்ன சேவை செய்தார், எப்படி வாழ்ந்தார் என்பவற்றை அவருடைய எழுத்துக்களின் மூலம் வருங்காலச் சந்ததிகள் மதிப்பிட்டுக்கொள்ள முடியும்.

*

சட்டப்படிதான்

அமெரிக்காவில் ஓர் உயர்தரப் பள்ளிக்கூடத்துத் தலைமை ஆசிரியரா யிருந்த ஹோரேஸ் டட்டன் டார்ப் மிகவும் கடுமையான பேர்வழி. பள்ளிக்கூடத்தின் சட்டதிட்டங்களை விட்டு இம்மி பிசகாமல் அமல் நடத்துபவர். ஆகவே, பையன்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ரஜா வாங்கிவிட முடியாது. ஆனால், அவருடைய சகோதரரின் மகன் வந்து ஒருநாள் ரஜா கேட்டான். தன் தகப்பனார் அமெரிக்கப் பிரசிடெண்ட் பதவியை ஏற்றுக்கொள்ளும் விழாவுக்குப் போக அநுமதி கேட்டான். அநுமதியும் கொடுத்துவிட்டார். இப்படிச் செய்தது பழைய சட்டதிட்டங்களுக்கு முரண்பட்டு அல்ல. ஒரு புதிய சட்டத்தைச் சிருஷ்டித்து அதன்படிதான் ரஜா கொடுத்தார். அந்தச் சட்டம் இன்னும் அந்தப் பாடசாலையில் அமலில் இருந்து வருகிறது. அந்தச் சட்டமாவது :

அமெரிக்கப் பிரசிடெண்ட்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எவருடைய மகனாக இருந்தாலும் அவன் தன் தகப்பனாரின் பதவியேற்ற விழாவுக்குப்போக அநுமதிக்கப்படுவான்.''

—ஓர் அமெரிக்கப் பத்திரிகை

பெரிய மனிதன் !

ஒரு தண்ணீர்க் குட்டத்தின் குறுக்காக நடந்து அதைக் கடக்காமல், அதைச் சுற்றிக்கொண்டு செல்லும்போது ஒரு சிறுவன் பெரிய மனிதனாகி விடுகிறான்.

—ஹாவ்லியர் கிவானியன்

ருஷ்யர்களின் காதல் முறை

ஜீன் எப்பெல்

மாஸ்கோவில் இருக்கும் பழக்க வழக்கங்களைக் கண்டு திகைப் படைந்த ஒரு பிரெஞ்சுக்காரன் என்கிற முறையில், ருஷ்யர்களு டைய காதல் விவகாரம்தான் எனக்குப் புரியாத விஷயமாக இருக்கிறது.

பிரெஞ்சுக்காரர்களாகிய நமக் குப் பழக்க மில்லாத ஒழுக்கச் சிறப்பில் மாஸ்கோ தலை சிறந்து இருக்கிறது. ருஷ்யாவில் இருந்த காலம் முழுவதிலும், ஒரு முறை கூட நான் ஓர் ஆணும் பெண் ணும் ரயில்வே ஸ்டேஷனிலோ, விமான நிலையத்திலோ பகிரங்க மாகத் தழுவி முத்தமிட்டுக் கொண்டதைப் பார்த்ததே கிடை யாது. மற்றத் தேசங்களில் மிக மிகக் கண்யமானது என்று சொல்லப்படும் நகரத்தில் கூட இது சர்வ சகஜமான ஒரு காட்சி.

மாஸ்கோவில் இளம் காதலர் கள், கல்யாண மாகி எத்தனையோ வருஷங்களான தம்பதிகளைப் போலக் கையைக் கோத்துக் கொண்டு வெகு அமைதியாக உலவுகிருர்கள். காலினின் கிராட் விமான நிலையத்தில், ஒரு கையை இழந்திருந்த ஒரு சோல் ஜரை வழியனுப்பிக்கொண் டிருந்த ஒரு பெண்ணைப் பார்த் தேன். அவர்கள் ஒருவர்மீதொரு வர் அளவற்ற காதல் கொண்ட வர்கள். இது அவர்களுடைய கண்களி லிருந்து தெரிந்தது; காரியத்தி லிருந்து அல்ல. அவர் கள் ஒருவரை யொருவர் மௌன மாகப் பார்த்துக்கொண்டார் கள்; பிறகு, நாணத்துடன் மற் றப் பிரயாணிகளை நோக்கினர் கள். அவர்களுக் கிருந்த சங்கட மான நிலையில் கையைக்கூடக் கோத்துக்கொள்ளவில்லை. பிரி யும் நேரம் வந்தபோது, ‘விடை பெறும் முத்தம்’ கூட அளித்துக் கொள்ள வில்லை. அந்தப் பெண் தன் கைப் பையைத் திறந்து ஓர் ஆப்பிளைத் தன் காதலனுக்குப் பரிசாக அளித்தாள். அவனே, தன் கையாலேயே எங்கோ பறித்து வைத்திருந்த ஒரு பூச் செண்டைப் பதிலாகக் கொடுத் தான்.

அந்தப் பெண் என்னுடன் விமானத்தில் வந்தாள்; நான் சில சாக்கலேட்டுகளும் சிகரெட்டும் அளித்தபோது, வேண்டா மென்று மறுத்துவிட்டு, துயரத் துடன் அந்தப் பூச் செண்டையே பார்த்துக்கொண் டிருந்தாள்.

மாஸ்கோவில் இரண்டு வாரம் இருந்தேன்; எங்கும் இதே அடக்கத்தையும், நாணத்தை யும் கண்டேன். அநேகமாக, உலகத்தின் எல்லா நாடுகளிலும் ஓர் ஆணும் பெண்ணும் தெருவில் சந்தித்தால், கண் ஜாடையைப் பரிமாறிக்கொள்ளுவார்கள். ஆனல், மாஸ்கோவில் இது கிடை யாது. அங்கேயிருக்கும் பெண், தன்னை ஓர் ஆடவன் கவனித்தால் அதை லட்சியம் செய்ய மாட்

ருஷ்யர்களுடைய பொருளாதார, அரசியல் விவகாரங்கள் தாம் உலகத்துக்குப் புதுமையாக இருக்கின்றன வென்ருல், அவர்களுடைய காதல் விவகாரமும் புதுமையாகவே இருக்கிறது. காதல் கேளிக்கைகளில் கரைகண்ட பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒருவர் தம் அநுபவத்தை இக் கட்டுரையில் கூறுகிருர். டை வெல்ட்வோஷ் பத்திரிகையில் வெளிவந்ததன் சாரம்.

Godrej 'CHAVI' BRAND

கோத்ரெஜ் சோப்புகளின்

சாவிமார்க்

நாணயமான விலைகள்

ஒவ்வொரு சோப்பின் நியாயமான சில்லறை விலை, அதனுடைய சித்திரத்தின் கீழ் குறிக்கப்பட்டிருக்கிறது. (சுங்கம் 'ஆக்டிராய்' அல்லது 'டர்மினல்' வரி, வேறு ஏதேனும் வரிகள் கட்டவேண்டிய இடங்களில் விலைகள் சற்று அதிகமாக இருக்கும்). உப சாமான்களின் அகவிலை ஏற்றத்தினால் அநேகமாய் 10-4-1947 முதல் பெரும்பாலான சாமான்களின் விலையை நாங்கள் மிகவும் வருத்தத்துடன் உயர்த்தும்படி நேரிட்டிருக்கிறது.



நெ. 1—11 அணா.



நெ. 2—8½ அணா.



'வத்னி'—6 அணா.
'வத்னி' (சிறிய சைஸ்)-1¾ அணா

ஸாண்டல்—7 அணா.

லிம்டா (வேப்)—7 அணா.

கஸ்—7 அணா.

டர்கிஷ் பாத்—4½ அணா.



ஷேவிங் ஸ்டிக்
(கார்டன்)—7½ அணா.
விலைகளில் மாறுதலில்லை
ஷேவிங் ஸ்டிக்
(தகர டப்பா)—10 அணா.

ஷேவிங் 'ரவுண்டு'
4½ அணா.
விலையில் மாறுதலில்லை.

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்.

தாவர எண்ணெய்களால் 'டாய்லெட்' (ஸ்நான) சோப்புகளை

முதல் முதல் இந்தியாவில் செய்தவர்

அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா :—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக்குத் தலை சிறந்த மருந்து. நரை மயிரையும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7-0-0

குஷ்டம், வெண்குஷ்டம் :—இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைதியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3-0-0

நரை மயிர் நிவாரணி :—ஆயுர் வேத முறையால் தயார் செய்யப்பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரை மயிர் கொஞ்சமாக இருந்தால் ரூ. 2-8-0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ. 3-8-0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ. 5-0-0

N. B. பார்சலில் எங்கள் பார்மஸியின் பெயர் இல்லா விட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார் :

பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன். குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்குகிறது. குளித்த பிறகும் கூடத் தைலத்தின் மணம் போவதில்லை. இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரை மயிருக்கு இது மிகவும் உபயோகமானது.

SHRI AYURVEDIC PHARMACY,
P. O. No: 36, Katrisari
(Gaya), India

ஆஸ்துமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூல காரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டைக் கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப் பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனு பஜார்.
2. அமிருத் ரத்னகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ, கெமிஸ்ட்ஸ் &, ட்ரக்கிஸ்ட்ஸ், கோஷாஞ்சேரி.

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

டாள்; அல்லது லட்சியம் செய்வ தாகக் காட்டிக்கொள்ள மாட் டாள். நான் எந்தப் பெண்ணை யாவது வழக்கத்தைவிடச் சற்று அதிக நேரம் கவனித்துப் பார்த் தால், தன் முகத்தில் ஏதாவது விகாரம் இருக்கிறதோ என்று அந்தப் பெண் பயப்பட்டுவிடு வாள்!

மாஸ்கோவில், சாதாரணமாக ஒரு பார்க் பெஞ்சியில் ஒரு பெண்ணுக்குப் பின்னல் ஓர் ஆடவன் உட்கார்ந்தால், அந்தப் பெண் எழுந்து வேறு இடத்துக் குப் போக முயலமாட்டாள். அந்த ஆண்மகன் ஏதாவது 'சரச கேளிக்கை'களுக்கு ஆயத்தம் செய்வான் என்று அவள்—அந்த நேரம் நிலவு காயும் இரவா யிருந் தால்கூட—எண்ணுவது கிடை யாது. அவளிடம் மணி என்ன என்று கேட்டாலும் சரி, அல்லது பருவ நிலையைப்பற்றிப் பேச்சு எடுத்தாலும் சரி, உங்கள் மனத் தில் வேறு ஏதோ எண்ணம் இருக்கிறது என்று அவள் கருதவே மாட்டாள். "மணி பதினொன்றே முக்கால்; நேற் றைய இரவைவிட இப்பொழுது பத்து டிகிரி உஷ்ணம் கூட இருக் கிறது போலத்தான் தோன்று கிறது" என்று பளிச் செனப் பதிலளிப்பாள்.

அவ்வளவுதான்; இதற்குமேல், நீங்கள் திடீரென்று, இன்னும் கொஞ்சம் 'சொந்த' விவகார ரீதியில் பேசத் தொடங்கினுல், அதிலிருந்து 'விஷய'த்தை ஊகித் துக்கொள்ள அவளுக்குத் தெரி யாது. அப்படி யிருந்தும், நீங்கள் அவர்களுடைய ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப் பேச ஆரம் பித்தால், அதே ஆவலுடனும் அமைதியுடனும் சம்பாஷிப்பாள்.

மாஸ்கோ ஆடவர்களும் பெண் களைப்பற்றி அவ்வளவாகச் சிரத்தை கொள்வதில்லை. இது ஏனென்று எனக்குப் புரியவும் இல்லை. ஏனெனில், அவர்களில் பலர் அழகாகவும், தேகக் கட்டு டனும், கவர்ச்சிகரமான தோற் றத்துடனும், வனப்பு மிக்க கூந்தலுடனும் இருக்கிறுர்கள். ஆனுல், இந்த ஆண்கள் இத்த கைய யோக்கியதாம்சங்களைக் கவனிப்பது கிடையாது.

ருஷ்யாவில் விமானத்தில் ஏறிய போது, அங்கே பல சோல்ஜர்கள் இருந்தார்கள்; அவர்களிடம் என்னிட மிருந்த பல அமெரிக்கப் படச் சஞ்சிகைகளைக் கொடுத் தேன். அவர்கள் அவைகளை வாசிக்கும்போது கூர்ந்து கவ னித்து வந்தேன். செய்திப் படங் களை மிகச் சுவாரஸ்யமாகப் பார்த்துப் படித்தவர்கள், ஸ்நான உடை தரித்த அமெரிக்கப் பெண் களின் முழுப் பக்கப் படங்களைக் கண்டதும் அருவருப்படைந்தார் கள். ஒரு பார்வைகூடப் பார்க் காமல், மேலே பக்கங்களைப் புரட்டிக்கொண்டு போய்விட் டார்கள். கடைசியில் ஒருவன், மிகுந்த மகிழ்ச்சியுடன் எதையோ பார்த்து ஆரவாரிப் பதைக் கண்டேன். மற்றவர் கள் அவனைச் சூழ்ந்துகொண் டார்கள். எல்லோரும் தமாஷா கச் சீட்டி யடித்துக்கொண்டே, மிகுந்த ஆச்சரியத்துடன் பேச ஆரம்பித்தார்கள்.

என்னுல் அந்தப் பக்கத்தைப் பார்க்க முடியவில்லை. இருந்தா லும், எந்த மாதிரியான பெண் ணைப் பார்த்து அவர்கள் அவ் வளவு சந்தோஷப்படுகிறுர்கள் என்பதை அறிய ஆவல்கொண்டு, எழுந்து நின்று அவர்கள்

தோளுக்குப் பின்னால் நின்று பக்கத்தைப் பார்த்தேன்.

அது என்ன தெரியுமா?— ஒரு முழுப் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த ஒரு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலையின் படம்!

ருஷ்யர்கள் இப்படி இருப்பதற்குக் காரணம், ஒருகால் ருஷ்யப் பெண்கள் ஆடவர்களுக்குச் சரி சமானமாக இருக்கிறார்கள் என்பதாகவும் இருக்கலாம். புருஷர்கள் செய்யும் எல்லா வேலைகளையும் அங்கே பெண்களும் செய்கிறார்கள். பஸ் ஓட்டுகிறார்கள், போக்கு வரத்துக்கு வழி காட்டுகிறார்கள். தோட்டி வேலை கூடப் பார்க்கிறார்கள்.

ஆண் செய்யும் வேலையைச் செய்வதனால், அவர்கள் அடக்கமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். முந்திப் பிந்தி அவர்களுக்கு வழி காட்ட யாரும் இல்லாததால் தானோ என்னவோ, அவர்கள் தங்களுடைய இனப் பெருமையைப் பகட்டாக வெளிக்குக் காட்டிக்கொள்ளுவதும் இல்லை. மாஸ்கோவில் நடந்த ஒரு கலைக் கண் காட்சியில் ஏறக் குறைய 2000 நவீனப்படங்கள் இருந்தும், நிர்வாணப் படம் ஒன்றுகூட இருக்கவில்லை என்பது இதற்கு ஓர் உதாரணம்.

ஒரு முறை, 'ஏடன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும்' இருப்பதைப் பற்றி நான் வரைந்திருந்த சிற் சில படங்களை மாஸ்கோவில் நான் தங்கி யிருந்த ஓட்டலின் நிர்வாகியான ஓர் அம்மாளிடம் காட்டினேன். (ஆதாமும் ஏவாளும் ஆகிய மனித வர்க்கத்து முதல் தம்பதிகளின் படங்கள் நிர்வாணமாகவே தீட்டப் பட்டிருக்கும்.—ஆசிரியர், சக்தி) மிகத் தூஷணையாக அந்தப் படங்களை என்னிடம் தூக்கி எறிந்துவிட்டு, "இந்தாருங்கள் உங்கள் படங்கள்! இந்த மாதிரியான ஆபாசக் குப்பைகள் எங்களுக்குக் கொஞ்சமும் பிடிக்காது" என்று முகத்தில் அறைந்தாற் போல் பேசினாள்.

எல்லாவற்றிலும் மிக மிதமான சுபாவமுடையவன் நான்; அந்தப் படங்களோ கொஞ்சமும் கெடுதலானவை அல்ல. பாரிஸில் இருக்கும் மணமாகாத என் கிழ அத்தையிடம் இவைகளைக் காட்டியிருந்தால், அவள் கொஞ்சமும் வெட்கப்பட்டிருக்க மாட்டாள். என்னுடைய ருஷ்ய நண்பர்கள், அந்த ஓட்டல் அம்மாள் நிரம்பவும் அடக்கமான சுபாவம் உடையவள் என்று கூறிய பின்னரே, எனக்குச் சற்று அமைதி ஏற்பட்டது.

ஓர் அந்நிய நாட்டான் அழகான மாஸ்கோ பெண்ணொருத்தியுடன் பழக இச்சிப்பது முடியாத காரியம் என்பது இதன் மூலம் நன்கு தெரியும். பாரிஸில் நமக்குப் பழக்கமான காதல் விவகாரத்துக்கும் இதற்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. இங்கே ஒரு பெண்ணை உங்களுடன் உலவ அழைத்துச் செல்லுவதோ, ஓட்டலில் அவளுக்குக் காபி வாங்கிக் கொடுப்பதோ நடவாத காரியம்; அந்தப் பெண் பிரமாதமாகக் கோபித்துக் கொண்டுவிடுவாள்.

மாஸ்கோ பெண்ணுக்கு நீங்கள் ஏதேனும் பரிசு அளித்தீர்களானால், உங்களுக்குப் பதிலுக்கு ஏதாவது ஒரு சாமான் கிடைக்காமற் போகவே போகாது. இந்த வேலை ரஷ்யாவில் எங்குமே பலிக்காது. பல வருஷங்களுக்கு முன் நான் மாஸ்கோவில் இருந்தபோது, ஒரு பெண்ணுக்கு லேவண்டர் சாராயப் புட்டி யொன்று அளித்

தேன். அதை நான் பாரிஸி லிருந்து கொண்டு வந்திருந்தேன். மறு நாள் எனக்கு அந்தப் பெண் ஒரு கூடை ஆரஞ்சுப் பழங்களைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

இந்த அதிசயிக்கத்தக்க நடத்தை, ருஷ்ய ஆண்கள் எல்லோரையும், ருஷ்யப் பெண்கள் அனைவரும் இப்படியே இருப்பார்கள் என்று எண்ண வைத்துவிட்டது. இந்த நடத்தைக்கு மாருக நடப்பவர்களைக் கண்டால் அவர்களைப் பற்றி எதிர்பாராத விதத்தில் ருஷ்யர்கள் முடிவு கட்டி விடுகிருர்கள்.

இரண்டொரு வருஷங்களுக்கு முன் வியன்னுவில் நடந்த ஒரு சம்பவம் இதை நன்கு விளக்கும். பிரெஞ்சுக்காரர்கள் சில ருஷ்ய அதிகாரிகளையும், சில பிரெஞ்சுப் பெண்களையும் ஒரு விருந்துக்கு அழைத்திருந்தார்கள். மற்றப் பிரெஞ்சுப் பெண்களுடன் ஒப்பிட்டால், வந்திருந்த பெண்கள் அப்படியொன்றும் அழகானவர்கள் என்று சொல்ல முடியாது. கண்களைச் சுழற்றிக்கொண்டு, நாணத்துடனும் லஜ்ஜையுடனும் பழகும் அந்தப் பெண்களை ருஷ்யர்களால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுடைய கண் பார்வையை அவர்கள் மிக விபரீதமாக அர்த்தம் செய்துகொண்டார்கள்.

விருந்து முடிந்தது; பிரெஞ்சுப் பெண்கள் தாங்கள் தங்கியிருந்த வீடுகளுக்கு ருஷ்யர்கள் வர வேண்டுமென்று சொல்லி அழைத்துப்போய், அங்கே 'சும்மா' விடை கொடுத்து அனுப்பியதும், ருஷ்யர்களுக்குப் பெருத்த கோபமும் ஏமாற்றமும் ஏற்பட்டன. ஏனெனில், அந்தப் பெண்களின் கண் ஜாடைகளைப் பார்த்த ருஷ்யர்தங்களை அவர்கள் உள்ளே அழைத்துக்கொள்ளுவார்கள் என்று எதிர்பார்த்தனர்!

ருஷ்ய அதிகாரிகள் இந்த விஷயத்தைப் பிரமாதப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள்; பிரெஞ்சுப் பெண்கள் தங்களை ஏய்த்துவிட்டதாகவும், முட்டாள்களாக அடித்துவிட்டதாகவும் புகார் செய்தார்கள். இந்த விவகாரம் ஓர் அரசியல் பிரச்னையாக உருவெடுப்பதற்கு முன்னுல், நல்லவேளையாக, திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டது.

✲

புதுமாதிரி வேலை நிறுத்தம்

சீனுவிலுள்ள ஷாங்ஹாய் என்னும் நகரில் மோட்டார் கண்டக்டர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக ஒரு புதுமாதிரியான வேலை நிறுத்தம் செய்தனர். மோட்டார்களை வழக்கம்போல ஓட்டினுர்கள். ஆனல், டிக்கட் வசூல் பண்ணவே இல்லை. இனமாக மோட்டார் ஓடும் செய்தி யறிந்த மக்கள் கூட்டம் கூட்டமாக மோட்டாரில் ஏறத் தொடங்கி விட்டார்கள். இதன் காரணமாக, சீனுவிலுள்ள பிரெஞ்சு ரயில்வேக் கம்பெனிக்கும் மோட்டார்க் கம்பெனிக்கும் ஒரே நாளில் பதினைந்து கோடிச் சீன டாலர்கள் நஷ்டமாய்விட்டது. —ரீடர்ஸ் டைஜஸ்ட்

வாசிக்கவில்லை......

மில்வாக்கி என்ற ஊரில் ஒரு 'குருட்டு'ப் பிச்சைக்காரனை போலிஸ்காரன் ஒருவன் கைது செய்தான். அந்தக் 'குருடன்' ஒரு பத்திரிகையை வாசித்துக்கொண் டிருப்பதைப் போலிஸ்காரன் பார்த்துவிட்டான். பிச்சைக்காரன், "நான் வாசிக்கவில்லை. சும்மா, படம் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்" என்ருன்! —கார்டனர்

அழகிய கூந்தல்

‘லக்ஷ்மி’

‘மாகந்தமும் மகரந்தமும் அளகம் தரும்’ என்று சீதையின் கூந்தலை வருணிக்கிறார் கம்பர். நம் நாட்டில் பண்டைக் காலத்தில், அகரம், ஏலம், அகிற்புகை முதலிய வாசனைப் பொருள்களால் பெண்கள் கூந்தலுக்கு நறுமணம் ஊட்டினர். இப்போதும் பெண்கள், (ஆண்களும்கூட!) வாசனைத் தைலங்களைத் தலையில் தேய்த்துக் கொள்ளுகின்றனர். இந்த நவீனத் தைலங்களால் ஏற்படும் பலாபலன்களையும், கூந்தலை நல்ல முறையில், வைத்துக்கொள்ளும் முறையையும் இக் கட்டுரை சொல்லுகிறது.

‘மன்மதன் இளவேனில் காலம் முடிந்ததும், சோலைகளை விட்டுப் பெண்களின் கூந்தலைத் தன் இருப்பிட மாக்கிக்கொள்ளுகிறான்’ என்று கவி காளிதாஸர் புகழ்ச்சியாகக் கூறியிருக்கிறார். கார் மேகம், கரு நாகம், அலையெனச் சரிந்துநின்ற கருங் குழல் என்றெல்லாம் கதாசிரியரின் வர்ணனைகளுக்குள் அகப்பட்ட பெண்களின் கூந்தல் அவர்களுடைய சௌந்தர்யப் பொக்கிஷம் என்பதில் தடையென்ன? பெண்கள் தங்களது அழகுப் பொக்கிஷத்தைப் பாதுகாக்கப் பல்வழியிலும் முயலுவது இயற்கையே.

தலைமயிரிலிருந்து தேகத்தின் ஆரோக்கியத்தைக் கூறிவிடலாம் என்று புராதன வைத்தியர்கள் கருதினார்கள். வாசனைப் பூச்சுக்களும், வர்ண மெழுகுகளும், செயற்கை நெளிகளும் மலிந்து கிடக்கும் இக் காலத்தில், கூந்தலைப் பார்த்துவிட்டு ஒரு ஸ்திரீயினுடைய வயசையோ ஆரோக்கியத்தையோ நிச்சயமாகச் சொல்லிவிட முடியாது!

சதுர அங்குலத்திற்கு 1000 என்ற கணக்கில் சராசரி 120,000 ரோமங்கள் தலையில் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். தலை மயிருக்கு, இழுத்தால் சற்று நீளும் குணம் இருப்பதனால்தான், சட்டென அறுந்து போவதில்லை. தலையிலிருக்கும் எல்லா ரோமமும் ஒரே நீளத்தில் இருப்பதில்லை. நெற்றி, காது ஓரங்கள் இவைகளில் உள்ளன குட்டையாக இருப்பதைக் கவனித்திருக்கலாம். இரண்டிலிருந்து ஆறு வருஷங்கள்தாம் ரோமத்தின் ஜீவியகாலம். ஆறு வருஷங்கள் ஆனதும் தாமே உதிர்ந்துவிடுகின்றன. அதற்குள் புதிய ரோமங்கள் மாசம் முக்கால் அங்குலம் என்ற கணக்கில் வளர்ந்துகொண்டு வருவதால், கூந்தலின் அழகு குறையாதிருக்க ஏதுவாகின்றது. பத்துப் பன்னிரெண்டு அங்குல நீளம் வளர்ந்த பின் ரோமம் மாச வளர்ச்சியில் அதிக உற்சாகம் காட்டுவதில்லை. ஆரோக்கியமுள்ள ஸ்திரீயின் கூந்தல் குறைந்தது 26 அங்குலம் நீளமாவது இருக்க வேண்டும்! கழுத்துப் படியை விட்டு இறங்காத காலேஜ் நாரிமணிகளின் கூந்தலைப் பார்த்தால் அவர்களின் தேக ஆரோக்கியம் புரியவில்லையா? படிப்பிலே மூழ்கிவிடும் அவர்களுக்குக் கூந்தலைப் போஷாக்காகவும் அழகாகவும் வைத்துக் கொள்ள அவகாச மில்லாத குறையிலேதான், ‘பீ. ஏ’ ‘எம். ஏ’ என வகுப்புக்கள் முன்னேற முன்னேற, கூந்தலின் வளர்ச்சி பின்னேறிக்கொண்டு போகிறது.

சருமத்தில் உள்ள ‘மயிர்க் கால்கள்’ என்னும் குழியில் ரோமங்கள் பதிக்கப்பட்டிருக்

கின்றன. மயிர்க்காலின் அடியில் எண்ணெய்க் கிரந்தம் ஒன்று சதா எண்ணெய் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. மயிர்க் கால் வழியே கசிந்து வரும் எண்ணெய்ப் பசை இயற்கையாகவே ரோமத்தைப் பதப்படுத்திப் பருவ வேற்றுமைகளினின்று காப்பாற்ற உதவுகின்றது. அதிக எண்ணெய் கசிந்தால் தலைமயிரில் பிசுக்கு ஏறி, ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளுகின்றன. எண்ணெய்ப் பசையில்லாவிடில் உலர்ந்து போய், மயிர் நுனி வெடித்து வளர்ச்சி தடைப்பட்டுப் போகிறது. கருங் கூந்தல், செம்பட்டைக் கூந்தல் என ரோமத்திற்கும் பல்வேறு நிறங்கள் ஏற்படுவதற்குக் காரணம், ரோமத்தின் உட்புறத்திலிருக்கும் ஒரு வகை வர்ண மைப்பொருளே ஆகும்.

தலைமயிர் வேகமாக உதிர்ந்து போவது, அடிக்கடி ஸ்திரீகளுக்கு ஏற்படும் சாதாரண அநுபவம். பிரசவங்களுக்குப் பிறகும், கடும் ஜுரத்திற்குப் பிறகும், இரண்டு மூன்று வாரங்கள் படுக்கையாகக் கிடந்த பிறகும் மயிர் உதிர ஆரம்பிக்கிறது. சில சமயம் நிற்காமல் மாசக்கணக்கில் உதிர்ந்து கொண்டே போய், கூந்தலின் செழுமையையும் அழகையும் பாதிப்பதைக் கவனித்திருக்கலாம். தலைச் சருமத்தில் சில வியாதிகள் ஏற்படுவதினாலும் சில சமயங்கள் மயிர் உதிர ஆரம்பிக்கிறது. வியாதிகள் ஏற்பட்டுள்ள இடங்களில் மட்டும் மயிர் உதிர்ந்து போவதால் அங்கு மிஞ்சும் தசையில் சொட்டை ஏற்படும். சாதாரணமாக, புருஷர்களைப்போல் ஸ்திரீகளின் தலையில் வழுக்கை விழுவதில்லை. அப்படியே வந்தாலும் நாற்பது வயசுக்கு மேல் வகிடு எடுக்குமிடத்தில் மட்டும் சொட்டை விழும். யௌவன வயசிலே ஸ்திரீகளின் தலையில் சொட்டை விழுந்தால் அதற்குச் சரும வியாதிதான் காரணமென நிச்சயமாகக் கூறலாம்.

கூந்தலை அழகாகவும் செழுமையாகவும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அதற்குத் தேகத்தையும், தலைச் சருமத்தையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும். தலைச் சருமத்தைச் சிறு வயசிலிருந்தே பாதுகாக்க வேண்டியது அவசியம். தலைச் சருமம், விரித்த குடைத் துணியைப் போன்று இறுக்கமாகத் தலை எலும்பின் மீது படிந்திருக்கிறது. தோலின் அடியில் மெல்லிய தசைகளும், ரத்தக் குழலும், நரம்புகளும் கொடிகள்போல் வியாபித்துக் கொண்டிருக்கின்றன. வயசாக ஆக, எலும்பு வளர்ந்து நெருக்குவதால் பலூனில் காற்று உப்ப உப்ப ரப்பர் மெலிந்து போவது போல் தலைமீதிருக்கும் சருமமும் மெலிந்து கொண்டே போகின்றது. சருமத்தின்மீது செருகப்பட்டிருக்கும் ரோமங்கள் எலும்பின் வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுத் தாமே உதிர ஆரம்பிக்கின்றன. வயோதிக காலத்தில் ரோமம் உதிர்ந்து போவதன் ரகசியம் இதுதான்.

அநாவசியமாக மயிர் உதிர்ந்து போவதைத் தடுக்கும் வழி மிகவும் சுலபம். சருமத்தின் அடியிலிருக்கும் ரத்தக் குழலைத் தூண்டி, மயிர்க்கால்களுக்கு அதிக ரத்தம் பாயும்படி செய்தால் ரோமம் செழுமையாக வளர ஆரம்பிக்கிறது.

சோம்பல் இன்றி, தினம் காலை மாலை இரு வேளைகளிலும்,

தலையை வாரிக்கொள்ளும் சந்தர்ப்பங்களில், எண்ணெய்யை அடிமயிரில் படும்படி தடவி, கை விரல்களைக் கூந்தலுக்குள் செருகி, தலைத் தோலின்மீது சற்று அழுத்தித் தேய்க்க வேண்டும். தலையின் இரு பக்கங்களிலும் சேர்ந்தாற்போல் இரு கைகளையும் உபயோகிக்கலாம். விரல்களால் தேய்ப்பதனால் சருமம் சூடு ஏறி ரத்தக் குழல்கள் விறுவிறுப்பு அடைந்து நன்றாக ஓட ஆரம்பிக்கின்றன. குறைந்தது ஐந்து நிமிஷமாவது இப்படிச் செய்ய வேண்டும். பலரிடம் இதற்குப் பொறுமை இருப்பதில்லை. எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்கையில் அவசரமாக எண்ணெய்யைத் தலையில் அப்பிக்கொண்டு முழுகுவதை விட, மெதுவாக எண்ணெய்யை மயிர்க்கால்களில் படும்படி தடவி, விரல்களால் சொறிந்து, அழுத்தி, சருமத்தைச் சூடேறும் வரை தேய்த்தால், ரத்த விருத்திக்கு உபயோகமாயிருக்கும். சீப்புகளினாலும் ரத்த விருத்தியை உண்டு பண்ணலாம். அகன்ற பற்கள் கொண்ட சீப்பினால் சிடுக்குகளை எடுத்துவிட்டு, தலையில் பட்டுச் சற்று எரிச்சல் வரும்வரை வேகமாகப் பலமுறை வாரவேண்டும். அழுத்தி வாருவதனால் சருமத்திலுள்ள ரத்தக் குழல்கள் தூண்டப்படுகின்றன. பிறகு மெல்லிய பற்கள் கொண்ட நெருக்கமான சீப்பினால் வாரவேண்டும். இது கூந்தலை ஒழுங்கு படுத்துவதுடன், மயிர்க்கால் வழியே கசியும் எண்ணெய்யை நுனிவரை ஒரே சீராகப் பரவச் செய்யவும் உதவுகிறது. உபயோகித்தபின் சீப்பை வெந்நீரில் கழுவித் துடைத்து வைப்பது நலம். ஒவ்வொருவரும் தனித் தனிச் சீப்பு உபயோகத்திற்கு வைத்துக்கொண்டால், சரும வியாதிகள், பொடுகு முதலிய தொந்தரவின்றி இருக்க முடியும்.

பொடுகு என்பது கூந்தலைப் பாதிக்கும் ஒருவகைத் தொத்து நோய். இது ஒரு விதக் கிருமியால் ஏற்படுகிறது. தலைச் சருமம் உலர்ந்து,பொடிப் பொடியாகக் கழன்றுகொண்டே போகும். ரோமம் மிகவும் வேகமாக உதிர்ந்து, நாளா வட்டத்தில் சொட்டை ஏற்படவும் செய்யும். இதைத் தடுக்கும் வழி சுலபமானது. வீட்டில் ஒருவருடைய தலையில் பொடுகு வியாதி இருந்தால், மற்றவர்கள் அவருடைய சீப்பை உபயோகிக்கவே கூடாது. நோய் வந்த பிறகு குணப்படுத்துவது சற்றுச் சிரமம். வாரத்திற்கு மூன்று முறைகள் எண்ணெய் ஸ்நானம் செய்தால், பொடுகு வளர்ச்சி தடைப்படுகிறதென்று சொல்லுகிறார்கள். தலைச் சருமத்தின்மீது அழுக்குக் குவிந்துகொள்ளாதபடி அடிக்கடி ஸ்நானம் செய்தால் பொடுகும் மறைந்து போகும். சில சமயங்களில் பொடுகு உள்ளவர்கள் பொறுக்க முடியாத அரிப்பினால் கஷ்டப்படுகின்றனர். எண்ணெய் ஸ்நானத்திற்கு இடை இடையே ஒரு டேபிள் ஸ்பூன் 'டெட்டால்' மருந்தை ஒரு கூஜாத் தண்ணீருடன் கலந்து, தலைமயிரின்மீது நன்றாகப் படியும் வண்ணம் தேய்த்து, தலையை நீரில் அலசினால் பொடுகுக் கிருமிகள் இறந்து அரிப்பு நின்றுபோகும்.

தலைமயிர் வளரும் என்ற எண்ணத்துடன் சிலர் அமாவாசைகள் தோறும், ஓர் அங்குலம் வெட்டிவிடுவது உண்டு. அப்படி வெட்டுவதனால் மயிர் வளரு

வதாகச் சொல்ல முடியாது. வெறும் பிரமையே ஒழிய, இந்த முறை உபயோகம் அற்றது.

'எண்ணெய் ஸ்நானம் கூந்தலுக்கு அவசியமா? அதனால் உபயோகமென்ன?' என்று சிலர் விவாதிக்கின்றனர். தேகத்தின் சருமத்திற்குள் எண்ணெய் புக முடியாது. சருமம் வேற்றுப் பொருள்களை உள்ளே அநுமதிப்பதில்லை என்பது வைத்திய சாஸ்திரம் அறிந்த உண்மை. ஆகையினால் எண்ணெய் ஸ்நானத்தினால் அடையும் பலன் என்ன? சேற்றை மேலே பூசிக்கொண்டவன், குளித்து வந்தால் சுத்தமாயிருந்து, குளித்தவன் அடையும் ஆனந்தத்தைவிடப் பன்மடங்கு அதிக ஆனந்தத்தை அடைகிறான். அதேபோல், எண்ணெய்யைப் பூசிக்கொண்டதும் நமக்கு ஒரு வித அருவருப்பு ஏற்படுகிறது. எண்ணெய்யைச் சீயக்காயினால் எடுத்துவிட்டு, ஸ்நானம் செய்ததும் மித மீறிய ஆரோக்கிய உணர்ச்சி ஏற்படுவதன் ரகசியம், மேலே சொன்ன சேற்றைப் பூசிக்கொண்டவனின் மனோதத்துவந்தான் என்று விவாதிக்கும் வைத்தியர்கள் இருக்கிறார்கள். நம் நாட்டைப் போன்ற உஷ்ண தேசங்களில் வாரத்திற்கு ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்துக் கொள்ளுவதனால் கூந்தலுக்கு நல்லது என்பது என் அபிப்ராயம். அதிக உஷ்ணம் காரணமாக இயற்கையாக உள்ள எண்ணெய்ப் பசை காய்ந்து விடுவதினால், நாம் செயற்கையாக எண்ணெய்யைப் பூசி ரோமத்தைப் பதனிட வேண்டுவது அவசிய மாகிறது.

எண்ணெய் தேய்த்துக்கொள்ளும் வழக்கம் நம் நாட்டில் மட்டுமின்றிக் கிரேக்க நாட்டிலும், ரோமானியர்களிடமும் கூடப் பழக்கத்திலிருந்ததைச் சரித்திர வாயிலாக அறிகிறோம். அவர்கள் ஆலிவ் எண்ணெய்யைப் பூசி ஸ்நானம் செய்தார்கள் என்று சொல்லுவார்கள். தமிழ்ப் பெண்மணிகள் சாதாரணமாக நல்லெண்ணெய்யைத்தான் ஸ்நானத்திற்கு உபயோகிக்கிறார்கள். கேரளப் பெண்கள் தேங்காய் எண்ணெய்யை விசேஷமாக உபயோகிக்கிறார்கள். வட நாட்டு ஸ்திரீகள் கடுகு எண்ணெய்யை உபயோகிக்கின்றனர். எண்ணெய்யை எடுக்க நம்மில் அநேகர் சுத்தமான சீயக்காய்ப் பொடியைத்தான் உபயோகிக்கின்றோம். மலையாளப் பெண்கள் அநேகர் உசிலம்தழைப் பொடியையும், கல்லூரி மாணவிகள் லக்ஸ், ஷாம்பூ என்ற சோப்புத் திரவங்களையும் உபயோகிக்கின்றனர்.

மலையாளப் பெண்கள் எண்ணெய் ஸ்நானம் செய்தால், எல்லா எண்ணெய்யும் மயிரினின்று போகும்படி துவட்டி எடுத்துவிட மாட்டார்கள். ஸ்நானம் செய்த பிறகும், தலையில் அப்படியே பாதி எண்ணெய் இருக்கும். அவர்கள் கழுத்துப்படி ரவிக்கை மீதும், தோள் புடைவை மீதும் எண்ணெய் கசிந்து ஓடுவதைக்கண்டு தமிழ்ப் பெண்கள் அருவருப்படைவது உண்டு. தலையில் துளி எண்ணெய் இருந்துவிட்டாலும், ஸ்நானத்திற்குப் பிறகு நம்மில் சிலருக்குத் தலை வலி உண்டாகிவிடும்.

எந்த எண்ணெய்யை உபயோகித்தாலும், பொதுவாக எண்ணெய் முழுவதையும் போகும்படி அலசி எடுத்துவிடுவதுதான் நல்லது. அதுதான் தலையிலிருக்கும் அழுக்கும் வெளியேறிச்

சருமம் சுத்த மடைய உதவுகின் றது. எண்ணெய் ஸ்நானத்திற்கு வெந்நீரையே எந்தக் காலத்தி லும் உபயோகிப்பதுதான் நல் லது. வெந்நீர் சருமத்தி லுள்ள ரத்தக் குழல்களைத் தூண்டி ரத்த ஓட்டத்தை ஊக்குவிக் கிறது.

ஸ்நானம் செய்த பின்பு, சோம் பலைப் பாராது, தலையில் ஈரமின் றித் துண்டினால் துவட்டி எடுத்து, சிடுக்கின்றிக் கூந்தலைக் கோதிக் காயவைக்க வேண்டியது அவசி யம். ஈரத் தலையைக் காயு முன்னே பின்னிவிட்டுக் கொண்டு, கல்லூரிக்கு ஓடும் மாணவிகளின் தலையில் பொடுகு குடியேறினால் லேசில் வெளி யேறாது. எண்ணெய் ஸ்நானம் செய்த அன்று தலையை வாரிக் கொள்ளும்பொழுது கூடிய மட் டும் எண்ணெய் உபயோகிக் காது, வெறுங் கூந்தலை வாரி, தளரப் பின்னிவிடுதல் நலம்.

எண்ணெய்யை எடுக்க உப யோகிக்கும் பல பொருள்களில், கீழ்க்கண்டவை மிகவும் எளியன. மஞ்சள் பூக் கொண்ட ஆவாரை இலைகளையும், உசிலந்தழையை யும் காயவைத்து இடித்துப் பொடியாக்கி, சமபாகத்தில் சீயக்காய்ப் பொடியுடன் கலந்து வருஷத்திற்கு வேண்டிய அளவு டப்பியில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். மென்மை யாகத் தண்ணீருடன் நுரை உண் டாக்கும் மேற்படிப் பொடியினால் கை சோகாது, எண்ணெய்யை நீக்கலாம். அதிகப்படி தேய்ப்பத னால் ரோமம் சிக்காகி அறுந்து போகாமலு மிருக்கும். ஸ்நா னத்துக்குப் பிறகு துல்லிய மான ஒரு மணம் தலையிலிருந்து கமழ்ந்துகொண்டு, ஸ்நானத்தின் இன்பத்தை அதிகப்படுத்தும். இதை அநுபவத்தில் உணரலாம்.

வாரிக்கொள்வதற்கு உபயோ கிக்கும் வாசனைத் தைலங்களி னால் கெடுதல்கள் ஏதும் இல்லை. ஆனால், மயிர் வளர்க்கும் சக்தி ஒன்றுக்கும் இல்லை என்பது வைத்தியர்கள் கண்ட உண்மை. சாதாரணமாக நல்ல தேங்காய் எண்ணெய்யே மிகச் சிறந்த கூந் தல் அலங்கார சாதன மாகும்.

✲

புதிய கோளம்

'யார் சரி?' என்று யோசித்துக்கொண்டு மண்டையை உடைத்துக் கொள்ளுவதை விட, 'எது சரி?' என்று யோசிப்பதில் பொழுதைச் செலவழித்தால், ஐக்கிய நாடுகள் சங்கம் உருப்படியான காரியம் செய்த தாக ஆகும்.

ஐ. நா. சபையில் அமெரிக்கப் பிரதிநிதி

முட்டாள்கள்

ஒரு நிமிஷத்துக்கு ஒரு முட்டாள் வீதம் பிறக்கிறான் என்று பி. டி. பர்னம் போட்ட கணக்கு மிகவும் குறைவு. சமீபத்தில் அமெரிக்கப் பத்திரிகைகளில் ஒருவன், 'தபால் பெட்டி நம்பர் 103-க்கு உங்கள் டாலரை அனுப்ப இது கடைசிச் சந்தர்ப்பம்' என்றுமட்டும் விளம்பரம் செய்தான். நூற்றுக்கணக்கான முட்டாள்கள் டாலரை எதற்காக அனுப்ப வேண்டும் என்று யோசிக்காமல் பணத்தை அனுப்பி விட்டார்கள்; விளம்பரம் செய்தவன் பணத்தை வாங்கிப் பையில் போட்டுக்கொண்டான்.

—குட் ஹவுஸ் கீப்பிங்

மாப்பிள்ளை என்ன விலை?

பார்வதி — என்ன பாட்டி, உங்கள் பேத்தியைப் பெண் பார்க்க யாரோ வந்திருந்தாப்லே இருக்கே? கல்யாணம் நிச்சயமாயிடுத்தா?

பாட்டி — அந்த வயிற்றெரிச்சலே என் கேக்றே! என் பேத்தி, பார்க்கறத்துக்கு அழகாயில்லையாம். தலையிலே மயிர் நிறைய இல்லையாம். அதனாலே, பேசினதுக்கு மேலே ஆயிரம் ரூபாய் கூடக் கொடுத்தாத்தான் கல்யாணம் பண்ணிக்கு வாளாம்!

பார்வதி — அழகுதான்! இந்தமாதிரி மனுஷாளோடே சம்பந்தம் பண்ணவே கூடாது. நான் சொல்றபடி செய்யுங்கோ. ஒரு பாட்டில் ஜாப்கோ ஸ்னோவும் ஒரு பாட்டில் ஜாப்கோ ஹேர் க்ரோயரும் வாங்கிக் கொடுத்து உங்கள் பேத்தியைத் தவறுமல் தினம் உபயோகிச்சுண்டு வரச் சொல்லுங்கோ. கொஞ்ச நாளில் அவள் எவ்வளவு லக்ஷணமாகி விடறுள்னு பாருங்கோ!

(ஒரு மாதத்திற்குப் பின்)

பாட்டி — அம்மா பார்வதி, நீ சொன்னபடியே என் பேத்தி ஜாப்கோ ஸ்னோவையும் ஹேர் க்ரோயரையும் உபயோகிக்க ஆரம்பித்தாள். கொஞ்ச நாளில் அவள் முகம் நல்ல லக்ஷணமாயிடுத்து. தலையிலேயும் கறுகறுனு மயிர் அடர்த்தியா வளர்ந்துடுத்து. நேத்திக்கி ஒரு பிள்ளையாண்டான் வந்தான். வரதக்ஷணையே வேண்டாம், பெண்ணைக் கொடுத்தாப் போரும்னு சொல்லிட்டான்! நீ மஹராஜியாய், பதினறும் பெத்து...

பார்வதி — (சிரித்துக் கொண்டே) பாட்டி, பாட்டி வேண்டாம்! இந்த ரேஷன் காலத்திலே பதினறு குழந்தைகளை வச்சுண்டு நான் எப்படி சமாளிப்பேன்!

லோத்ரா பல்லாண்டுகளாக இந்திய ஸ்திரீகளுக்கு விசுவாசத்துடன் சேவை புரிந்து நம்பிக்கையுள்ள கர்ப்பாசய ரோகநிவாரணி என்று புகழையும் ஸ்தாபீத்துக் கொண்டுள்ளது

லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

EASTCANS 578

கேஸரி குட்டீரம் லிமிட்டெட், மதருஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை

சக்தி

மாத வெளியீடு

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோ பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

சக்தி காரியாலயம்

சென்னை 14

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

பிரசுரிக்காத கட்டுரைகள்

●

தி. ஜ. ர.

வெகு காலமாக என் மேல் ஒரு புகார் உண்டு. என்னிடம் வரும் கதை கட்டுரைகளில், பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்புவதில் நான் பூரண அக்கறை எடுத்துக்கொள்வதில்லை என்பதுதான் அந்தப் புகார். இதுபற்றி வரும் கண்டனக் கடிதங்களைத் தம்மால் சகிக்க முடியவில்லை என்று, நான் பதித்த பத்திரிகை ஒன்றின் சொந்தக்காரரே ஒரு முறை கவலைப்பட்டார். இன்னொரு பத்திரிகைக்காரர், இந்தப் பிரசுரிக்கப்படாத கட்டுரைகளின் கர்த்தா ஒருவரைப்பற்றி ஒரு சமயம் உருக்கமான ஒரு விஷயம் சொன்னார். அது என்னைக் குறித்த ஜாடையாயிருக்குமோ என்பது என் சந்தேகம். அந்தப் பிரசுரிக்கப்படாத கட்டுரை எழுத்தாளர், "என் கட்டுரைகளை ஓர் ஆசிரியருக்கு அனுப்பினேன். அவர் பிரசுரிக்கத்தான் பிரசுரிக்கவில்லை. திருப்பியாவது அனுப்பக்கூடாதா? அதுவும் இல்லை" என்று சொல்லிக் கண்ணீர் விட்டாராம்.

இன்னொரு பிரசுரிக்கப்படாத கதாசிரியர் என்னை நேருக்கு நேரே ஜாடை சொல்லி, தமது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டார்.

அவருடைய சிறு கதைத் தொகுப்பு ஒன்று புஸ்தக உருவத்தில் வந்தது. பலபேர் புகழ்ந்தார்களாம். பத்திரிகைகளெல்லாம் பாராட்டினவாம். இந்த விஷயமெல்லாம் எனக்குத் தெரியாது.

ஒரு நாள் அவரையும் அவருடைய பிரசுரகர்த்தரையும் சேர்ந்தாற்போல் சந்தித்தேன். அந்த ஆசிரியரின் இந்தப் பிரபல சிறுகதைத் தொகுப்பைப்பற்றிப் பிரசுரகர்த்தர் பிரஸ்தாபித்தார்.

"அப்படியா? சந்தோஷம்!" என்று உபசாரமாகப் பதிலளித்தேன்.

"இதில் உள்ள முதல் கதையை எல்லோரும் அபூர்வம் என்று புகழ்கிறார்கள். அதுதான் நீங்கள் உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க முடியாது என்று தள்ளுபடி செய்தது. அது இன்று புஸ்தகத்திலேயே வெளிவந்துவிட்டது" என்று பெருமை பூரிக்கச் சொன்னார் கதாசிரியர்.

நான் தள்ளும் கதையை இன்னொருவர் போட்டதும், பலர் புகழ்வதும்தான் அதிசயமா? நான் போடக் கூடியதை இன்னொருவர் தள்ளுவதும் அதையும் பலர் புகழ்வதும் நடக்கிறதே, அந்த அதிசயம் இந்த நண்பருக்குத் தெரியாதுபோலிருக்கிறது! லோகோ பின்ன ருசி; இதில் யாரும் யாரிடமும் வஞ்சமோ கோபமோ கொள்ளத் தேவையில்லை. ஒருவருடைய கட்டுரையை ஓராசிரியர் பல காரணங்களால் நிராகரிக்கலாம். வேண்டுமென்று வஞ்சனையாய் அப்படி நிராகரிக்காத வரையில், (நிராக

பிரசுரிக்கப்படாத கட்டுரையைத் திரும்பப் பெறுவிட்டால் எழுத்தாளர்களுக்குக் கஷ்டம். அந்தப் பிரசுரிக்காத கட்டுரையினால் பத்திரிகாசிரியர் படும் கஷ்டம் என்னவென்பது எழுத்தாளருக்குத் தெரியாது. அந்தக் கஷ்டத்தைத் தெரிவிக்கிறது இக்கட்டுரை. இது "ஹிந்துஸ்தா"வில் பிரசுரிக்கப்பட்டது.

ரிக்கச் சந்தர்ப்பமே யில்லாத வரையில்) அவரிடம் எதற்காகக் கோபப்பட வேண்டும்? அதில் என்னதான் நியாயம்?

பிரசுரிக்கப்படாத கதை, கட்டுரைகளைத் திரும்பப் பெருத எழுத்தாளர்களுக்கு வருத்தம்—சில சமயம் கண்ணீரும்தான்—வருவது சகஜம். ஆனல், இந்த விஷயத்தில் பொறுப்புப் பூராவும் ஆசிரியரையே சேர்ந்தது என்று அவர்கள் ஏன் நினைக்கிருர்கள்? அவர்களுடைய 'விலையற்ற மாணிக்கங்'களான கதை, கட்டுரைகளை இழக்காதிருக்க, அவர்களுக்கு எவ்விதப் பொறுப்பும் கிடையாதா? எல்லாப் பத்திரிகாலயங்களும் 'லண்டன் டைம்ஸ்' மாதிரிச் சர்வ வசதிகளோடும் நடக்கவில்லை. ஏதோ சில தவறுகள் நிகழ்வது சகஜம்.

இந் நிலையில், கட்டுரையாளர், யாரையும் கேட்காமலே, பத்திரிகைக்குத் தம் கதை கட்டுரைகளை அனுப்புகிருர். ஏதோ சாமான்யமாக நினைத்து அனுப்பினல் பரவாயில்லை. அவை பிரசுரமாகாமலும், காணுமலும் போய்விட்டால், 'போன முயல் பெரிய முயல்' என்று கூச்சல் போட ஆரம்பித்துவிடுகிருர். 'என் பொக்கிஷமே போய் விட்டதே' என்கிருர். இப்படி அரும் பொக்கிஷமாய்த் தமது எழுத்தை மதிப்பவர், எதற்கும் முன் ஜாக்கிரதையாய் ஒரு நகல் எடுத்து வைத்துக்கொள்ளக் கூடாதா?

கதை, கட்டுரைகளை எழுதியனுப்புபவருக்கு, தம் ஒருவருடைய கதை கட்டுரைகளைப் பற்றியே கவலை. ஒரு பத்திராசிரியருக்கோ இந்த மாதிரி எத்தனையோ பேரின் கதை கட்டுரைகளைப்பற்றிக் கவலை. மேலும் பல தொல்லைகள். அந்தப் பத்திராசிரியரிடம், இந்த 'விஷயதானி'யும் கொஞ்சம் இரக்கங் காட்டி நடந்துகொள்ளலாகாதா? தவிர, தம் 'பொக்கிஷ'த்திடமும் சற்று அதிக ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளலாகாதா?

இந்தப் பிரசுரிக்கப்படாத கட்டுரையாளர்களின் விஷயம், அவர்களுக்கும் சிரமம்; ஆசிரியர்களுக்கும் சிரமம்தான். இந்த உபத்திரவம் இங்கே மட்டும்தான் இருக்கிறதோ என்று யாரும் நினைக்க வேண்டாம். மேல் நாடுகளிலும்தான் இருக்கிறது.

'ஜான்புல்' என்ற பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையில், ஜே. பி. பிரீஸ்ட்லீ என்ற பிரபல ஆசிரியர், வாசகரின் கேள்விகளுக்கு விடையெழுதும் பொறுப்பை ஏற்றிருக்கிருர்.

"எழுத்தாளன் ஆக வழி என்ன?" என்று அவரை ஒருவர் கேட்டிருக்கிருர்.

"இது சர்வ சாதாரணமாய் எல்லோரும் கேட்கும் கேள்வி. இதன் பதிலோ மகா சுலபமானது. அதைக் கேட்டாலே நீர் திடுக்கிட்டுப் போவீர். நீர் எழுத்தாளன் ஆக வழி என்ன என்ருல், எழுதுவதுதான்" என்கிருர் பிரீஸ்ட்லீ.

"நீண்டகாலமாக எழுதி எழுதிப் பழக வேண்டும். முதலில் எழுதத் தொடங்கும்போது வாழ்க்கையிலே உமக்குப் பிரத்யட்சமாய் நெருங்கிய பரிச்சயம் உள்ள விஷயங்களைப் பற்றியே எழுதும். தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சம் எழுதும்" என்று வாசகர்களுக்கு அவர் யோசனை கூறுகிருர். கடைசியிலே ஓர் எச்சரிக்கையும் செய்கிருர்:

"ஆனால், நீர் எழுதுவதை யெல்லாம் எனக்கு அனுப்பிவிடாதீர். நான் கொஞ்சம் வேலை நிறைந்த மனிதன். எவரேனும் பத்திராசிரியர்களுக்கும் பிரசுரகர்த்தர்களுக்கும் உம் எழுத்துக்களை அனுப்பும்" என்கிறார்.

இவராவது சற்றுத் தேவலை. ஜேம்ஸ் அகேட் என்ற பிரபல விமர்சனகர்த்தா, இவரையும் மிஞ்சிவிட்டார். அவர் எழுதுகிறார்: "வாசகர்களை நான் ஒரு வரம் கேட்கிறேன்: அதாவது, இனிமேல் தங்கள் ஏட்டுப் பிரதிகள் எவற்றையும் அவர்கள் எனக்கு அனுப்ப வேண்டாம். அவர்களின் ஏட்டுப் பிரதிகள் முதலில் என் வீட்டு நாற்காலிகள் அனைத்தையும் நிறைத்துவிட்டன. அதுவரையில் பரவாயில்லை. அப்புறம், அவை வழியெல்லாம் இறையத் தொடங்கிவிட்டன. நான் ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்குப் போகவே முடியவில்லை. போதும் போதும். என்னால் இனித் தாளாது. என் வேண்டுகோளை எழுத்தாளர்கள் செவி சாய்க்கவில்லையானால், அவர்களிடம் நானும் வஞ்சம் தீர்த்துக்கொள்ள ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். அது இதுவரையிலும் யாரும் கண்டு பிடிக்காத வழி. வாபஸ் பெறுவதற்காக எழுத்தாளர்கள் தலையொட்டி விலாச மெழுதி அனுப்பி இருக்கும் சகல உறைகளையும் எடுத்துக்கொள்ளுவேன். மனம் போனபடி எவர் உறையில், எவருடைய ஏட்டுப் பிரதி கைக்கு வருகிறதோ அதைத் திணித்துச் சகல ஏட்டுப் பிரதிகளையும் திருப்பி அனுப்பிவிடுவேன். ஒருவர் எழுதியது மற்றவரிடமாக, அத்தனையும் வேறு வேறு கைகளுக்குப் போய்ச் சேர்ந்துவிடும்" என்கிறார்.

அவருக்காவது இப்படி அத்தனை ஏட்டுப் பிரதிகளுக்கும் தலை ஒட்டிய உறைகள் போய்ச் சேர்கின்றன. அதுவும் இல்லாதவர்களுக்கு என்ன வழி?

✲

புது உபாயம்

சிகாகோ நகரத்திலுள்ள 'வுட்ஸ் தியேட்டர்' என்னும் சினிமாக் கொட்டகையில், 'எழுப்புகிறவன்' என்று ஒருவன் இருப்பான். அவன், கொட்டகைக்குள் 'தூங்கிக் குறட்டை விடுபவர்களை இலேசாகத் தட்டிச் சுயபிரக்ஞையை அடையும்படி செய்வான். இந்தக் குறட்டையினால் சினிமா பார்க்கும் மற்றவர்களுக்குத் தொந்தரவு ஏற்படக் கூடாதல்லவா? அதற்காகத்தான் இந்தப் புது உபாயம். டேல் ஹாரிஸன்

பண்டைப் பொருள்கள்

கலிபோர்னியாவில் உள்ள ஒரு பழைய புத்தகக் கடையில் உள்ள ஒரு ஜன்னலில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது:

"நாங்கள் பழைய தட்டுமுட்டுச் சாமான்களையும் பழைய புத்தகங்களையும் விலைக்கு வாங்குகிறோம். அபூர்வமான பண்டைப் பொருள்களை விற்கிறோம்."

—பென்னட் கர்ஃப்

நல்ல படிப்பு

நல்ல படிப்பு உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் நடக்கும் விஷயங்களைக் குறித்து மண்டையை உடைத்துக்கொள்ளச் செய்கிறது.

—இல்லினாய் ஸ்டேட் ஜர்னல்

அந்தமான் தீவுகள்

அரசியல்வாதி

வங்காளக் குடாக் கடலில் துண்டுத் துண்டாகச் சிதறிக் கிடப்பதுபோலக் காட்சியளிக்கும் மலைப் பிரதேசமான அந்தமான், ஏறக்குறைய 2500 சதுர மைல் விஸ்தீரண முள்ளது. இது பிர்லா, டால்மியா, ஈ. ஜான் குருவில்லா போன்ற பணம் படைத்த முதலாளிகளுக்கு, "இயற்கை வளத்தை அதிகப்படுத்துவது" என்னும் அழகான வார்த்தை அலங்காரத்துடன் அநேகமாக விற்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

219 மைல் நீளமுள்ள இந்தத் தீவுகள், அசோக சக்ரவர்த்தியின் காலத்தி லிருந்தே இந்திய வியாபாரிகளுக்குப் பழக்கமான பிரதேசங்கள். கி. பி. முதலாவது நூற்றாண்டிலேயே ஜப்பானுக்கும் சீனவுக்கும், யெங்--டுமாங் ஹந்துமான் என்னும் பெயர்களில் இத் தீவுகள் பழக்கமுண்டு. முதலாவது ராஜேந்திர சோழன் இத் தீவுகளைப் படையெடுத்து வென்றதாகத் தெரிகிறது. தூரக் கிழக்குக்குப் பிரயாணம் செய்யும் கப்பல்களைக் கொள்ளையடித்து வந்த ஒரு தனிக் கூட்டம் இந்தத் தீவுகளில் ஏகபோகமாக வசித்து வந்ததாக மார்கோ போலோ போன்ற யாத்ரீகர்கள் எழுதியிருக்கிறார்கள். வெகு நாட்கள் வரை இவர்கள், உடை உடுத்தக் கூடத் தெரியாத காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள். ஐட்ஸின் என்ற சீன சரித்திரக்காரர் ஒருவர், "இங்கே ஆண்கள் முழு நிர்வாணமாக இருக்கிறார்கள். பெண்கள் சில தழைகளைக் கொண்டு தங்களை மூடிக்கொள்கிறார்கள். வியாபாரிகள் ஆடைகள் அளித்தாலும், தமக்கு அவை பிரியமில்லை என்று சொல்லி மறுத்துவிடுகிறார்கள்" என்று எழுதி வைத்திருக்கிறார்.

1858-ம் வருஷம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ் இந்தியா சேர்ந்ததும், தேசபக்தர்களை நாடுகடத்திச் சிறைப்படுத்தி வைக்க அந்தமான் உபயோகப் பட்டது. அந்த வருஷம், சுமார் 200 கைதிகள் டாக்டர் வால்கர் என்பவரின் கண்காணிப்பில், ஐம்பது சிப்பாய்களின் துணை கொண்டு கிளம்பிற்று. இந்தக் கைதிகளில் பெரும்பாலோர், 1857-ம் வருஷம் நடந்த முதலாவது இந்திய சுதந்தரப் போரில் ஈடுபட்டுச் சிறைப்படுத்தப்பட்டவர்கள். இவர்களில் பலர் தூக்கிடப்பட்டும், தப்பியோடியும் கூட, 1864-ம் வருஷம் இந்த எண்ணிக்கை 6000-ஆகப் பெருகிற்று. 'அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் ஆசாமிகள்' என்னும் முத்திரையில், அநேக தேசபக்தச் சிங்கங்கள் இங்கே கொண்டுவந்து அடைக்கப்பட்டனர்; ஹிந்து மகா சபைத் தலைவர் ஸ்ரீ சாவர்க்கர் இங்கே அநுபவித்த நரக வாழ்க்கை, சரித்திரத்திலே மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும். மலையாளத்து மாப்பிள்ளைகளும், வங்காளத்தின் புரட்சிக்கார இளைஞர்களும்

இந்தியாவின் நலனுக்கு உதவும் முறையில் அந்தமான் தீவுகளை எத்தனையோ விதங்களில் பயன்படுத்திக்கொள்ளலாம். இதை விட்டுவிட்டு, இந்தியாவின் பண மூட்டைகளான சில முதலாளிகளிடம் அந்தமான் தீவுகளைக் 'குத்தகைக்கு விடுவது' நியாயமல்ல. போரம் பத்திரிகை இத் தகவலைத் தருகிறது.

ஆசிய மாநாட்டுக்கு வந்த தென்னுப்பிரிக்க
இந்தியரின் பிரதிநிதிகளாகிய
ஜி. எம். நாயக்கரும், ஒய். எம். தாதுவும்

இங்கே செத்துச் சுண்ணும்பாஞர்கள். இந்த அக்கிரமங்கள் பொது ஜனங்களின் மனத்தில் ஆவேசத்தை உண்டாக்கிற்று. 1872-ல் ஷெர் ஆலி என்னும் பட்டாணிய இளைஞன் லார்டு மேயோவைக் கொன்று தீர்த்ததற்கும் இந்த ஆவேசமே காரணமாயிற்று. வைஸ்ராயின் அயல் நாட்டுக் காரியதரிசியிடம் ஷெர் ஆலியைக் கொண்டு நிறுத்திய பொழுது, தான் கடவுளின் ஆணைப்படியே மேயோவைக் கொன்றதாயும், கடவுளுக்கும் தன் செயலில் பங்கு உண்டு என்றும் அவன் பதிலிறுத்தான்.

1942-ல் ஜப்பானியரின் கையில் வந்தபோது, அந்தமானில் மொத்தம் 19,000 பேர் இருந்தனர். இவர்களில் முக்கால்வாசிப் பேர் தண்டனைக் கைதிகள். பெரும்பான்மையினரான பர்மியர்கள் ஜப்பானியர்களால் விடுவிக்கப்பட்டுத் தாய் நாடு திரும்பினர். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அந்தமான் தீவுகளுக்கு ஜஸீர் இ ஷாஹித் (தியாகிகள் தீவு) என்றும், ஜஸீர் இஸ்வராஜ் (சுதந்தரத் தீவு) என்றும் மறுபெயர் கொடுத்தார். ஓர் இந்தியர் அங்கே கவர்னராக நியமிக்கப்பட்டார்.

வங்கக் குடாக் கடலில் அந்தமான் தீவுகள் கேந்திர ஸ்தானம் வகிக்கின்றன. கால நிலை அறியவும், ஒலி பரப்பு நிலையங்கள் நிறுவவும் அந்தமான் தீவுகள் மிகவும் உபயோகமா யிருக்கும். நம் நாட்டு இளைஞர்களுக்குக் கடற்படையில் தேர்ச்சி யளிக்கவும் நல்ல ஸ்தலமாக உதவும். தேக்கு மரங்கள் உற்பத்தியும், ஷார்க் மீன்களும், நம் நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் நல்ல உபயோகமா யிருக்கும். இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அந்தமானைப் பெரிய முதலாளிகளின் கையில் விடுவதை நாட்டின் துரதிருஷ்டம் என்றுகூடச் சொல்லலாம். அந்தமானின் 'இயற்கை வளத்தை அதிகப்படுத்து'வதை அரசாங்கமே எடுத்துக்கொண்டால் என்னவாம்? தேசிய ஐச்வரியம் இந்த மாதிரிப் போம் பண்ணப்பட அநுமதிக்கக்கூடாது. பாமர மக்களின் நலனுக்கேற்ப இடைக்கால சர்க்கார் நடந்து கொள்ளும் என்று நாம் எதிர் பார்ப்போமாக.

எதிர்ப் பக்கத்தில்

மேல் படம்: அகில உலக இளைஞர் தூதுகோஷ்டியினர் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்தனர். தூதுகோஷ்டியைச் சேர்ந்தவர்கள், அகில இந்திய மாணவர் காங்கிரஸின் தலைவரான ஸ்ரீ ரவீந்திர வர்மாவைச் சந்தித்தனர்.

கீழ்ப் படம்: பிரசித்தி பெற்ற இந்தியப் புரட்சிக்காரரான சர்தார் அஜித் சிங், 40 வருஷ அக்ஞாத வாசத்துக்குப் பின் இந்தியா திரும்பினர். இந்த இடைக்காலத்தில், அவர் உலக முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

*

ரப்பர்

ரப்பர் மரத்திலிருந்து ரப்பர் பாலை இறக்கி, நாம் உபயோகிக்கும் மாதிரியில் ரப்பர் செய்வதைக் கண்டுபிடித்தவர் சார்லஸ் குட்யீயர் என்ற அமெரிக்கர். 1839-ம் வருஷத்தில் இதை அவர் கண்டுபிடித்தார்.

—டிஹென்றி

நடை அழகு

●

சுப. நாராயணன்

தெளிவானநடை பொருத்தமா யிருக்கும். பொருத்தமா யிருப்பது நன்ருயிருக்கும். நன்ரு யிருப்பது அழகா யிருக்கும், அழகான நடை எழுதுவது சுளுவல்லதான். ஆனல், பிரமாதமு மல்ல. யாருக்கு இப்படி?

எண்ணத் தெளிவு பெற்று எழுத்தறிவு, சொல்லறிவு, எடுத்துக் கொண்ட விஷயத்தில் ஒருமித்த மனம் படிந்த ஈடுபாடு இவை இருந்தால், அழகான நடை எழுதுவது பிரமாத மல்ல. ஆனல், இந்த அழகு விஷயம் சில வேளை பெரும் சர்ச்சைக்குரிய விஷயமாக ஆகிக் கோர விளைபயன்களை உண்டாக்கிவிடுவதுண்டு. ஒருவருக்கு அழகு சொட்டுவதாய்க் காணும் நடை இன்னொருவருக்கு மகா கோரமாய்த் தோன்றலாம். இப்படிப் பட்ட தீவிரமான மாறுபட்ட அபிப்பிராயங்கள் கிளம்பும் போதுதான் அழகின் உட்படையான பொருத்த, பொருத்தமின்மை அளவுகோல் கையாளப் பெறவேண்டி நேர்கிறது.

எல்லாருக்கும் எல்லா விஷயத்தையும் விளக்கிவிடலாம் என்பது எல்லாச் சந்தர்ப்பத்திலும் பொருந்தாது என்றே நான் நம்புகிறேன். ஒத்த தரத்திலுள்ளவர்களிடையே விஷயத்தை விளக்குவது வெகு சுலபம். நமக்கு மேற்பட்டவர்களுக்கு விளக்க நேரும்போது, சங்கோஜம் ஏற்படும். அதனல் சரளம் குறையும்; நடை முடங்கும். நம்மைப் பெரியவர்களாக மதிக்கிறவர்களிடம் விளக்கும் போது, நமது நடையில் பரிவும், கனிவும் இழையும். நாம் மட்டமாய் நினைக்கிறவர்களுக்கு விளக்க நேரும்போது நம்முடைய நடையில் பெரும் இடர்ப்பாடும், சொல் ஓட்டத்தில் தேக்கமும், நம் மனத்தில், நம்மையும் அறியாமல், ஒரு விதச் சங்கடமும் நிழலாடிய வண்ணமிருக்கும்.

இதனலேயே, சாதாரணமாக, எல்லாரும், எல்லாவிடத்தும், எல்லா விஷயங்களைப் பற்றியும், எல்லாச் சமயத்திலும் பேசுவதில்லை, எழுதுவதில்லை. மிக்க திறமை வாய்ந்த பேச்சாளர், எழுத்தாளர்கூட இப்படிச் செய்ய முற்படுவதில்லை. ஏன்? எங்கும், எப்போதும், எவரிடத்தும் பொருந்த நடக்க எல்லாராலும் முடியாது. சில மேதைகள், துறவிகள், ஞானிகளால் இப்படிச் செய்ய முடியும். சில போலிகள் இப்படிச் செய்ய முயன்று, தம்மை யொத்த போலிகளையும், அறிவு முதிராத அப்பாவிகளையும் தாம் இப்படிச் செய்து விட்டதாக நம்ப வைத்து விடுவதுண்டு.

என்னையும் உங்களையும் பொறுத்த மட்டில், அதி மேதைகளையும், அசல் போலிகளையும் பற்றி நமக்குக் கவலை யில்லை. சராசரி மனிதனுக்குப் பொருந்து

எழுத்து நடை எப்படி யிருக்க வேண்டும் என்பதுபற்றிக் கடந்த சில வருஷங்களாகத் தமிழ் நாட்டில் நடைபெறும் தர்க்கத்தைப் போல உலகில் வேறு எந்த நாட்டிலும் நடைபெற்றது கிடையாது. பற்பல ஆசிரியர்கள் பற்பல கருத்துக்களைப் பற்பல சமயங்களில் வெளியிட்டிருக்கிருர்கள். நடை அழகுக்கு முத்தாய்ப்பு வைக்கிறது இந்த 'நடை அழகு'!

கிற, சராசரி மனிதனுக்கு விஷயங்களை விளக்குகிற நடை தான் நமக்கு வேண்டியது.

நடையில் நடுப் பொருளா யிருப் பது கருத்து. கருத்தை விளக்கு கிறவனும், அந்தக் கருத்தை யாருக்காக விளக்குகிருனே அவனும் நேருக்கு நேராய், ஒத்த நிலையில், இருந்து பேசு கிறபடி சொல்வது கட்டுரை நடை. கட்டுரை நடையில் கருத் துத்தான் முக்கியம். அதன் அறிவுக் கூறுகள்தாம் முக்கியம். தர்க்க ரீதியாகவே கட்டுரை யாளன் விஷயத்தை அணுகு வான். கட்டுரையின் விரி வடைந்த விஷயந்தான் நூல். இந்த மாதிரி நடையில் மிகுதி யான சொல் வகை தேவையில்லை. திட்டமான திட்பம் வாய்ந்த, கச்சிதமான சொற்கள் வேண் டும். சொல்லாட்சி பொருத்தமா யிருக்க வேண்டும். கையாளும் சொல் ஒவ்வொன்றும் மேலும் மேலும் கருத்தை அழுத்தமாய் விளக்கிச் சொல்ல வேண்டும். அறிவைக் கிளறிச் சிந்தனையை எழுப்பும் முறையிலேயேசிறப்பா கக் கவனம் செலுத்த வேண்டும்.

கருத்தை விளக்குகிறவனும், கருத்தை விளக்கக் கேட்டுக் கொண்டிருக்கிறவனும்நேருக்கு நேராய் இருந்தும் இராமலும், ஒத்த நிலையில் உள்ளபடி சங் கேத பாஷையில் மறைமுக மாய்க் கூருமல் கூறிக் கோரிய பலனை அடைய முயல்வது கதை நடை. மையப் பொருளான கருத்தைச் சுற்றிலும் உணர்ச் சிப் படங்கள் பற்பல வர்ண விசித்திர ரூபத்தில் மூடித் திறந்து, மூடித் திறந்து காட்சி காட்டியபடி இருக்கும். இடச் சொற்களோடு, படச் சொற் களும் விரவி நிற்கும். ஓசை

இதோ ஒரு வழி!

'அசல்' பத்திரிகையாளராக ஆக வேண்டுமானல், என்ன செய்ய வேண்டும் என்று,டபிள்யூ. டி. ஸ்டீட் என்ற பிரபல ஆசிரியர் ஒருவர் கூறியிருக்கிருர்:

"நீங்கள் எதைச் சொல்ல எண்ணுகிறீர்களோ,அதை எழுதிக் கொள்ளுங்கள். அதை அப்படியே ஆஸ்திரேலியாவுக்கு — உங்கள் செலவில்—கேபிள் தந்தியாக அனுப்பப் போவதாக எண்ணிக் கொள்ளுங்கள். இதற்குக் கூலி ஒரு வார்த்தைக்கு 5 ஷில்லிங். 5 ஷில்லிங் கொடுக்கக்கூடிய யோக்கி யதை அற்றதென்று உங்களுக்குப் படும் வார்த்தைகளை யெல்லாம் வெட்டி எறியுங்கள். இப்போது, உங்களுடைய அழகு அழகான சொல் ஜாலங்களெல்லாம்மறைந்து போயிருக்கும். ஏதாவது மிச்சம் மீதி இருந்ததானல், அதை ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பி வையுங்கள்."

—பி. பி. ஸி. ஒலிபரப்பு

நுணுக்கம், இசை நயம், உவமைச் செறிவு, கற்பனை நிர வல், உணர்ச்சிக் குழைவு எல் லாம் மிக்க கவனத்தோடு செதுக் கிச் செதுக்கிப் பொருத்தப் பெற்று, இறுதியில், பூரணமான கற்பனை வடிவத்தைச் சமைத்தாக வேண்டும். உணர்ச்சியைக் கிளறி, உணர்வை அசைப்பதே கதை நடை.

இரண்டும் கலந்தது கவிதை நடை. இவை மூன்றையும் பல படித்தாய்க் கலந்து, கொண்டு கூட்டி உண்டான பற்பல எழுத்து முயற்சிகள்தாம் இலக் கியம் என்றபெயரின் கீழ் அடங் கும் காவியம், தத்துவம், நாவல், நாடகம், பாடல் முதலியன.

இங்கிருக்கும் நாம் இன்னேர் இடத்துக்குப் போக விரும்பு கிருேம். நாம் இலக்காகக்

கொண்ட இடத்தை அடைவதற்காகச் செய்யும் இயக்க முயற்சி தான் நடை. பொருத்தமான இயக்கம் நல்ல நடை யாகிறது. நடை சில சமயம் ஓடுவதுண்டு. இதையே ஓட்டம் என்கிறோம். நடையில் பொருத்த மற்ற குதிப்புகளும், சொல் ஜாலங்களும் இருந்தால், அந்த நடையைக் குதிக்கிறது, திசை தப்பி ஓடுகிறது என்று குறை சொல்லுகிறோம். நமது மனப் பயிற்சி, அறிவு வளர்ச்சி, பண்பாடு, சூழ்நிலை முதலிய தகுதிகளுக்கேற்ப ஒவ்வொரு விதமான இலக்கியத் துறையும், நடைப் போக்கும் நமது உள்ளத்தை ஈர்க்கும். அதனால், இன்ன மாதிரி எழுதுவதுதான் அழகான நடை, மற்றவை அழகான நடையல்ல என்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. உதாரணமாக:

"பற்றற்றேம் என்பார்
படிற்றெழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்

என்பது எடுத்த எடுப்பில் எனக்கு விளங்கவில்லை.

"பற்று அற்றேம் என்பார்
படிற்று ஒழுக்கம்
எற்று! எற்று! என்று
ஏதம் பலவும் தரும்"

என்பது கொஞ்சம் விளங்குகிறது.

"தம்மைப் பிறர் நன்கு மதித்தற் பொருட்டு யாம் பற்றற்றேமென்று சொல்வாரது மறைந்த வொழுக்கம் அப்பொழுது இனிது போலத் தோன்றுமாயினும், 'என் செய்தேம்! என் செய்தேம்!' என்று தாமே இரங்கும் வகை, அவர்க்குப் பல துன்பங்களைக் கொடுக்கும்"

என்பது இன்னும் நன்றாய் விளங்குகிறது.

"சொல் அளவு அல்லது பற்று அருமையின், 'பற்று அற்றேம் என்பார்' என்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின் பொருட்டுப் பெரிதாய், நெடுங் காலம் நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் விளைவின்கண், 'அந்தோ! வினையே! என்று அழுவர்' ஆகலின், 'எற்று! எற்று!' என்றும் கூறினார்"

என்று திருவள்ளுவரைப் பரிமேலழகர் விளக்கும்போது, இருவருடைய நடையழகும் "அழகிதே! அழகிதே!" என்று நீங்கள் வியந்து பாராட்டுகிறீர்கள். எனக்கும் தெளிவாய் விளங்கிவிட்டது.

"சாமியார் மாதிரி வேஷம் போடரான் சார்! ஆசாமி பெரிய ப்ராடு! சுத்த மோசம்! அடிக்கிற கூத்துக்கெல்லாம் பின்னாலே இ. பி. டி. போட்டு வாங்கறப்போ பயல் கதறு கதறுன்னு கதறி, ரத்தக் கண்ணீர் விடணுமாக்கும்!"

என்று, பேசுகிற பாஷையில் சொல்லுகிறபோது, இந்தப் பரிபாஷை புரிந்தவர்கள் அப்படியே சொக்கிப் போய், நடையழகில் லயித்துவிடுகிறார்கள்.

இப்போது, நடை அழகு எப்படியிருக்கும், இருக்க வேண்டும் என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

✲

வழுக்கை விஷயம்

தலை மயிர் உதிர்ந்து வழுக்கை விழுந்தால் அதைப்பற்றிக் கவலையே படாதீர்கள்; பல்லைப் போலத் தலை மயிரும் வலித்து, பல்லைப் போலவே பிடுங்கி எறிய நேரிட்டால் என்ன செய்திருப்போம் என்று எண்ணிப் பாருங்கள்.

—நியூஸிலண்ட் வீக்லி நியூஸ்

LTS. 154-121-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

ஸ்ரீவிஸ்-அம்லா ஹேர் ஆயில்

உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.
குளிர்ச்சியாயும் புத்துணர்ச்சி அளிப்பதாயுமிருக்கிறது.

ஸ்ரீவிஸ் பர்பியூமரி ஒர்க்ஸ்

பூரண உரிமையாளர்கள்:

S. விஸ்வநாதம் & கம்பெனி

44, பந்தர் தெரு : மதராஸ்-1



டப்பி 1-க்கு ரூ. 0-6-0

பாட்டில் 1-க்கு ரூ. 1-4-0

சுகப் பிரசவம்

●

புரொபசர் நிக்கொலாய்
ஐவனேவ்

பிரசவ வேதனையைக் குறைப்பதற்கு வைத்திய சாஸ்திரம் நீண்ட காலமாய் முயற்சி செய்து வருகிறது. இந்தக் காரியத்துக்கு மயக்க மருந்துகளை உபயோகப்படுத்துவது ஆபத்தில்லையென்றாலும், அவைகளால் அவ்வளவாகப் பயன் ஒன்றுமில்லை.

வேதனை யென்பது உடற்கூறின் அமைப்பிலே மாறுதல் ஏற்படும்பொழுது உண்டாகிறது. இப்படி ஏற்படும் மாறுதல்களில் சில வேதனையினால் உண்டாவன; சில வேதனையை உண்டாக்கும் காரணங்களால் உண்டாவன. இந்த மாறுதல்களின் காரணங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால், மயக்க மருந்துகள் இல்லாமலே பிரசவ வேதனையைப் போக்கும் வழியைக் கண்டு பிடிக்கலாம்.

உயிர்ச் சத்துக்களை (வைடமின்கள்) இன்னும் நன்ருகப் பரிசோதனை செய்து பார்த்தால் அதன் மூலம் பிரசவ வேதனையைக் குறைக்கும் காரியத்தில் நல்ல பலன் பெறக்கூடும் என்று சோவியத் ருஷ்யாவில் உள்ள பிரசவ சிகிச்சை அறிந்த மருத்துவ நிபுணர்கள் முடிவுகட்டியிருக்கிருர்கள். சூல் கொள்ளுதல், பிரசவித்தல், குழந்தைகளை வளர்த்தல் முதலிய காரியங்களில் உயிர்ச்சத்துக்கள் வெகுவாகப் பயன்படுகின்றன என்பது வெகு காலத்துக்குமுன் வந்த முடிவு. இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு ருஷ்யாவின் மருத்துவர்கள் பல பரிசோதனைகளைச் செய்திருக்கின்றனர்.

வைடமின் பி 1 உடம்பில் குறைவாக இருந்தால் பல வேதனைகள் உண்டாகின்றன. இப்படி இந்த வைடமின் குறைந்திருப்பது வேதனையினால் ஏற்பட்டதா அல்லது வேதனைக்கு காரணகர்த்தாவாக இருக்கிறதா, என்ருல், இரண்டாவது காரணத்தையே விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இந்த வைடமின் பி 1-ஐ உடம்பில் ஏற்றிவிட்டால் பிரசவ வேதனையை அடியோடு போக்கவோ அல்லது குறைந்த பக்ஷம் குறைக்கவோ முடியுமென்பதற்கு ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன.

வைடமின்களைப் போதுமான அளவு உணவோடு உட்கொள்ளும் பெண்கள் பிரசவகாலத்தில் பெய்யும் மூத்திரத்தை எடுத்துப் பரிசோதித்துப் பார்த்ததில், அதில் வைடமின் பி 1 மிகமிகக் குறைந்த அளவில் இருப்பது தெரிய வந்தது. ஆகவே இந்த அத்தாட்சி, கர்ப்பம் தரித்திருந்த சந்தர்ப்பத்தில் வைடமின் பி 1 உடம்புக்கு எவ்வளவு தேவையாக இருந்தது என்பதைக் காட்டுகிறது.

கருப்பையின் தசைகள் சுருங்குவதும், நரம்புகளில் பரபரப்பு ஏற்படுவதும், இந்த வைடமின்

எல்லா வேதனைகளிலும் பிரசவ வேதனையே பெரிய வேதனை என்றுசொல்லுவது வழக்கம். அனதிகாலம் தொட்டு நிரந்தரமாக இருந்துவரும் இந்த ஆபத்தான வேதனையைப் போக்கி, சுகப் பிரசவமாதற்கு வேண்டிய சில மார்க்கங்களை ருஷ்ய விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருப்பதை, சோவியத் வீக்லி யில் வெளிவந்த இக் கட்டுரை தெரிவிக்கிறது.

பி 1 அதிகமாக ஜீரணமாவதையே காட்டுகிறது என்கிறார் புரொபஸர் ஆர். ஷுப்.

உடம்பில் வைடமின் பி 1 ஐச் செலுத்தும் பரிசோதனைகள் முதலாவதாக லெனின்கிராடில் 1945-ம் வருஷத் தொடக்கத்தில் செய்யப்பட்டன. இந்த முயற்சிக்குத் தக்க பலன்களும் கிடைத்தன. 900 பேருக்கு மேற்பட்டவர்கள் வேதனையின்றிக் குழந்தைகளை ஈன்றார்கள்.

பிரசவத்தின் அறிகுறிகள் தோன்றத் தொடங்கியதும் வைடமினை உட்செலுத்திவிடுகிறார்கள். நரம்புகளில் ஊசி போடுவதன் மூலமும், தசைகளில் ஊசிபோடுவதன் மூலமும் வாயின் வழியாகவும் வைடமினை உள்ளே செலுத்தலாம். நரம்புகள் வழியாக உள்ளே செலுத்துவது உடனடியாகச் சீக்கிரத்தில் பலன் கொடுக்கிறதென்றாலும், அப் பலன் வெகு குறுகிய காலமே நீடிப்பதால் டாக்டர்கள் அந்த முறையைக் கைவிட்டு விட்டார்கள். தற்சமயம் தசைகளில் ஒரு தடவை ஊசிபோடுவதே அனுஷ்டானத்தில் உள்ளது. மேலும் திரும்பத் திரும்ப வேதனை உண்டானால், மற்றொரு முறை குறைந்த அளவில் ஊசி போடுகிறார்கள். அல்லது அரை மணிக்கு ஒரு தடவையாக வாய் வழியாக வைடமின் துளிகளைப் புகட்டுகிறார்கள். முதல் ஊசி போட்ட பத்து அல்லது பதினைந்து நிமிஷங்களில் வேதனை நீங்கியதின் சுகம் தெரிய ஆரம்பித்துவிடுகிறது. இந்தப் பரிசோதனை செய்தவைகளில் பாதிக் 'கேஸ்'களைப் பார்த்தால் அவற்றில் 40 சத விகிதத்தில் குழந்தை பெறும் காரியம் முடியும் மட்டும் வேதனை இல்லாமல் இருந்திருக்கிறது. 51.2 சதவிகிதத்தில் வேதனை மிகுந்த அதிக கால அளவில் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. 3.2 சதவிகிதத்தில் பலன் மிகவும் குறுகிய காலமே நீடித்தது. 5.6 சதவிகிதத்தில் மட்டுமே யாதொரு பலனும் தென்படாமல் போய்விட்டது.

ஆகவே, பெரும்பாலும் வேதனையைக் குறைக்கவோ அல்லது போக்கவோ முடிந்துள்ளது என்பது உண்மை; அதோடு இந்த முறையினால் தாய்க்கோ சிசுவுக்கோ ஆபத்து ஒன்றுமில்லை. சோவியத் பரிசோதனைகளில் கொடுக்கப்பட்ட வைடமின்களைவிட அதிகமாகத் துளிகளைப் புகட்டினால் அதன் பலன் ஆபத்தாகவே இருந்துள்ளது.

வேதனை நீங்கிவிடுவது ஒன்று மட்டுமல்ல இதன் பலன்.

வேறு உருவத்தில்

ஒரு பிரபல சட்ட நிபுணர் தம் வேலைக்காரப் பையனுக்கு அடிக்கடி புத்திமதியும் யோசனையும் சொல்லிக் கொண்டே யிருப்பார், ஒரு முறை அவர் அந்தப் பையனுக்கும், இன்னொருவனுக்கும் நடந்த இந்தச் சம்பாஷணையைக் கேட்க நேர்ந்தது.

"என்ன அப்பா! இந்தக் கிழம் உனக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கிறது?"

"வருஷத்துக்கு எண்ணூறு பவுன் கிடைக்கிறது, அப்பா!"

"என்னது?"

"ஆமாம்! வாரத்துக்கு எட்டு ஷில்லிங் ரொக்கப் பணமாகவும், மற்றவை சட்ட யோசனைகள் ரூபமாகவும் கிடைக்கின்றன."

—க்ளாஸ்கோ ஹெரால்ட்

சோவியத் விஞ்ஞானிகள் இந்த வைடமின் காரணமாக, கருப்பையின் சுருக்கத்தில் என்னென்ன மாறுதல்கள் நிகழ்கின்றன என்பதை ஆராய்ந்துள்ளனர். இந்த வேதனை நிவாரணி மருந்துக்கும், பிள்ளைப் பேறுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கிறது என்றே அவர்கள் துணிகின்றனர். மயக்க மருந்துகளை பிரசவ வேதனையைப் போக்குவதற்குக் கொடுத்தால் விபரீதப் பலன்களே ஏற்படுகின்றன. கருப்பை சுருங்குவதை மயக்க மருந்து தடுக்கிறது.

பிள்ளைப் பேறு சமயத்தில் வைடமின் பி 1 உடம்பில் குறைந்திருக்குமென்ருல் தசைகளும், சவ்வுகளும் சீக்கிரத்தில் களைப்படைந்து சோர்ந்துவிடும். ஆகவே, தசைகள் சரியாக வேலை செய்யவில்லையென்ருல் பிரசவம் காலத்தை இழுத்துக் கொண்டே இருக்கும். வைட்டமின் பி 1-ஐ உடம்பில் செலுத்திவிட்டால் பிரசவத்துக்குச் சராசரியாக ஆகும் நேரத்தில் பாதி நேரத்திலேயே காரியம் முடிந்து விடுகிறது.

இந்தப் பரிசோதனை சம்பந்தப்பட்ட மட்டில், நாம் இப்போது திட்டமான ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாதென்ருலும், பிரசவத்துக்கு ஆகும் காலத்தையும் பிரசவ வேதனையையும் வெகுவாகக் குறைத்து விடுவதற்கு வேண்டிய வழியில் காலெடுத்து வைத்து விட்டோம் என்று நாம் தைரியமாகச் சொல்லலாம்.

*

கூடாது

பெண்களைப்பற்றி நீங்கள் எதுவும் சொல்ல முடியாது; சொல்ல முடிந்தாலும் சொல்லக் கூடாது.

—ஆம்ப்வியன்

நூல் நிலையப் புஸ்தகங்கள்

1939-ம் வருஷத்தில் ஜெர்மானியர் பாரிஸ் நகருக்குள் பிரவேசித்த போது, அங்கே இருந்த அமெரிக்க நூல் நிலையம் (லைப்ரரி) ஒழுங்காகவே நடைபெற்று வந்தது. ஆனல், இதில் உள்ள நாஜி - எதிர்ப்பு நூல்கள் மாத்திரம் ஏற்கெனவே அழிக்கப்பட் டிருந்தன. ஜெர்மானியர் வந்ததும், அங்கே புத்தகம் வாசித்துக்கொண் டிருந்தவர்களில் பலர் ஓட்டமெடுக்க வேண்டியதாயிற்று. ஓடாதவர்களில் பலர் சிறை பிடிக்கப்பட்டு, ஹிட்லரின் கொடிய 'சித்திரவதை'க் கோட்டத்தினுள்ளே தள்ளப்பட்டனர். சிலர் மாறுவேஷம் போட்டுக்கொண்டு தலை மறைவாகப் போய்விட்டனர். அவர்கள் நூல் நிலையத்தைச் சேர்ந்த புத்தகங்களைத் தங்கள் தங்கள் வீடுகளில் வைத்துவிட்டு ஓடிவிட்டனர். பிறகு அந்த வீடுகளை ஜெர்மானியர் கைப்பற்றிக்கொண்டனர்.

இப்போது, ஆறு வருஷங்கள் கடந்தபின், உயிர் பிழைக்கும் போராட்டத்தில் இறங்கிப் போராடிய ஆடவரும் பெண்டிரும் நூல் நிலையத்தின் சில புத்தகங்களைக் கொண்டுவந்து அந்த நிலையத்தில் திருப்பிக் கொடுத்திருக்கிருர்கள். ஜெர்மானியர் வருவதற்குமுன் எடுத்துச்சென்ற புத்தகங்களில் உள்ள தேதிகளைப் பார்த்துவிட்டு, அவைகளை எடுத்துச்சென்று கொண்டுவந்தவர்களிடம் கூடுதல் கட்டணம் வாங்கப்படமாட்டாது என அறிவித்துவிட்டனர்.

—கரண்ட் ஹிஸ்டரி

மராத்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சி

எஸ். ஆர். திகேகர்

மற்ற இந்தியப் பாஷைகளுக்கு எவ்விதத்திலும் குறையாத வண்ணம், மராத்தி இலக்கியம் கடந்த இருபத்தைந்து வருஷ காலத்தில் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வந்திருக்கிறது. சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் ஏராளமாக இருக்கும் காரணத்தால், சிறு கதைத் துறைதான் குறிப்பிடத் தக்க விதத்தில் பரவியிருக்கிறது. சிறந்த ஆராய்ச்சித் திறன் படைத்த அறிஞர்கள், இன்னும் தங்கள் சிருஷ்டிகளை ஆங்கிலத்திலேயே அமைப்பதால் தானோ என்னவோ, இதுவரை மராத்தி இலக்கியத்தில், சிறந்த விஷய அறிவும், பரந்த ஆராய்ச்சி முறையும் கொண்ட புத்தகம் எதுவும் வரவில்லை.

சரித்திரம்: சரித்திரப் புத்தகங்கள் நிறைய வெளியாகி யிருக்கின்றன. பூனாவில் இருக்கும் ஆராய்ச்சிக் கழகம் பேஷ்வா தாப்தாரின் காலந் தொட்டு மராத்தி சரித்திரத்தை 45 வால்யூம்களாக வெளியிட்டிருக்கிறது. ஜி. எஸ். சர்தேசாய் என்னும் பிரசித்த சரித்திரக்காரர் ஒன்பது பெரிய வால்யூம்களில் மராத்தி நாட்டின் சரித்திரத்தை எழுதியிருக்கிறார். ஆனாலும், மற்ற மகாணத்து எழுத்தாளர்களைப் போல மராத்தி எழுத்தாளர்கள் தங்கள் நாட்டுச் சரித்திரத்தைக் கொண்டு, கதைகளோ கவிதைகளோ புனைய வாராதது பெரிய ஆச்சரியம்; ஒரு பெரிய குறையுங்கூட.

வாழ்க்கை வரலாறு: சென்ற தலைமுறையின் சரித்திர புருஷர்களான திலகர், ரானடே, கோகலே முதலியவர்கள் முதல், இன்றைய வீரரான சாவர்க்கர் வரை பலரின் வாழ்க்கை வரலாறுகள் எழுதப்பெற்றிருக்கின்றன. என். சி. கேல்கர் எழுதிய திலகரின் வாழ்க்கைச் சரிதத்துக்கு நிகர் ஏதும் இல்லை. திலகரின் முக்கிய நண்பரான இவர், அவருக்குப் பின் 'கேசரி' பத்திரிகையை ஏற்று நடத்தினார். இவர் திலகரோடு நெருங்கிப் பழகியிருந்ததால்தான் அவரைப் பற்றி மிக நுணுக்கமாக எழுத முடிந்தது; ரானடே, கோகலே, சாவர்க்கர் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை எழுதியவர்கள் அவ்வளவு வெற்றியடையவில்லை. பரான்ஜ்பேயின் வாழ்க்கையை அவருடைய பேரரே விவரித்திருக்கிறார். எஸ். எல். கராந்திகர் எழுதிய சாவர்க்கரின் வரலாறு மாகாண சர்க்காரின் அதிருப்திக்கு ஆளாகி, பறிமுதலும் செய்யப்பட்டது. காங்கிரஸ் பதவி ஏற்ற பின்னரே இதற்குத் தடை நீக்கப்பட்டது.

சுய சரிதம்: இதுவரை வெளியாகி யிருக்கும் சுமார் பன்னிரண்டு சுய சரிதங்களில் ஏழு அல்லது எட்டுத்தான் குறிப்பிடத் தக்கவை. சென்ற தலை முறையில் மராத்தியின் தலை சிறந்த கவியாக விளங்கிய என். வி.

கடந்த இருபத்தைந்து வருஷ காலத்தில் மராத்தி இலக்கியத்தில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை விமரிசன ரீதியில் கட்டுரை விவரிக்கிறது. தி நேஷனல் ஸ்டாண்டர்டு பத்திரிகையில் வெளி வந்தது.

திலகரும் தாமும் நடத்திய வாழ்க்கையை, கவியின் மனைவியாகிய லக்ஷ்மிபாய் திலகர் எழுதியிருக்கிறார். பட்சபாத மில்லாமல் எழுதப்பட்ட, படிக்க ரசமான புத்தகம் இது. நவீன காலத்தின் சிறந்த கவியான டாக்டர் எம். டி. பட்டவர்த்தன், பூனாவில் இருக்கும் பெண்கள் சர்வகலாசாலையின் ஸ்தாபகரான கார்வ் ஆகியோரின் மனைவிமார்களும் தாங்கள் தங்கள் புருஷர்களுடன் நடத்திய வாழ்க்கையை மிக அழகாக எழுதியுள்ளார்கள். என். சி. கேல்காரின் புதல்வியாகிய ஸ்ரீமதி தேஷ்பாண்டே, ஒரு கல்விப் பிரசாரகர் என்கிற முறையில் தமது அநுபவங்களை ரசமாக எழுதியிருக்கிறார். என். சி. கேல்காரின் சுய சரிதம், சமூகத்திலும், அரசியலிலும் நம் திருஷ்டியைத் தீவிரமாகச் செலுத்தச் செய்கிறது. ஆனால், விஷயத்தைப் பூரணமாகத் தெரிந்துகொண்ட ஒரு திருப்தி ஏற்படாது என்பதுதான் இதிலுள்ள ஒரு குறை. நாடக ஆசிரியரான வாரேர்கரும், சிறந்த நடிகரான போதாஸும், தங்கள் தங்கள் தொழில்களைப் பின்னணியாக வைத்துச் சுய சரிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஓய்வு பெற்ற நீதி இலாகா உத்தியோகஸ்தரான என். ஜி. சாபேகர் சரிதம், விஷயங்களை மறைக்காமல் அப்பட்டமாக எழுதப் பட்டிருப்பதால், மனத்தில் பதியும்படியாக இருக்கிறது.

அகராதிகள்: டாக்டர் கேட்கர், டேட், கார்வ் ஆகியோரின் 33 வால்யூம்கள் அகராதிகளாகவும், சொல் விளக்கங்களாகவும் வந்திருக்கின்றன. பழமொழிகள் அடங்கிய புத்தகங்கள் இரண்டு பெரிய வால்யூம்களாக வெளியாகி யிருக்கின்றன. உடற்கூறு, பொது அறிவு ஆகியவை பற்றிய அகராதி நூல்கள் சிலவும் வந்திருப்பது சிறந்ததோர் எதிர்காலத்தையே குறிக்கிறது. டேட் என்கிற பெயரை உடைய இன்னொருவரின், 1938-ம் வருஷம்வரை வெளியாகி யிருக்கும் மராத்திப்புஸ்தகங்களின் ஜாபிதாவைச் சிறந்த சாதனை என்று சொல்ல வேண்டும். மூன்று பிரமாண்டமான வால்யூம்களில் வெளியாகி யிருக்கும் இந்த ஜாபிதாப் புஸ்தகத்தில், மராத்திப் புத்தகங்கள், ஆசிரியர்கள், கூறும் விஷயம் முதலிய சகல விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம். இப்படி 18,000 புத்தகங்களின் விவரத்தைக் கொடுக்கிறது இந்தப் புத்தகம்.

கவிதையும் பாட்டும்: பதினைந்து வருஷ இடைவேளைக்குப் பிறகு மறுபடியும் கவிதை மறுமலர்ச்சி அடைந்திருக்கிறது. சென்ற தலை முறையைச் சேர்ந்த எஷ

சர்ச்சிலுக்குக் கௌரவம்

மத்திய அமெரிக்காவில் உள்ள எல்ஸால்வடார் என்பது ஒரு சிறு குடியரசு. ரூஸ்வெல்ட்டின் ஞாபகார்த்தத் தினத்தை அது கொண்டாடப் போகிறது. அப்போது, அதன் அரசாங்கத்தார் சர்ச்சில், ரூஸ்வெல்ட், கானடா பிரதம மந்திரி மெக்கன்ஸி கிங் ஆகியோரின் படங்களை தங்கள் நாட்டு ஸ்டாம்புகளில் பொறிக்கப் போகிறார்களாம்.

சர்ச்சிலின் உருவம் ஸ்டாம்பில் பொறிக்கப்படுவது இது இரண்டாவது தடவை. போன வருஷம் நிகாராக்வா வெளியிட்ட ஸ்டாம்புகளில் அட்லாண்டிக் சாஸன மகாநாட்டின்போது சர்ச்சில், ரூஸ்வெல்ட் ஆகியோர் அமர்ந்திருந்த காட்சி பொறிக்கப்பட் டிருந்தது.

வந்த், கிரீஷ் போன்றவர்கள் இப்போதும் அடிக்கடி எழுதி வருகிறார்கள். குஸுமக்ராஜ், நிகும்பா, போர்கார் முதலியவர்கள் தலையெடுக்கும் கோஷ்டியில் சிறந்து விளங்குகிறார்கள். முந்தையவர்களைப்போ லில்லாமல், உலகத்தோடு ஒட்டிய வழியில் செல்லுவதால் இவர்களுடைய கவிதைக்குச் சிறந்த வரவேற்பு இருக்கிறது. மன உற்சாகம், உணர்ச்சி வேகம் முதலியவற்றை அளிப்பதில், மராத்திக் கவிதை உலகில் எம். டி. பட்டவர்த்தனுக்கு இணையானவர் யாரும் இல்லை.

நாடகங்கள் : சினிமாவினால் நாடகத் தொழில் சற்றுப் பின்னடைந்திருந்தும், நாடக ஆசிரியர்கள் சிறந்த சிருஷ்டிகளைச் செய்திருக்கிறார்கள். பாமர ரஞ்சகமான, காலத்துக் கேற்ற முறையில் அமைந்த நாடகக் கதைகள் பல இருக்கின்றன. புதியவர்களில் ஆட்டர், ரங்க்னேகர் ஆகியோரும், பழையவர்களில் வரேர்கரும் மூன்று முக்கிய நாடகாசிரியர்கள். மிகவும் வயதாகியும் கூட வரேர்கர், இன்றும், வாழ்க்கையின் புதுப் புதுக் கோணங்களிலே நாடகக் கதைகள் சித்தரிக்கிறார். இளைஞரான ரங்க்னேகர் வாரப் பத்திரிகைத் தொழிலிலிருந்து வெளிப்பட்ட உல்லாசப் போக்குக்காரர். இருந்தும், இவருடைய நாடகங்களில் தமாஷைக் காட்டிலும் பிரத்தியட்ச விஷயமும், புதுமையைக் காட்டிலும் பழமையும் அதிக இடம் பெற்றிருக்கின்றன.

பிரபல நாடகாசிரியனான இப்ஸனின் நாடகங்கள் சிலவும் மராத்தியில் மொழிபெயர்க்கப்பட்டு நடிக்கப்பட்டன. 'பொம்மை வீடு' மொழிபெயர்ப்புக் கோளாறினால் அவ்வளவு நன்றாக அமையவில்லை. மற்றவை பொதுமக்களின் வரவேற்புக்குப் பாத்திரமாயின. பள்ளிக்கூட, கலாசாலை மாணவர்கள் நடிப்பதற்கேற்ற நாடகங்களுக்கு நிறையக் கிராக்கி இருக்கிறது. புது எழுத்தாளர்களையும், புது நாடகங்களையும் கைதூக்கிவிடும் முயற்சிக்கு அவ்வளவாக வெற்றி கிடைக்காததால், இந்தத் தேவையை அவ்வளவாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

நாவல்களும் சிறு கதைகளும் : இந்தத் துறை ஒன்றுதான், மராத்தி இலக்கியத்தில் பிரமிக்கத் தக்க முன்னேற்றத்தையும், வெற்றியையும் அடைந்திருக்கிறது. அநேகமாக, நாவல் ஆசிரியர்கள் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்களாகவும், சிறு கதை எழுத்தாளர்கள் இளைஞர்களாகவும் இருக்கிறார்கள். நாவல் ஆசிரியர்கள், சாதாரண மனிதன் வாழும் உலகத்துக்குச் சம்பந்தமில்லாத ஓர் உலகத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டு, அப்படியே நாவல்கள் எழுதுவது விசித்திரமே. இந்த நாவல்களின் விற்பனையில் கொஞ்சமும் குறைவு இல்லாவிட்டாலும், முக்கியமான அம்சம் ஏதோ இல்லாதது போன்ற ஓர் அதிருப்தி பொதுவாகப் பரவியே இருக்கிறது. இந்த நாவல்களில் பெரும்பான்மை, சொந்தச் சிருஷ்டிக எல்ல; ஏற்கெனவே வெளியான ஒரு சிறு கதை, அல்லது நாடகத்தின் விஸ்தரிப்புத்தான். ஆங்கில, வங்காளி நாவல்களின் தழுவல் அனந்தம். இவைகளை முன்பெல்லாம் குறிப்பிடக் கூட மாட்டார்கள். இப்போது, நல்ல வேளையாக 'மூல'த்தைக் குறிப்பிட்டுவிடுகிறார்கள். பழையவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்கூட

இப்போது, தங்கள் நாவலில் 'அரசியல் அம்ச'த்தைக் கொஞ்சம் கலக்கிறார்கள். 'அரசியல் அம்சம்' என்றால், அரசாங்க விவகாரமோ அல்லது அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரோ கதையில் நடமாட வேண்டும் என்று இவர்கள் நினைப்பது ஓர் அதிசயமே.

நாவல், சிறுகதைத் துறைகளில், பட்கே, காண்டேகர், மதோல்கர், பொகில் ஆகியோர் பிரபலமாக விளங்குகிறார்கள். திகே இவர்களுக்கு முற்றிலும் மாறுபட்ட எழுத்தாளர். இவருடைய சிருஷ்டிகளின் அஸ்திவாரமாக கிராம வாழ்க்கை அமைந்திருக்கிறது.

பெண்மை அழகையும், காதல் சிக்கல்களையும் வெகு அழகாகக் கையாண்டு எழுதும் பட்கே, வாசகர்களின் அமோகமான ஆதரவுக்குப் பாத்திரமாகி யிருக்கிறார். அவருடைய சிந்தனா சக்தியையும், நடை அழகையும் பார்ப்பவருக்கு, அவர் இவ்வளவு சாதாரணமான விஷயங்களை விட்டுவிட்டு, இன்னும் உயர்ந்ததான, இன்னும் முக்கியமான விஷயங்களைப் பின்னணியாக வைத்துக்கொண்டு எழுதினால் என்ன என்று தோன்றுகிறது. அவருடைய கதாபாத்திரங்களும் சற்றுப் பலவீனமானவர்களாகவே காணப்படுகிறார்கள். இவருடைய கதா பாத்திரங்களில் முக்கால்வாசிப் பேர், டயரி எழுதுபவர்களாகவும், கவிகளாகவும், பயங்கரமான கடித-எழுத்தாளர்களாகவும் விளங்குவதும் ஒரு குறையே.

மதோல்கர் அலாதி ரகத்தைச் சேர்ந்தவர். இவருடைய கதைக்கு, இவரைச் சுற்றிய சூழ்நிலையே விஷயங்களைத் தருகிறது. கதா பாத்திரங்களை எதிர் நோக்கும் பிரச்னைகளை இவர் திருப்திகரமாகத் தீர்ப்பதில்லை. அவருடைய நடையும், சுலபமான மராத்தி நடையைச் சேர்ந்ததல்ல. சம்ஸ்கிருத வார்த்தைகளை அதிகம் கலந்து, படாடோபமான வார்த்தை அலங்காரங்களைச் செய்வதில் இவர் வல்லவர்.

ஆக, இந்த நாவலாசிரியர்களில் யாருமே வாழ்க்கையை முழுதும் கவனித்து, முழுச் சித்திரமாகத் தங்கள் நாவல்களில் அளிக்கவில்லை. பெரும்பான்மையோர், தாங்கள் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கு முற்றிலும் புறம்பான ஒரு வாழ்க்கை நிலையையும், லட்சியத்தையுமே தங்கள் நாவல்களில் சித்தரிக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத விஷயமாகும்.

✲

குட்டி நாய் வைத்து வேட்டையாட முடியுமா?

வெர்மான்ட் பார்மர் என்பவரிடம் வேலை தேடி ஒரு சிறு பையன் வந்தான். அவனிடம் அவர் சொன்னதாவது:

"நீ சுறுசுறுப்பானவனாகத்தான் இருக்கிறாய். ஆனால், ஏற்கெனவே இரண்டு பையன்களை வேலைக்கு வைத்துக்கொண்டேன். எங்கள் தகப்பனார் சொல்லுவார், ஒரு பையன் ஒரு பையனுக்குச் சமம். இரண்டு பையன்கள் அரைப் பையனுக்குச் சமம். மூன்று பையன்கள் பையன்களே இல்லாததற்குச் சமம் என்று." —ரீடர்ஸ் டைஜஸ்ட்

பேராசை

பலருடைய அந்தரங்க ஆசைகளை சிலர் யோக்கியமாக வெளிக்குக் காட்டிவிடுவதுதான் பேராசை என்பது. —ஜி. ஆர். ஜோன்ஸ்

சீனாவில் நடப்பது என்ன?

●

வி. ஆவரின்

சீன மக்களே துரதிருஷ்டக்காரர்கள். 1936-ல் கோமின்டாங் சேனையை உருவாக்கி, சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியாரின் மக்கள் விடுதலைச் சேனையை எதிர்த்து இயக்கம் நடத்தினார்கள், நூறு ஜெர்மன் ராணுவப் பிரமுகர்கள். 1946-ல் நூறுபேர் இருக்கவில்லை. ஜனநாயக சக்திகளை எதிர்ப்பதில் ஆயிரக்கணக்கான அமெரிக்க, விஞ்ஞான, அரசியல், பொருளாதார நிபுணர்கள் ஈடுபட்டார்கள். இரண்டரை வருஷங்களுக்கு முன்புதான், நியூயார்க் டைம்ஸ் 'கம்யூனிஸ்டுச் சேனைகள்' ஜப்பானை எதிர்த்துப் போர் நடத்துவதில் மிகவும் உதவி புரிந்ததாக எழுதிற்று. சீன மக்கள் படையைப் பற்றிய இதே அபிப்பிராயத்தை ஜெனரல் ஸ்டில்வெல் போன்ற பல அமெரிக்க அதிகாரிகளும் வெளியிட்டனர்.

இதே சமயத்தில், அநேகமாக அமெரிக்கப் பத்திரிகைகள் எல்லாமே கோமிண்டாங் கட்சியைக் கண்டித்து அபிப்பிராயம் தெரிவித்தன. அமெரிக்கப் படைகளை, ஜப்பானை எதிர்ப்பதில் உபயோகப்படுத்துவதற்கு மாறாக, உள் நாட்டுக் கலகங்களை வளர்ப்பதற்கே கோமிண்டாங் கட்சி அதிகம் உபயோகப்படுத்துகிறது என்றன. 1944, நவம்பர் 1-ம் தேதிய நியூயார்க் டைம்ஸ், அமெரிக்கா தனது உதவியை யெல்லாம் நிறுத்திவிடுவதாகச் சொன்னால்தான், சுங்கிங் பிற்போக்காளர்கள் ஜப்பானை எதிர்த்து நடத்தும் சண்டையில் அதிக ஊக்கம் கொள்ளும் என்று எழுதியது.

இன்றோ, கோமிண்டாங், மக்களை அடக்கி ஒடுக்கும் பணியில் அமெரிக்காவின் ஒருமுகமான ஆதரவைப் பெற்றிருக்கிறது. கோமிண்டாங் வலது சாரியினர் ஜனநாயகக் கட்சிகளுடன் செய்துகொண்ட எல்லா உடன்படிக்கைகளையும் முறித்துக் கொண்டது. 1946, கோடைக் காலத்தில், ஜப்பானியரின் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டிருந்த எல்லா ராணுவத் தளவாடங்களையும், சேனைகளையும் ஜனநாயக சக்திகளை எதிர்ப்பதற்கு உபயோகப்படுத்தியது. கோமிண்டாங் கட்சிப் படைகளுக்கு எல்லாவிதமான சாதன, சௌகரியங்களும் இருந்தன. அமெரிக்கத் தளவாடங்களின் உதவி கொண்டு, ஆறே மாசத்தில் மக்கள் படையை ஒழித்துவிட முடியுமெனக் கோமிண்டாங் கட்சி ஜம்பம் அடித்துக்கொண்டது. ஆறு மாசங்கள் கடந்துவிட்டன; ஆனால், மக்கள் படைகள் இன்று இன்னும் அதிக பலத்துடனேயே இருக்கின்றன. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அந்தஸ்தோ, வானளாவ உயர்ந்

ஒரு நாட்டை ஓர் உள் நாட்டுச் சர்வாதிகாரம், அல்லது ஓர் அந்நிய வல்லரசு இரண்டில் ஏதாவது ஒன்று கண்காணித்து வந்தாலும், அந்த நாட்டில் கஷ்டங்கள் தாம் எஞ்சியிருக்கும். ஆனால், இந்த இரண்டு துராக்ரஹங்களும் சேர்ந்து ஒரு நாட்டைக் கண்காணித்தாலோ அதன் விளைவுகளைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. சீனாவை அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்திருப்பதைச் சோவியத் வீக்லியில் வந்த இக் கட்டுரை தெரிவிக்கிறது.

இல்லாளாக இருப்பது விளையாட்டில்லை

வேலையாட்கள் முன்னைவிட இரட்டிப்பு சிலவாயும், காய்கறிகள ஒன்றுக்கு மூன்று நான்குபங்கு அதிகவிலையுள்ளதாயும், பழங்கள் கிடைப்பது அரிதாயும், வண்ணான் சரிவர வராமலும் சமையல் வேலை செய்பவர்கள் சிலவை அதிகம் காட்டுவதிலேயே ஆசைகொண்டவர்களாயும் உள்ள இந்த நாட்களில் வாழ்க்கை ஒரே கவலை சித்திரமாக இருக்கின்றது. ஆயினும் இல்லாள் இவைகளை எல்லாம் ஒரு உற்சாகத்தோடு சமாளிக்க வேண்டும். அதற்கு அவளுக்கு அடிக்கடி போஷணையளிக்கும் டீ தேவையாய் இருக்கிறது. டீயைப்போல் சோர்வுற்ற நரம்புகளுக்கு பலமளித்து மனதிற்கு ஆயாசந் தீர்த்து வீட்டு அலுவல்களை சரிவரக் கவனிப்பதற்கு வேண்டிய பலமளிப்பது வேறு ஒன்றுமில்லை.

நல்ல டீ தயாரிக்கும் முறை

1. டீயை கெட்டிலில் காய்ச்சாதே. டீபாட் உபயோகி.
2. டீபாட் ஈரமில்லாமலும் வெதவெதப்புடனும் இருந்தால் தான் உணர்ந்த டீ தழையைப் போட்டு கொதிஜலம் விட்டதும் அது நன்ருய் ஊறி நல்ல மணத்தை தரும்.
3. ஒவ்வொரு கப் டீக்கும் ஒரு டீஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீ பாட்டிற்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்கவைத்த தண்ணீரையே உபயோகிக்கவும். ஒருபொழுதும் முன்னுடியே கொதிக்க வைத்த ஜலத்தையோ, கொதிக்காத ஜலத்தையோ அல்லது ரொம்ப கொதிக்கவைத்த ஜலத்தையோ உபயோகிக்காதே. ஜலம் குமிழைப்போல் கிளம்பும் பொழுதுதான் அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. ஐந்து நிமிஷத்திற்கு குறையாமல் கஷாயம் ஊர வேண்டும்.
6. டீ பாட்டில் இருக்கும்பொழுதே சர்க்கரையும் பாலும் சேர்க்காதே. கப்புகளில் கஷாயத்தை ஊற்றிவிட்டே அவைகளை சேர்க்கவும்.

டீ

எந்நேரமும் டீ நேரம்தான்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 278 TM

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் வெள்ளை லேபில், தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.



லிப்டன்ஸ்

வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 W

திருக்கிறது. மக்கள் புரட்சிப் படையின் எட்டாவது, நான்காவது பகுதிகளும், ஐக்கிய ஜனநாயகச் சேனையும், பல மாகாணங்களில் புரட்சி செய்து கொண்டிருக்கும் அநேகக் குடியானவர்களின் பின்பலத்துடன், போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். மக்களின் பூரண ஆதரவையும் பெற்றிருக்கும், இந்த வெவ்வேறு படைகளின் மொத்த எண்ணிக்கை ஏறக் குறைய மூன்று லக்ஷம் இருக்கிறது. மக்கள் படையினரின் தலைமைப் பீடம், ஐந்து மாசகாலத்தில் (1946 ஜூலையிலிருந்து நவம்பர் வரை) மொத்தம் 3,50,000 கொல்லப்பட்டும், காயப்பட்டும், கைதிகளாகவும் கோமிண்டாங் சேனையில் சேதப் பட்டிருக்கிறதென்று அறிவிக்கிறது.

அரசியல் ஒப்பந்தத்தின் மூலம் உள் நாட்டுத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று தான் சீன ஜனநாயகக் கட்சி சென்ற வருஷம் இலையுதிர் காலம்வரை கருதிவந்தது. இந்தக் காரணத்தை முன்னிட்டே வெகு நாள் வரைக்கும், எதிர்த்துத் தாக்காமல் தற்காப்பை மட்டும் செய்துகொண்டு வந்தது. கோமிண்டாங் கட்சியின் 'தேசிய சபை'யின் கூட்டம் நவம்பர் 15-ம் தேதி கூடிய பிறகு நிலைமை மாறிவிட்டது. கடைசியாக, பிற்போக்குச் சக்திகளே கோமிண்டாங் கட்சியில் பலம் பெறுவதைச் சீன மக்கள் கண்டு தெரிந்துகொண்டார்கள்.

இந்தத் 'தேசிய சபை' எதற்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிறது? எந்த அடிப்படையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது? இதனுடைய லட்சியங்கள் என்ன? ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படாமல், கோமிண்டாங் கட்சியினரால் பொறுக்கப்பட்டவர்களே இந்தச் சபையில் அங்கம் வகிக்கின்றார்களாதலால், இந்தச் சபை முற்றிலும் தேசிய விரோதமானது என்றே ஜனநாயக மனப்பான்மை கொண்ட பொதுமக்கள் கருதுகிறார்கள். மேலும், இவர்களில் பலர், மிக மிகப் பிற்போக்காளர்களாக, எட்டு, பத்து வருஷங்களுக்கு முன்பே நியமிக்கப் பட்டவர்கள்.

கோமிண்டாங் கட்சி வெளியிட்ட 'தேசிய சபையின் அமைப்புச் சட்ட'த்தின் மூன்றுவது பிரிவு இப்படிக் கூறுகிறது: "கோமிண்டாங் கட்சியின் பிரதான அதிகாரிகள் எல்லோரும் தேர்தல் இல்லாமலேயே தேசிய சபையில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்." இந்த மாதிரி, சுமார் முன்னூறு அங்கத்தினர்களும், உப—அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். மேலும், 'தேசிய சபையின் பிரதிநிதிகள் தேர்தல் சட்ட'த்தின் 4-வது பிரிவு, கோமிண்டாங் அரசாங்கம் 240 பிரதிநிதிகளை நியமித்திருக்கிறது என்றும் தெரிவிக்கிறது. இதே சட்டத்தின் இதரப் பாகங்களின் படி, வர்த்தகச் சங்கம் போன்றவைகளின் மூலம் 380 பேரும், ஊர்களிலும் கிராமாந்தரங்களிலுமாக 655 பேரும் 165 பேர் "பிரத்தியேகமான முறை"யிலும் 'தேசிய சபை'க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது.

இந்தத் தேர்தல்கள் எப்படி நடைபெற்றன; சட்டம் சொல்லுகிறபடி, நகர சபை நிர்வாகிகள், ஊர்ப் பெரியதனக்காரர், கிராமத்துப் பெரியவர்கள் ஆகியோர்களும், மற்றக்

கோமிண்டாங் கட்சி அதிகாரிகளும் அபேக்ஷகர்களைப் பொறுக்குவார்கள். தேசிய சபைக்கு இவர்களிலிருந்து ஆட்களைப் பொறுக்கி, நியமிக்க வேண்டும், வாக்காளர்கள். கிராமங்களிலும், நகரங்களிலும் 'தேர்தல்'கள் எப்படி நடந்தன என்று பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. ஊரிலுள்ள பெரியவர்கள், பதிவுப் புஸ்தகத்திலுள்ள வாக்காளர்களின் சார்பில், அதிகாரிகள் குறிப்பிடுகிற பெயருக்கு எதிரில் ஒரு சுழியைப் போட்டுவிட்டு வரவேண்டும்.

இந்த முறையில் அமைக்கப்பட்ட 'தேசிய சபை'க்கு, மக்கள் சார்பாகப் பேசுவதற்கு எந்த விதமான யோக்கியதையும் கிடையாதெனச் சீன ஜனநாயகக் கட்சிகளும், ஸ்தாபனங்களும் பலமாகக் கண்டித்து மறுத்தன. சமத்துவமான, ரகசியமான, அனைவரும் வாக்களிக்கும் சந்தர்ப்பம் கொடுக்கும் ஒரு தேர்தலின் மூலம் தான் தேசிய சபையை அமைக்க வேண்டுமென அவர்கள் கோரினார்கள்.

கோமிண்டாங் கட்சியில் ஆதிக்கம் வகிப்பவர்கள் இதை அடியோடு புறக்கணித்தார்கள். ஆனால், சீனாவுக்கு உள்ளேயும் வெளியேயும் நிலவிய ஜனநாயக மனப்பான்மையின் நிர்ப்பந்தம் தாங்காமல், 1946, ஜனவரியில் தேசிய சபையின் அங்கத்தினர் எண்ணிக்கையை 2050-ஆக விஸ்தரிப்பதாகவும், கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், ஜனநாயக லீக்குக்கும் சில ஸ்தானங்கள் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால், விரைவிலேயே, இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, ஜனவரி உடன்படிக்கையை நிறைவேற்றவும் மறுத்தார்கள். தேசிய சபையைத் தங்கள் சொந்தக் கொள்கைக்கு ஒரு கருவியாகவே உபயோகித்துக்கொண்டார்கள். 40 நாளைய வாழ்வுக்குப் பிறகு, ஏதோ ஓர் அரசியல் அமைப்பை வகுத்துவிட்டுத் 'தேசிய சபை' கலைந்தது. சீன ஜனநாயகப் பத்திரிகைகளின் அபிப்பிராயப்படி, இந்த அமைப்பு, யுவான் ஷிகாய் வகுத்த அமைப்பைவிட இன்னும் மோசமானது. 'தேசிய சபை'யைப் போலவே இந்த அரசியல் அமைப்பும் சட்ட விரோதமானது என்று சீன ஜனநாயகக் கட்சிகள் அறிவித்தன.

'தேசிய சபை' அரசியல் அமைப்பை வகுத்துக்கொண்டிருக்கும்போதே, ராணுவங்கள் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கேந்திர ஸ்தலமாகிய யேனானைத் தாக்குவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டன. 'ராஜத் துரோகி'களைத் தேடுவதாகச் சொல்லிக்கொண்டு, போலிஸ் பட்டாளம் ஏராளமான பொதுமக்களைக் கைது செய்துகொண்டும், தனிப்பட்டவர்களின் இல்லங்களில் புகுந்தும் அட்டகாசம் செய்து வந்தன. ரகசியப் போலிஸ் ஏஜண்டுகள் ஜனநாயகத் தலைவர்களுக்கு எதிராகப் பயங்கரப் புரட்சிகள் செய்தனர். பண்ணை முறையை எதிர்த்த குடியானவர்களைத் தண்டப் போலிஸார் சுட்டுத் தள்ளினர். 'கம்யூனிஸ்டு அநுதாபிகள்' என்று குற்றம் சாட்டப்பட்டு, காண்டனில் 3000 மக்கள் கைது செய்யப்பட்டனர்.

போலிஸ் பயங்கரங்களிலிருந்து தப்ப, சீனத் தொழிலாளர் சங்கத்தின் தலைமையினர் அனைவரும் ஒளிந்துகொள்ள வேண்டியதாயிற்று. சங்கத் தலைவ

ரான சூஸூ பாங் ரகசியப் போலிஸாரின் ஏஜெண்டு ஒருவரால் ஹாங்காங்கில் தாக்கப்பட்டுப் படுகாயம் அடைந்தார். உரிமைக்காகப் போராடிய ஷாங்காய்க் கடைத்தெரு வியாபாரிகளின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. வரும் மாரிக்காலத்தில் பதினுயிரக் கணக்கான ஏழைக் குடியான மக்கள் பட்டினியில் மாண்டு போவார்கள். நரமாமிச பட்சணம் பல இடங்களில் நடைபெற்றிருக்கிறது. தங்களுடைய பரம்பரை இருப்பிடங்களை விட்டு விட்டு ஆயிரக்கணக்கான மக்கள் வேறு இடங்களுக்குப் போய்விட்டார்கள்.

இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில், சீனுவைப்பற்றிய அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கை எப்படி இருக்கிறது? உதட்டு நுனியிலிருந்து வரும் பிரமாணங்களைக் கொண்டு அல்லாமல், சீனுவில் இருக்கும் அமெரிக்கப் பிரதிநிதிகளின் செயல்களைக்கொண்டே, உலகம் அமெரிக்காவின் கொள்கையை நிர்ணயிக்கிறது.

பிற்போக்குச் சக்திக்கு அமெரிக்கா, அரசியல், பொருளாதார, ராணுவ உதவி அனைத்தையும் செய்கிறது. இந்தச் செயல்கள் காரணமாகவே, பல சீனச் சங்கங்களும் ஸ்தாபனங்களும், சீனுவில் இருக்கும் அமெரிக்கத் துருப்புக்களை அமெரிக்கா வாபஸ் பெறவேண்டுமெனத் தீர்மானம் செய்கின்றன.

1946, டிசம்பர் மாச மத்தியில் முர்ரே (ஜனநாயகக் கட்சி), ப்லாண்டர்ஸ் (குடியரசுக் கட்சி) போன்ற செனட்டர்களும், ஓவன் லாட்டிமூர், ரீ டல்ஸ் போன்றவர்களுமான அமெரிக்கப் பிரமுகர்கள் கீழ்க்கண்ட அறிக்கையை விட்டதற்கும் இந்தச் செயல்களே காரணமாயிற்று: "சீன உள்நாட்டு யுத்தத்தில் ஒரே ஒரு கட்சிக்கு மட்டும் அமெரிக்கா உதவி அளிப்பது, அதனுடைய ஜனநாயகக் கொள்கைக்கு முரணானது."

இவ்வாறு, சிநேக முறையில் வியாபார, கப்பல் ஒப்பந்தங்கள் நவம்பர் மாசத்தில் முடிவுபெற்றன. 'சமத்துவ உரிமை' என்ற அழகான சொற்றொடரில் மறைமுகமாகத் தொக்கி நிற்கும் அர்த்தம், பிரதேச ஆதிபத்திய உரிமைகள் சம்பந்தமாக முன்பே அமெரிக்கா சீனுவுடன் செய்துகொண்ட, சமத்துவத்துக்கு விரோதமான உடன்படிக்கைகள் மறுபடியும் தலைதூக்குவது என்பதுதான்.

சக்திவாய்ந்த அமெரிக்க மூலதனமும், வளர்ச்சியடையாத, பலஹீனமான சீன மூலதனமும் 'சம உரிமை' பெறுவது என்று சொல்லிவிட்டால், உண்மையில் சம உரிமையாகி விடாது. சீன தேசியக் கைத் தொழில் அமெரிக்க ஏகபோக மூலதனத்தால் வேகமாகவும், ஈவிரக்க மற்றும் நசுக்கப்பட்டுவிடும் என்பதில் யார்தான் சந்தேகம் கொள்ள முடியும்? இவ்வளவுக்கும், இந்தச் சீன தேசியக் கைத்தொழிலை ஒருபுறம் செல்லரித்துப் போன பழைய பண்ணை முதலாளித்துவம் ஆக்கிரமித்து வருகிறது; இன்னொரு புறத்தில் பிற்போக்குச் சக்திகள் கிளப்பிவிட்டிருக்கும் உள்நாட்டுச் சண்டையின் மோதல்களால் வேறு சீன தேசியக் கைத்தொழில் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

கோமிண்டாங் அரசாங்கத்துடன் செய்துகொண்ட 'சமத்துவ' உடன்படிக்கையின் மூலம், அமெ

போவது எப்படி?

வாஷிங்டனில் ஜனநாயக வாதிகள் பலர் பேசிக்கொண்டிருந்தார்கள். தாங்கள் ஏற்கனவே தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் ஸ்தாபனங்களிலிருந்து விலகிப் போய்விட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சங்கடமாக இருக்கிறதென்றும், எல்லோரும் சொன்னார்கள்.

லியோன் ஹென்டர்ஸன் என்பவர் சொன்னதாவது: "நீங்கள் விலகிப்போவது முடியாத காரியம். அது பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிய வாலிபன், தன் தகப்பனாரிடம் போய், 'என் நெஞ்சிலிருப்பதை அகற்ற நீங்கள் உதவ வேண்டும்' என்று கேட்டுக்கொண்ட கதையைப்போல் இருக்கிறது.

"மகன் இந்த விதமாகச் சொன்னதும் தகப்பனார், 'என்னப்பா, விஷயம்? சொல்லு!' என்றார்.

"பையன் சொன்னான்: 'நான் ஆன்னேயைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் அதனால் என் நெஞ்சிலிருக்கும் இதை அகற்றிவிட வேண்டும் என்று சொல்லி, நெஞ்சைத் திறந்து காண்பித்தான். நெஞ்சில் மிகவும் தெளிவாக 'நான் மேரியைக் காதலிக்கிறேன்' என்று பச்சை குத்தப்பட்டிருந்தது."

—லியோனார்ட் லயான்ஸ்

ரிக்கர்கள் சீன வியாபாரத்திலும், தொழில் உற்பத்தியிலும் முதல் போட்டுப் பணம் சம்பாதிக்கவும், சீனாவில் சொத்து, நிலம் வாங்கவும் உரிமை பெற்றார்கள். வெளிநாட்டு வியாபாரத்தை மட்டுப்படுத்தவும், உள் நாட்டு வியாபாரத்துக்குச் சுங்கம் போடவும் கூட முடியாதபடி இந்த ஒப்பந்தத்தில் தடைகள் இருந்தன.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதும் டாகுன்பா பத்திரிகை, 'அபின் யுத்தம்' முடிந்ததும் செய்து கொண்ட அநியாய உடன்படிக்கை ஒரு நூற்றாண்டுக்குப் பிரிட்டனிடம் சீனாவை அடகு வைக்கச் செய்தது போலவே, இந்தச் சீன - அமெரிக்க உடன்படிக்கையும் செய்ய ஏது இருப்பதாக எழுதிற்று.

இந்தச் 'சம உரிமை'கள் ஏற்கெனவே கோமிண்டாங் சீனாவின், பொருளாதாரத்தையும் வியாபாரத்தையும் வெகுவாகப் பாதித்திருக்கின்றன. அமெரிக்கர்களின் போட்டியினால் மேன்மேலும் சீனக் கைத்தொழில்கள் கஷ்டப்படுகின்றன. ஷாங்காய், டென்ட்ஸின், பீபிங் ஆகிய நகரங்களில் அமெரிக்கச் சரக்குகள் குவிந்து கிடக்கின்றன. டென்ட்ஸினிலும், ஷாங்காயிலும், இன்னும் பல இடங்களிலும் அநேகத் தொழிற்சாலைகளும் வியாபார ஸ்தலங்களும் மூடப்பட்டுவிட்டன. ஷாங்காயில் ஒரு டன் சீன எஃகு 8 லட்சம் சீன டாலர் விலையுள்ளபோது, அமெரிக்க எஃகு மூன்று லட்சம் சீன டாலர் விலையாக இருந்தால், எப்படிச் சீன வியாபாரம் பாதிக்கப்படாமலிருக்கும்?

வியாபார ஒப்பந்தங்களைத் தவிர, வாஷிங்டன் நான்கிங்குடன் இதர வகை உடன்படிக்கைகளும் செய்துகொண்டது. இவை, சீனாவை, அமெரிக்க ஏகபோக முதலாளித்துவத்துடன் இன்னும் இறுக்கிப் பிணைத்தன. இன்னோர் உடன்படிக்கையின் மூலம் சீனத் துறைமுகங்களில் அமெரிக்கக் கப்பல்கள் தாராளமாகத் தங்கி, பழுது பார்த்துக் கொள்ளலாம் என்று ஏற்பட்டது. சீனப் பிராந்தியங்களின் மேல் அமெரிக்க விமானப் போக்குவரவு நடத்தும் உரிமை இன்னொன்றின் மூலம் கிடைத்

தது. 1946, டிசம்பர் 16-ம் தேதி ட்ஸிங்டாவ், சின்வாங்டாவ் துறைமுகங்களை அந்நியக் கப்பல்களுக்குத் துறைமுகமாவதைத் தடை செய்திருப்பதாக அறிவித்தார்கள். ஆனால், இந்தத் துறைமுகங்களை அமெரிக்கக் கப்பற்படையின் தளமாகப் பயன்படுத்திக்கொள்ள விட்டுவிட்டார்கள்.

அமெரிக்க அதிகாரிகள் கூறுவது விசித்திரமாயிருக்கிறது. சண்டை போடும் இரண்டு கட்சிக்கும் மத்தியஸ்தர்களாகவே அவர்களுடைய அரசியல் பிரதிநிதிகள் சீனாவில் இருக்கிறார்களாம்; மனிதாபிமான நோக்கத்துடன்தான் கோமிண்டாங் பிற்போக்காளர்களுக்குப் பொருளாதார, பண உதவி செய்கிறார்களாம்; அமெரிக்கத் துருப்புக்களோ ஜப்பானியரை வெளியேற்றுவதற்காக இருக்கின்றனவாம். ஆனால், சீனாவிலோ அமெரிக்காவிலோ, வேறு எங்கேயாயினும் சரி, பொது மக்கள் அமெரிக்கர்களின் செயலை, சீன ஜனநாயகத்துக்கு விரோதமான ஒரு தலையீடு என்றே நினைக்கிறார்கள்.

சீனாவில் தலையிடுவதற்குச் சமாதானமாகச் சமீப காலத்தில் புதுப் புது நோக்கங்களெல்லாம் அப்பட்டமாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்படிச் செய்யாவிட்டால், "கம்யூனிஸ்டுகள் சீனா முழுவதையும் வென்றுவிடுவார்கள் என்று நியூயார்க் ஹெரால்ட் ட்ரிப்யூன் பத்திரிகையும், இன்னும் சில செல்வாக்கு மிக்க அமெரிக்கச் செய்தித் தாள்களும் எழுதுகின்றன. இதனால் "நாடு முழுவதும் ருஷ்ய ஆட்சிதான் நிலைபெறு" மாம்!

என்ன அபாரமான 'சாக்கு'!

இந்த ருஷ்யப் பூச்சாண்டியைக் காட்டிப் பயமுறுத்துவது, ஜப்பானிய ராணுவ அதிகாரிகளுக்கும், ஜப்பான் அந்நிய நாட்டுக் காரியாலயத்துக்கும் மட்டுமே சொந்தமாக இருந்து வந்தது. அவர்கள்தாம், இந்த ருஷ்யப் பிசாசிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொண்டு, அகில உலகத்தையும் சம்ரட்சிக்கப் போவதாகவும், இந்தக் காரணத்தை முன்னிட்டே சீனாவை ஜயித்து, தங்களுடைய சாம்ராஜ்யத்தை அங்கேயும் விஸ்தரிக்க உத்தேசித்திருப்பதாயும் சொன்னார்கள்.

கோமிண்டாங் கட்சியைச் சேர்ந்த பிற்போக்குப் பத்திரிகைகளான செனிபாவ், ஸின்சுன்ஹிபாவ் முதலியன இத்தகைய ஆபாசமான பிரசாரத்தைச் செய்து, பொது மக்களை ருஷ்ய-எதிர்ப்பில் தூண்டிவிட முயலுகின்றன. சங்சுன் ரயில்வேயில் வேலை பார்க்கும் சில சோவியத் தொழிலாளர்களிடம் பிரயோகிக்கப்பட்ட பலாத்காரமும், அடக்கு முறையும் இந்தக் கூற்றை மெய்யாக்குகின்றன சீன ராணுவத்தில் இருக்கும் சில கொள்ளைக்காரர்களால் அநேகச் சோவியத் பிரஜைகள் கொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள்.

எனவே, சீனப் பிற்போக்காளர்களின் தேசிய, சர்வதேசிய அரசியல் கொள்கைகளெல்லாம் வெறும் மண் கோட்டைகள்தாம் என்று தெள்ளத் தெளிவாகப் புலனாகிறது. விடுபெற்ற பிரதேசங்களிலிருந்த மிராசுதார்களின் நிலங்களைப் பங்கு பிரித்துக் கொடுத்ததின் மூலம், சீன ஜனநாயக சக்திகளுக்குக் குடியானவர்களின் ஆதரவு அமோகமாகக் கிடைத்திருக்கிறது. பல்லாயிரக் கணக்கான விவசாயிகளுக்கு நிலங்கள் கிடைத்திருக்கின்றன. சரித்திரத்

திலேயே முதன் முறையாக விவசாயிகள் தங்கள் சாகுபடியில் குறிப்பிட்ட பாகத்தை மிராசுதார்களுக்கு அளிக்கும் வழக்கம் நின்றது.

ஷெசுவான், ஹூனன் போன்ற பல மாகாணங்களில், பட்டினி கிடந்து, நசுக்கப்பட்டுப் போன லக்ஷக்கணக்கான விவசாயிகள் நிலப்பிரபுத்துவ முறையை எதிர்த்துப் புரட்சி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். பிற்போக்காளர்களின் பின்னணிப் படையினர் இவர்களைக் கண்டு அஞ்சுகிறார்கள். சீனப் பொது மக்களின் பெரும் பகுதியினர்—பணக்காரச் சமூகத்தினர் உள்பட—கோமிண்டாங் அரசாங்கத்தின் அந்நிய நாட்டுக் கொள்கை, மக்களின் ஜீவாதார நலன்களுக்கு உலை வைப்பதாகச் சொல்லி அதை எதிர்க்கிறார்கள்.

இதே சமயத்தில், சீன ஜனநாயக சக்திகள் உள்நாட்டு, வெளிநாட்டு விரோதிகளுடன் சண்டையிட்டு, தங்களின் பலத்திலும் எண்ணிக்கையிலும் இன்று வளர்ந்து நிற்கிறது.

சுமார் 50 வருஷங்களுக்கு முன்பு, அமெரிக்க அரசாங்கக் காரியதரிசி ஹே பின்வருமாறு குறிப்பிட்டார்: "உலகத்துப் போராட்டங்களின் கேந்திரஸ்தானமாக இன்று சீனா ஆகியிருக்கிறது. இந்த மகத்தான நாட்டின் சரித்திரத்தைப் புரிந்துகொண்டவர்களே, வரப்போகும் ஐந்து நூற்றாண்டுகளுக்கு உலக அரசியலின் சிக்கலைத் தீர்க்கக் கூடியவர்கள்."

இந்தக் கூற்றுச் சற்று மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கலாம். ஆனால், இதற்குள் சீனாவையும், சீன மக்களையும் பற்றிய விவகாரங்களை அமெரிக்க அரசியல்வாதிகள் இப்போது நன்கு புரிந்துகொண்டிருப்பார்கள். விடுதலை, சுதந்தரம், முன்னேற்றம் ஆகியவை குறித்து மக்கள் செய்யும் போராட்டங்களை நசுக்க முற்படுவது தவறு என்பது இதற்குள் புரிந்துகொள்ள வேண்டாமா?

சீன மக்களை ஹிம்சா மார்க்கத்தில் நசுக்க முற்படும் எந்த முயற்சியும் சீனாவில் இன்னொரு புதிய ரத்த வெள்ளத்தையே உற்பத்தி செய்யும்; சர்வதேசக் கொந்தளிப்புக் கிளம்பும்; நாளாவட்டத்தில், உலகச் சமாதானத்துக்கும், பாதுகாப்புக்கும் கூடப் பங்கம் விளையலாம்.

✲

அரசின் மாறுதல்

மிகவும் பழைய காலத்தில், மக்களுக்கு அரசர்கள் இருக்கிறார்களென்றே தெரியாமல் இருந்து வந்தது. அதற்குச் சிறிது காலம் கழித்து மக்கள் அரசர்களின் மீது பிரியங் கொண்டு அவர்களைப் பாராட்டினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அரசர்களுக்குப் பயந்தார்கள். பின்னால் அரசர்களை அவர்கள் வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். —லா ஓட்ஸ்

கொள்கை அமைப்பு

ஓர் அரசியல் கட்சி தன் கொள்கையை நிதானிக்கும்போது, தனக்கு நிதி திரட்டவேண்டியதையும் ஓட்டுக்கள் சேகரிக்க வேண்டியதையும் உத்தேசித்து, இரண்டு பொருள்களையும் அளிக்கக்கூடிய இரு சாராரையும் அநுசரித்தே நிதானிக்கிறது. நிதி கொடுப்பவர்களை அநுசரித்து இருக்கின்றன அதன் செயல்கள்; ஓட்டுக் கொடுப்பவர்களை அநுசரித்து இருக்கின்றன, அதன் பிரசங்கங்கள். —பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்

வைஸ்ராயின் மனைவி

●

விக்டோரியா சாப்பல்லி

யுத்த காலத்தில் ஸ்ரீமதி மவுண்ட் பேட்டன் செய்த சேவையைப் பற்றி மிகச் சிலரே அறிவர். அவருடைய அந்தச் சேவையைப் பற்றிப் பத்திரிகைகளில் ஏதோ துண்டுத் துணுக்குகளாகச் சில செய்திகள்தாம் வந்தன. அவர் அமெரிக்காவுக்குப் போய்ச் சுற்றுப் பிரயாணம் செய்தார். குண்டு வீச்சினால் பிரிட்டனில் கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கு அமெரிக்க மக்கள் உடையளித்ததுடன், அதைவிட விசேஷமானவையான அநுதாபம், நல்லெண்ணம் முதலியவற்றைக் காட்டியதற்காக, அந் நாட்டு மக்களுக்குப் போகும் இடங்களி லெல்லாம் தம் நன்றியைத் தெரிவித்தார். அரசியல்பிரசங்கங்களைவிட, ஸ்ரீமதி மவுண்ட்பேட்டன் செய்த இந்தக் காரியம் இரு நாடுகளையும் இன்னும் சற்று அணுக்கம் கொள்ளச் செய்தது.

யுத்த காலத்திலும் அதற்குப் பின்பும் கஷ்டப்பட்டு வேலை செய்து, சுற்றுப் பிரயாணங்கள் நடத்தி, சேவை புரிந்த பிரிட்டிஷ் பெண்களில் ஸ்ரீமதி மவுண்ட் பேட்டனும் ஒருவர். 1939-ம் வருஷத்தி லிருந்து அவர் தம் ராணுவ உடையைக் களைந் தெறியாமலே இருப்பதாக அவர் கூறுகிறார். அவரிடம் இருக்கும் 'சிவிலியன்' உடைகள் மிக மிகக் கொஞ்சம். ஏனென்றால் அவை அவருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஸ்ரீமதி மவுண்ட்பேட்டனின் பெயர் எட்வினா ஆஷ்லி என்பது. மௌண்ட் டெம்பிள் பிரபுவின் மகளான இவர் அழகிய தோற்றமுடையவர். 1922-ம் வருஷத்தில் தம் பத்தொன்பதாவது வயதில் இவர், வேல்ஸ் இளவரசரின் மருமகனான லூயி மவுண்ட்பேட்டன் பிரபுவைக் கல்யாணம் செய்துகொண்டார்.

கல்யாணத்துக்கு ராஜ குடும்பத்தினர் வந்திருந்து சிறப்பித்தனர். இந்தக் கல்யாணம் அந்தக் காலத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருந்தது. அவர் திருமணத்திற்கு உடுத்துக்கொண்டிருந்த முகூர்த்த உடைகளைப் பற்றித் தினசரிப் பத்திரிகைகள் மிகமிக விளக்கமாக எல்லாம் செய்திகள் வெளியிட்டன.

இந்த வாலிப ஜோடி டில்லியில் வைத்துத்தான் திருமணம்செய்து கொள்ளப் பரஸ்பர சம்மதத்தைத் தெரிவித்துக்கொண்டது. அதே டில்லியில் வைத்துத்தான் இருவரும் தங்கள் திருமணத்துக்கு இந்த வருஷம் வெள்ளி விழாக் கொண்டாடப் போகின்றனர். இவர்களுடைய மூத்த மகள் பேட்ரிகா என்பவள் பேர்போன் பிரபுவை மணந்துகொண்டாள். இவள் பிறந்தது 1924-ம் வருஷத்தில். இளைய மகள் பமேலா 1929-ம் வருஷத்தில் பிறந்தாள். ஸ்ரீமதி மவுண்ட்பேட்டனின் கவன மெல்லாம் செண்ட் ஜான் ஆம்புலன்ஸ் படையில் கவிந்தது.

விக்டோரியா மகாராணியாரின் கொள்ளுப் பேரனாகிய லூயி மவுண்ட்பேட்டன் பிரபுவை மணந்த ஸ்ரீமதி மவுண்ட்பேட்டன் தம் கணவருக்கேற்ற மனைவியாக அமைந்துள்ளார். ராணுவ சேவையில் இருவரும் ஈடுபட்டுத் தம் அரிய சேவையால் நல்ல பெயர் வாங்கியவர்கள். இந்திய வைஸ்ராயின் மனைவியாகிய இவருடைய அழகான வாழ்க்கைக் குறிப்பு இது.

88870

இந்தப் படையை இந்தியாவில் செண்ட் ஜான் அஸோஸியேஷன் என்பார்கள். இந்தப் படையில் 35,000 தாதிகள் உள்ளனர். 28,000 பேர் ராணுவ சேவைப் பயிற்சி பெறுகின்றனர். இன்னும் பல திறப்பட்ட சமூகங்களி லிருந்து வந்த அநேகப் பகுதி நேர ஊழியர்களும் உள்ளனர். யுத்தம் தொடங்கியதும், செண்ட் ஜான் படையும், செஞ்சிலுவைச் சங்கமும் தற்காலிகமாக ஒன்றாக இணைக்கப்பட்டு வேலை செய்தன. இச் சங்கங்களின் அங்கத்தினர்கள் பிரிட்டன் முழுவதிலும், கடல் கடந்த நாடுகளில் உள்ள யுத்த அரங்கங்களிலும் வேலை செய்கின்றனர்.

படையைத் திறம்பட அமைக்கும் நிர்வாகத்தில் ஸ்ரீமதி மவுண்ட் பேட்டன் மிகவும் வல்லவர். லண்டனில் குண்டு வீச்சு நடந்தபொழுது பாதுகாப்புக் கிடங்குகளிலும், முதல் உதவி பெறும் நிலையங்களிலும் பணியாற்றிய ஆம்புலன்ஸ் படைகளை ஸ்தாபன ரீதியாக நன்கு அமைத்ததற்கு மூலகாரணர் ஸ்ரீமதி மவுண் பேட்டன்தான். இந்தத் திறமையைக் கண்டு இவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிவில் டிவிஷனின் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

1942-ம் வருஷத்தில் இவர் செண்ட் ஜான் ஆம்புலன்ஸ் படையின் தலைமைச் சூப்பிரண்டெண்டெண்டாக நியமிக்கப்பட்டார். ஆகவே, அவருக்கு வேலை அதிகமாகிவிட்டது. பிரிட்டனிலும் கடல்கடந்த நாடுகளிலும் உள்ள அதன் ஸ்தாபனங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டார். 1945 ஜனவரியில் வெளி நாடுகளில் உள்ள ஆஸ்பத்திரிகளையும் அவற்றின் சாதனங்களையும் நேரில் பார்த்தறியப் புறப்பட்டார். சாதனங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களை எதிரிகள் மூழ்கடித்துவிடுவதால், போதிய சாதனங்கள் ஆஸ்பத்திரிகளுக்குக் கிடைக்க முடியாமல் போய்விட்டன. ஆகவே, இவர் ஆஸ்பத்திரிகளைச் சுற்றிப்பார்த்து விட்டு வந்து, அவற்றின் நிலைமையைப் பற்றித் தெரிவித்ததும், அவைகளுக் கெல்லாம் தகுந்த சாதனங்களும் பயிற்சி பெற்ற ஆட்களும், வேறு பல பொருள்களும் அனுப்பப்பட்டன.

மவுண்ட்பேட்டன் பிரபு தென் கிழக்கு ஆசியாவின் தலைமைச் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டதால், அவர் தம் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளத் தாய் நாட்டை விட்டுக் கிளம்ப வேண்டியதாயிற்று. அப்போதும் அவர் மனைவி, தம் ஏகப்பட்ட பொறுப்புக்களுடன் பிரிட்டனிலேயே தங்கிச் சேவை புரியும்படி நேர்ந்தது. ஆனால், 1944 அக்டோபரில் அவர் வெளி நாட்டுக்குப் புறப்பட்டார். அங்கே வெற்றி பெற்று முன்னேறும் நேச நாட்டுப் படைகளின் பின்னணியில், படபடப்போடு வேலை செய்து வரும் ஆஸ்பத்திரிகளில் பணியாற்றினர். பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, ஜெர்மனி முதலிய நாடுகளில் போரினால் காயமடைந்தவர்களுடன் அவர் சம்பாஷணை செய்ததோடு, அவர்களுக்குத் தாய் நாட்டுச் செய்திகளையும் அப்போதைக் கப்போது தெரிவித்துக்கொண்டு வந்தார். ஆஸ்பத்திரிகளையும் நன்கு மேற்பார்வை செய்து வந்தார். எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் விமானங்கள் மூலமும், மற்ற இடங்களில் வசதியற்ற கார்கள் மூலமும் அவர் பிரயாணம் செய்து வந்தார்.

அருமையான பற்கள்!



உங்கள் சொத்துக்களுடன் பற்களையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்!

ஒழுங்கான பற்கள்—வசீகரப் புன்முறுவல்—இவை உங்கள் வியாபாரத் துறையிலும் சமூக வாழ்க்கையிலு மேற்படும் நேருக்கு நேரான பழக்கத்திற்குதவும் செல்வங்கள். ஈறு வியாதிகளை உங்கள் பற்களுககு தீங்கு விளைவிக்க விடாதீர்கள். தினந்தோறும் எஸ். ஆர். டூத் பேஸ்டினால்★ சுத்தம் செய்தால் பற்கள் ஆரோக்கியமான ஈறுகளில் உறுதியாகவும் வெண்மையாகவும் விளங்கும்.

★ பல் வைத்தியர்களிடையே ஈறு வியாதிகளுக்கு கைகண்ட மருந்தென்க் கருதப்படும் ஸோடியம் ரிஸினோலியேட் சேர்ந்தது.

GSR. 28-50 TM D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி
கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

தயாரிப்பவர்கள்:
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

சிலோன் ஏஜண்டுகள்: M. O. A. கனி & கோ,
96, சாதாம் ரோட், கோட்டை, கொழும்பு

1945-ம் வருஷத் தொடக்கத்தில் அவர் தென் கிழக்கு ஆசியாவிலுள்ள ஆஸ்பத்திரிகளையும், 14-வது படையைச் சேர்ந்த வைத்திய ஸ்தாபனங்களையும் மேற்பார்வை செய்யும் பொருட்டும் அவர் நான்கு மாத காலம் சுற்றும் பிரயாணம் செய்தார். இந்தப் பிரயாணத்தில் தம்மோடு கலந்துகொள்ள அவர் முன் கூட்டியே மந்திரி சபையுடனும், சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டு அதன்படி பல தாதிகளைப் பயிற்சி செய்து வைத்திருந்தார். தென் கிழக்கு ஆசியாவில் இவர் தம் கணவரின் கீழ் வேலை செய்யும் இந்தியச் சிப்பாய்களின் பாராட்டுதல்களை அமோகமாகப் பெற்ருர். அப்போது இவர், இந்த மாதிரி தன்னலமற்ற முறையில், பெருமிதத்துடன் தங்கள் மேனியில் பட்ட காயங்களையும், புண்களையும் தாங்கிக்கொண்டவர்களைத் தாம் பார்த்ததே கிடையாது என்று கூறினர்.

கடைசியில், ஜப்பானியர்கள் சிங்கப்பூரிலிருந்தும், தூரக் கிழக்குப் பிராந்தியத்திலிருந்தும் விரட்டப்பட்ட பின்னர், இவர் இங்கிலாந்துக்குத் திரும்பினர். அங்கே, இவர் யுத்தக் கைதிகளாக இருந்தவர்களையும், ஜப்பானிய யுத்தச் சிறை முகாம்களில் இருந்தவர்களையும் தாய் நாட்டுக்கு மீட்கும் பணியில் சேவை செய்ய ஸ்தாபன ரீதியில் பல ஏற்பாடுகளைச் செய்தார். அப்படிக் கைதியாக இருந்தவர்களில் இந்தியர்கள், பிரிட்டிஷ்காரர்கள், மற்றும் குடியேற்ற நாட்டு மக்கள் முதலியவர்கள் ஏராளமாக இருந்தார்கள்.

மிகவும் சமீபத்தில்தான், ஸ்ரீமதி மவுண்ட்பேட்டன் லண்டனுக்கு அருகாமையிலுள்ள ஓர் ஆஸ்பத்திரியை உத்தியோக தோரணையில் சுற்றிப் பார்க்கப் போயிருந்தார். அங்கே, ஸயாம் நாட்டுச் சிறை முகாமில் பார்த்த சுமார் முப்பதுபேர் மலேரியாவினல் கஷ்டப்பட்டுச் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தனர். அவர்கள் இவரைப் பார்த்ததும் தம் பழைய நண்பரொருவனை வாழ்த்துவதுபோல் வாழ்த்தினர்.

இவருடைய கணவர் 1946-ல் பர்மாவின் 'வைகவுண்ட்'டாக (பிரபுவாக) நியமிக்கப்பட்டு, வைகவுண்ட் மவுண்ட்பேட்டன் என்ற பெயர் பெற்ருலும்கூட இவர் ஸ்ரீமதி லூயி என்றுதான் தம்மைச் சொல்லிக்கொள்ள விரும்புகிருர். இப்போது இந்தியாவுக்கு மறு முறையும் வந்திருக்கும் இவர், தம் பழைய நண்பர்களைக் காண மிகவும் பிரியப்படுகிருர்.

எல்லாவற்றையும்விட, அவருடைய கவனம் வைத்திய உதவி சம்பந்தமான திட்டங்களிலும், சுகாதார வேலை சம்பந்தமான திட்டங்களிலும் திரும்பியிருக்கிறது. இந்தியப் பெண்களில் இன்னும் ஏராளமான பேர் இங்கிலாந்துக்குப் போய் வைத்திய சம்பந்தமான சகல துறைகளிலும் பயிற்சி பெற்றுத் திரும்ப வேண்டுமென்பதே அவருடைய விருப்பம். அதற்குத் தகுந்தவர்களைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளும் நோக்கத்துடன் இவர் தம் குமாரி பமேலாவுடன் உருது பாஷையைக் கற்கத் தொடங்கியிருக்கிருர். பமேலா சாரண இயக்கத்தைச் சேர்ந்தவள். ஆகவே, இவள் இந்தியாவின் வாலிபர் இயக்கங்களின் தலைவர்களையெல்லாம் சந்திக்க உத்தேசித்திருக்கிருள்.

நாய்

●

பா ஜின்

என்னுடைய சொந்தப் பெயர் கூட எனக்குத் தெரியாது. அப்படி ஒரு பெயர் உண்டா என்பதும் தெரியாது. என் வயசைப்பற்றிய நிர்ணய புத்தியும் எனக்கில்லை. காரணம், என்னவோ ஒரு போக்கில் ரோட்டு வழியில் அங்காந்து செல்லும் ஒரு பாதசாரி எங்கோ கிடந்த கல்லைக் காரண காரியமின்றி எடுத்து விட்டெறிந்த கணக்கில் தான் நானும் இந்த உலகத்தில் வந்து விழுந்தேன். என் அப்பன் யார், ஆத்தாள் யார் என்பதும் தெரியாது. பழுப்புத் தோலும் தட்டை மூக்கும் கறுப்பு மயிரும் கண்ணுமாக, நீங்கள் பார்க்கும் பல்லாயிரக் கோடி ஜந்துக்களில் ஒன்ருக, ஒதுக்கப்பட்ட கவனிப்பற்ற பொருளாக, ஒரு க்ஷணம் வாழ்வதற்கு மனசோடு விதி விட்டுவைத்த பிராணியாகத்தான் இருந்து வந்தேன்.

எல்லோருக்கும் போலவே, எனக்கும் பிள்ளைப் பருவம் ஒன்று இருந்தது. ஆனல் என்னுடையதோ பல அம்சங்களில் ஈடு எடுப்பற்றது. என்மீது ஒருவரும் கருணை காட்டவில்லை; எவரும் அரவணைக்கவில்லை. என்னுடைய இளங்கால நினைவெல்லாம் வெறும் பசி, பட்டினி, குளிர், கசப்பு - இவையேதாம். எனினும் எனக்கு.........ஞாபகமிருக்கிறது. (காலவரையைப் பற்றித் துல்லியமான நிச்சயமில்லை. எனினும் 'ஒரு நாள்' என்று கொள்ள வேண்டியது தான்.) - அன்றைக்கு ஒல்லியான நெட்டைக் கிழவன் ஒருவன் என் முன் நின்று என்னவோ தலையை ஆட்டினன், ஆட்டி, "இந்த வயசில் நீ பள்ளிக்கூடம் போக வேண்டிய தாச்சே! கல்வி! ஆஹா - அது தானே மனுஷனுக்கு அதி முக்கியமானது!" என்று சொன்னன். என்னவோ கம்மிய குரலில்தான் பேசினன். எனினும் அந்தக் குரலில் மென்மையும் முகத்தில் அழுத்தமும் தெரிந்தன. அவனுடைய புத்திமதி நெஞ்சில் உறைத்தது. உடனே என்னுடைய மேல் வலியையும், குளிரையும் மறந்துவிட்டு, அப்போதே கல்வி கற்கப் புறப்பட்டுவிட்டேன்.

இங்கு மங்கும் பிரம்மாண்டமான கட்டிடங்கள் நிமிர்ந்து நின்றன. சில அரண்மனைகள் போலிருந்தன. சில அவ்வளவு ஒன்றும் பிரமாதமாயில்லை. சின்னக் கட்டிடங்கள் எல்லாம் பாடசாலைகள் என்றும், அங்கே சென்ருல் அறிவு பெறலாம் என்றும் கேள்விப்பட்டேன். அத்தனை நேரமும் நான் அந்தக் கிழவன் என்ன சொன்னன் என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். முடிவாக, எவ்வித அழைப்புமின்றியே, அந்தப் பாடசாலைகளில் ஒன்றினுள் காலடி எடுத்து வைத்தேன்—

இந்தக் கதையை எழுதிய பா ஜின் சீனவின் ஒரு சிறந்த எழுத்தாளர். கோமிண்டாங் ஆட்சியின் அடக்கு முறையால் நாடு கடத்தப்பட்டவர். தம்மை ஓர் அராஜகன் என்று சொல்லிக் கொள்ளுகிருர் பா ஜின். சீனர்களைவிட ஜப்பானியர் இவருக்குப் பெரு மதிப்புக் கொடுத்திருக்கிருர்கள். இந்த அருமையான கதையில் நாயின் குரலும், நாயினும் கேவலமாக்கப்பட்ட மனிதனின் குரலும் சேர்ந்து இரட்டைக் குரலாகப் பேசுகிறது. இந்தக் கதையை ஸ்ரீ ரகுநாதன் அழகாக மொழி பெயர்த்துத் தந்துள்ளார்.

"சீ, வெளியே போ. உனக்கு இதுவா இடம்?" - இதே சத்தந்தான் எங்கே சென்ருலும். மேலும், நான் சிறிசு பெரிசான கட்டிடங்கள் எல்லாம் நுழைந்து பார்த்தேன். எங்கே போனுலும் சரி, அங்குள்ளவர்கள் நயமாய்ச் சொன்னுலும் பயமாய்ச் சொன்னுலும், இதைத்தான் சொன்னுர்கள்: "சீ, வெளியே போ." இந்த வார்த்தைகள் என்னை விளாரால் அறைவதுபோ லிருந்தன. பயத்துடனும் வேதனையுடனும் நான் தலையை இறங்கப் போட்டு, யோசனையில் இறங்கி விட்டேன். அப்போது பள்ளிக் கூடங்களில் பிள்ளைகள் போடும் கூச்சலும் கும்மாளியும் காதில் விழத்தான் செய்தன.

என்னை நானே பார்த்து அதிசயித்தேன். உண்மையிலேயே நான் ஒரு மனுஷப் பிறவிதானு? அதைத் துளைத்துத் துளைத்து ஆராய்ச்சி பண்ணப் பண்ண, என்னுடைய சமுசயங்களும் அதிகரித்தன. தொந்தரவு தாங்க முடியாமல், விடை கண்டு பிடிக்கும் தொல்லையைத் தவிர்க்க எண்ணி, அந்தப் புதிரையே ஒதுக்கித் தள்ள முயன்றபோ தெல்லாம் என்னுடைய காதுகளில் ஏதோ ஒரு குரல் கேலி செய்து சிரித்து, "நீ மனுஷ ராசியோடு சேர்வதென்பது சாதக சாத்தியமானதா?" என்று கேட்பது போலிருந்தது.

தனிமையில் அனுதையாய் ஆதரவற்று நிற்கும் என்னை நிராகரிக்கும் இவ் வுலகில், கடைசியாக நான் ஒரு பாழடைந்த கோயிலைத்தான் சரணடைந்தேன். அங்கேயே இரவைக் கழித்து அங்கு வசித்துவரும் ஆண்டவனிடமே என் புதிருக்கு விளக்கம் கேட்கத் தீர்மானித்தேன். "கடவுள் இரக்க முள்ளவர்; எல்லாம் அறிந்தவர். இந்தப் புதிரை அவர் தீர்த்து வைப்பார்" என்று எண்ணினேன்.

ஒரு காலத்தில் ஆண்டவன் சந்நிதியில் தொங்கிக்கொண் டிருந்த திரை கிழிந்து தும்பாய்க் கிடந்தது. அதற்குப் பின்னல், தன்னந் தனியாய் வெறிச்சோடிப் போய், பாழடைந்து புழுதி படிந்து கையை இழந்த ஊனச் சிலையாய் விக்ரகம் இருந்தது. அந்தக் கடவுள் முன் முழங்காலிட்டு வணங்கினேன். பிரார்த்தித்தேன்.

"எல்லாம் வல்ல இறைவா! என்னுடைய மனசைக்குடையும் இந்தப் புதிரை விளக்கி, என்னைக் காப்பாற்ற மாட்டாயா? நான் ஒரு மனுஷப் பிறவிதானு?"

ஒரே மௌனம். புழுதி மூடிக் கிடந்த அவருடைய வாய் அசையவில்லை. கண்கள் பதிலளிக்கும் பாவனையில் ஒளி வீசவில்லை.

அதன்மேல்,என்னுள்ளாகவே நான் யோசிக்க ஆரம்பித்தேன். 'என்னைப்போன்ற ஒரு பிராணி மற்ற மனிதர்களோடு உறவு கொண்டாடுவது சாத்தியமில்லையா?' என்று சிந்தித்தேன். 'சொகுசு, சுகம், மனுஷ உணர்ச்சிகள், மனுஷனுக்குள்ள சலுகைச் சம்பிரமங்கள் எல்லாம் என்னை ஏற்க முடியவில்லை. மனுஷர்கள் தின்ன முடியாது விட்டெறியும் மிச்சம் மிஞ்சாடிகளைக் கொண்டுதான் நான் உயிர் வாழ வேண்டி யிருக்கிறது. நானும் மனுஷ வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்று கருதினுல், அது மனுஷ சமுதாயத்துக்கே மானக் கேடாகும். நிச்சயமாய், நான் மனுஷ ராசி யில்லைதான்!...

'நான் மனுஷனில்லை யென்றால் இவ் வுலகிற்கு நான் வந்ததற்கு ஏதேனும் ஒரு காரணம் இருக்க வேண்டுமே! இந்தக் 'கட்டை' ஏதோ ஒரு காரியத்துக்காகத் தான் தோன்றி யிருக்க வேண்டும்' என்றெல்லாம் யோசித்தேன்.

உலகில் எதையும் வாங்கவும் விற்கவும் கூடுமே! என்னை நான் என் விலை சாட்டக்கூடாது? இந்த யோசனையின்மேல், விலைச் சீட்டு ஒன்றை முதுகில் தொங்க விட்டுக்கொண்டு, சந்தைக்குச் சென்றேன். என்னை நானே விலை சாட்டி நின்றேன். முதலில் ஓரிடத்திலும் பின்னால் வேறோர் இடத்திலும் நின்றேன். என்னுடைய அங்கங்களின் தெளிவு சுளுவுகளைச் சிமிட்டிக் காட்டி, வாங்க வருபவர்களின் கவனத்தை இழுத்தேன். உண்மையிலேயே யாரேனும் என்னை விலைக்கு வாங்கி, எச்சுப்போன என் உடம்புக்குச்சரியான தீவனமும், ஊட்டமும் கொடுத்தால் விசுவாசத்துடன் நாயாய் உழைக்கத்தீர்மானித்திருந்தேன்.

நாள் முழுவதும் சந்தையிலே காத்துக் கிடந்தேன். இந்த மூலையி லிருந்து அந்த மூலைக்கு- எப்படி யெல்லாமோ ஓடியாடிப் பார்த்தேன். ஆனால், யாரும் பேரம் பேசக்கூட இல்லை. எங்கு சென்றாலும் மனுஷர்கள் என்னை அலட்சியமாகத்தான் பார்த்தார்கள். சில சிறுவர்கள் மட்டும் நிசமாகவே என்னைக் கவனித்தார்கள். அவர்களும் என் முதுகில் கிடக்கும் விலைமுறிச் சீட்டைக் குறும்பு செய்து கூத்தடிக்கும் நோக்கத்துடன்தான் பார்த்தார்கள். பசி யுண்டாகவே, களைத்துப்போய் மீண்டும் கோயிலை நோக்கி ஊர்ந்து சென்றேன். வழியில் தூசி படிந்து மண்மூடிக் கறுத்துக் கிடந்த ஒரு ரொட்டித் துண்டைக் கவ்வும் நினைப்போடு ஒரு சிறிது நின்றேன். அந்தத் துண்டையும் எவ்விதத் தயக்கமுமின்றி எடுத்து விழுங்கிவிட்டேன். அந்த வேளையில் இம்மாதிரிப் பொருள்களையும் நான் தின்ன முடியுமானால், எனக்கு ஒரு நாய் வயிறுதான் இருக்க வேண்டும் என்று பட்டது.

கடவுளின் பாழடைந்த வீடு ரொம்பவும் அமைதியா யிருந்தது. அங்கு என்னைத் தவிர வேறு யாருமில்லை. உலகில் என்னுடைய வடிகட்டின உதவாக்கரைத் தன்மையால் அசந்து இடிந்துபோய் விழுந்து கிடந்தேன். நான் எதுவாயினும் சரி, மனுஷர்களுக்கு என்னால் யாதொரு பிரயோஜனமு மில்லை என்று திட்டமாய்ப் பட்டது. மனம் விட்டு அழுதேன். ஆனால், கண்ணீர்கூட, அபூர்வ வெகுமதியான கண்ணீர் கூட, என்னைப் போன்ற நிச்சய தீர்க்கமற்ற ஒரு ஜந்துவுக்கு எவ்வித சாந்தியும் நிவர்த்தியும் அளிக்கமுடியவில்லை. எனினும், நான் சத்தமிட்டு அழுதுகொண் டிருந்தேன். காரணம, நான் வேறு எதையும் செய்யமுடியவில்லை. கண்ணீரைத் தான் நான் எனக்கு அளித்துக் கொள்ள முடியும். கோயிலில் மட்டும் அழுதுகொண் டிருக்கவில்லை. வெளியே சென்றும், பணக்காரர்களின் வீட்டு நடை வாசல்களிலும் நின்றும் அழுதேன்.

ஒரு பெரிய வீட்டுக் 'கேட்' அருகில் மறைந்து நின்று, பட்டினி கிடந்து, அழுது அழுது விறைத்துப்போய், என்னுடைய கண்ணீரை நானே விழுங்கிக் கொண்டு, வயிற்றில் தோன்றும்

வலியை மறைக்க எண்ணி, ஓங்கி ஊளையிட்டு அழுதேன். அந்நிய உடை யணிந்த ஓர் இளைஞன் அந்தப் பக்கமாய் வந்து வீட்டினுள் சென்றான். ஆனால், அவன் என்னைக் கவனிக்கவே இல்லை. அவனுக்குப் பின் ஒரு நடுத்தர மனிதன் வந்தான்; அவனும் என்னைக் கவனிக்கவில்லை. தெருவில் ஜனங்கள் அங்குமிங்கும் நடமாடினார்கள். அவர்களில் ஒருவரேனும் என்மீது கடைக்கண்கூடச் செலுத்தவில்லை.

நான் உண்மையிலேயே உயிரோடுதான் இருக்கிறேனா என்றாகிவிட்டது.

முடிவாக ஒரு நெட்டை மனிதன் வெளியே வந்தான். அவன் என்னைப் பார்த்தான். ஆனால், எதிர்பார்த்ததற்கு விரோதமாய் என்னை நெருங்கி, சத்தமிட்டு ஏசினான். "சீ! வெளியே போ. இங்கே கிடந்து ஊளை யிடாதே" என்று ஒரு நாயை உதைப்பது போல் உதைத்தான்.

என் கண்ணீரும் ஒரு மட்டும் வற்றிக் காய்ந்துவிட்டது. எனது கால்களை இழுத்துக்கொண்டு மீண்டும் கோயிலுக்குச் சென்றேன். அடிபட்டுக் கிடந்த ஆண்டவன் முன் மண்டியிட்டு, என்னுடைய ஒரே நண்பனை அந்தச் சிலையின் முன் பணிந்து மீண்டும் பிரார்த்தித்தேன்:

"எல்லாம் வல்ல இறைவா! நான் ஒரு மனுஷனாக இல்லையென்பது ஸ்பஷ்டமாகத் தெரிந்த போதிலும், விதி என்னை இங்கு கொண்டுவந்துவிட்டது. நான் உலகில் வாழவேண்டும். நான் ஓர் ஆதரவற்ற அனாதை. எனக்கு அம்மா அப்பா யாரென்று தெரியாது. எனினும், எனக்கு யாரேனும் வேண்டும். நீர் என்னைத் தத்து எடுத்துக்கொள்ளும். நேர்மையும், கருணையும் கொண்ட நீர் என்னை உமது பிள்ளையாக ஸ்வீகரித்துக்கொள்ளும். நான் மனுஷ வர்க்கத்தோடேயே சேர்ந்தவனில்லை; எனக்கு மனுஷனுடைய ஆசாபாசத்தையும் தெரிந்துகொள்ள விருப்பமில்லை."

கடவுள் தம் வாயைத் திறக்கவே இல்லை. எனினும், அவர் என்னை நிராகரிக்க வில்லை. கடைசியாக ஒரு மட்டும் எனக்கு ஓர் அப்பன் கிடைத்தான்!—கையிழந்த, கருணையும் நேர்மையும் இழக்காத சிலை கிடைத்தது!

2

ஒவ்வொரு நாளும் நான் கும்பிக்காகப் பிச்சை யெடுக்க வேண்டியிருந்தது. ஒட்டுப் பொறுக்கித் தின்றவற்றைக் கொண்டு வயிற்றை நிரப்பிய பின் புது உற்சாகத்தோடு வீட்டுக்கு விழுந்தோடி வருவேன். ஏனெனில், முதன் முதலாக அப்போதுதான் இந்த உலகத்துக்கு நானும் உரியவன் என்ற உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. எனக்கு ஒரு தகப்பன் கிடைத்தான்—அவன் அந்தக் கோயிலிலுள்ள கடவுள்! அவன் தன் வாயைத் திறக்க வில்லை என்பது வாஸ்தவந்தான். அவன் சாந்திக்காகவாவது ஒரு வார்த்தை சொல்லவில்லை என்பதும் வாஸ்தவந்தான். எனினும், அவன் எப்போதும் அங்கு இருந்தான். என்னை உதாசீனம் செய்யாத ஒரே ஒருவன் அவன்தான்!......

காலம் விரைந்து பறந்தது. நானும் வளர்ந்தேன்.

நான் மனுஷப்பிறவி யல்ல என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டேன். மேலும், இந்த ஞானோ

தயம் என்னுடைய அபூர்வ வாழ்க்கையையும் விளக்கிச் சொல்லிற்று. எனினும் வேளா வேளைகளில் என் உள்ளத்தில் மனுஷ உணர்ச்சிகள் உள்ளுக்குள் ஊடாடுவதை உணர்ந்தேன். புது உணவுக்கும், சுத்தமான ஆடைகளுக்கும், சுகமும் சொகுசும் கொண்ட அழகான வீட்டுக்கும், பஞ்சு மெத்தைக்கும் எனக்கு இருந்த ஆசையைத் தவிர்க்க முடியவில்லை. 'இவையெல்லாம் மனுஷனுடைய பசிகள்!' என்று எனக்குள் நானே சொல்லிக்கொண்டேன். ஆனால், அவைகளைப் பற்றி நான் எப்படிக் கனாக் காணமுடியும்? இருந்தபோதிலும், கடைப் பல கணிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கவர்ச்சிகரமான பொருள்களைப்பற்றி நினைக்காமலிருக்க முடியவில்லை. மேலும் பெண்கள் என்னை அவர்களுடைய மின் வெட்டும் புன்னகையினால் ஈர்த்தார்கள். அவர்களுடைய பனி நிற அவயவங்களைத் தொட்டு, அவற்றின் வெதுவெதுப்பை அனுபவிக்கும் விதத்தைக் கற்பனை பண்ணிப் பார்த்தேன். நீங்கள் இதை நினைத்துப் பார்க்க முடியுமா?

என்னைப் போன்ற ஒரு பிராணி, அவர்களை அணுகவும் அணைக்கவும் விரும்பினால்! அம்மாதிரியான பயங்கரமான ஆசைகளைக் கடக்க எண்ணினேன். அதற்காக, பிதுர் வழி தெரியாத ஓர் அனாதை யென்பதை நினைத்து நினைத்து ஆசையை ஒதுக்க எண்ணினேன்.

ஆனால், ஒரு நாள் உருவ அமைப்பும் ஒழுங்கும் பொருந்தி, வசீகரமுள்ள ஒரு சின்ன வெள்ளை நாயின் ஜோடிக் கால்கள் என் பக்கமாக நகர்ந்து வருவதைக் கண்டேன். உடனே நான் சொல்லிக்கொண்டேன்: 'இந்தா பாரு! எல்லாச் சலுகைகளும் மனுஷனுக்கு மட்டுந்தான் என்பதில்லை. நாய்களாகிய நமக்கும் சொந்த உரிமைகள் உண்டு. தெரியுமா?'. திடீரென்று பிறந்த தைரியத்தோடு அந்தக் கால்களை அணையத் தாவினேன். ஆனால், திடுக்கிடும் விதமாக யாரோ என்னைப் பிடித்துத் தூக்கி, தரையில் எறிவதை உணர்ந்தேன்.

"உனக்கென்ன பைத்தியமா?" என்று கோபமுடன் சத்தமிட்டு, அவன் உதைத்தான்.

கோயிலுக்குத் திரும்பி வந்த பின், நான் நாயினும் கடைகெட்டவன் என்று வருத்தத்துடன் முடிவு கட்டினேன்.

பல்லுக்கு எமன் சர்க்கரை!

அமெரிக்க டாக்டராகிய பிலிப்ஸ் ஜே என்பவர், பதினெட்டு வருஷ ஆராய்ச்சிக்குப் பின், சர்க்கரையினால் பற்கள் தேய்கின்றன என்று கண்டு பிடித்துள்ளார். அவர் தெரிவிப்பதாவது: எச்சிலில் ஒருவிதக் கிருமிகள் உள்ளன. அவை பல்லின் மேலுள்ள எனாமலைச் சாப்பிடுகின்றன. சர்க்கரையென்றால் அவைகளுக்குப் பெரிய கொண்டாட்டம். பல் தேய்வதைத் தடுக்க வேண்டுமானால் சுமார் ஆறு வார காலத்துக்கு, முதலில் சர்க்கரையே சேர்க்காமல் சாப்பிடத் தொடங்கி அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக சர்க்கரையின் அளவைக் கூட்டிக் கொண்டே வந்தால், எனாமலைத் தின்னும் பூச்சிகளைக் குறைக்க முடியும். இந்த ஆறு வாரத் திட்டத்தினால் ஆறு மாதத்திலிருந்து இரண்டு வருஷ காலம் வரையும் அந்தப் பூச்சிகளை அடக்கி வைக்க முடியும்.

"அப்பனே! கடவுளே! என்னை உண்மையிலேயே அந்த வெள்ளை நாயைப் போல ஒரு நாயாக்கி, மனிதர்களின் அநுதாபத்துக்கும் ஆசைக்கும் ஆளாக்கி விடேன்" என்று பிரார்த்தித்தேன்.

3

பழுப்பு நிறத்தோல், கருமயிர், தட்டை மூக்கு, குட்டை ஆகிருதி—எல்லாம் பெரிய மனுஷர்களைப்போல எனக்கும் இருந்தன. எனினும், உலகில் வெள்ளைத் தோலும் மஞ்சள் மயிரும் உயர்ந்த மூக்கும் நெட்டை உருவமும் கொண்டு மனுஷ வர்க்கத்தில் உயிர் வாழ்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதையும் ஆய்ந்தறிந்து உணர்ந்து கொண்டேன்.

இந்த மனிதர்கள் தெருவில் தைரியமாகப் பாடிக்கொண்டு, சிரித்துக்கொண்டு, கூவிக் கொண்டு, தாங்கள்தாம் அநுபவிக்கப் பிறந்தவர்கள் போல,— பிறர் அவர்கள் பக்கம் நெருங்கக் கூட அஞ்சி ஒதுங்கிச் செல்ல— தெருக்களில் உலாத்தினார்கள். மனுஷ வர்க்கம் துண்டு பட்டுக் கிடக்கிறது என்பதை நானாக உணர்ந்து கொண்டேன்.

இந்த மனிதர்களை எல்லோரும் மதித்தார்கள். அவர்கள் தாம் மனுஷ வர்க்கத்தில் உயர்ந்தவர்கள் என்று கருதினார்கள். நானோ அவர்கள் பக்கம் நெருங்கவே கூடாது என்று கவனமாயிருந்தேன். ஏனெனில், என்னுடைய பிரசன்னம் அவர்களுக்கு எரிச்சலைத் தரும் என்று தெரியும். மேலும், அவர்களுக்கு மேல் உயர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் கண்டு கொண்டேன். இதையும் ஒன்றுக்கு மேற் பட்ட பல தடவைகளில் கவனித்து வர ஆரம்பித்தேன். வெள்ளைக் குல்லாய் போட்டு, நீலக் கரையிட்ட வெள்ளைச் சட்டையணிந்து, வெள்ளைக் கால் சராய் மாட்டி, சதா சிரித்தும் விளையாடியும், சமயங்களில் சண்டையிட்டும், மஞ்சள் நிற மனிதர்களின் தலைகளில் பாட்டில்களை உடைத்தும், பெண்களை இழுத்து முத்தமிட்டும், அவர்களோடு ரிக்ஷாவில் சவாரி செய்தும், பெண்களை மடிமீதிருத்தியும், அவர்களுடைய மென்மையான கால்களோடு உரசியும் செல்லுவார்கள்; நானோ ஒரு நாள் மாலை ஒரு சுவரண்டையமர்ந்து என்னுடைய சகதி படிந்தரத்தக்கால்களைச்சொறிந்து கொண்டிருந்தேன். அப்போது, பசியும் களைப்பும் வழக்கம்போல் உயிரை வாங்க, சில மனுஷர்கள் திடீரென்று என் முன் வந்தார்கள். நான் நிமிர்ந்து பார்த்தேன். அவர்கள் மனுஷ வர்க்கத்தின் உயர்ந்த வர்க்கத்தார் என்பதைக் காணவும் கிடுகிடுத்துப் போனேன்... அவசரமாக நான் தப்பிக்க வழியில்லை. ஆதலால், விதி விட்டதே வழி யென்று இருந்தேன். வெளியே விரட்டுவதற்காக என்னைப் பார்த்துச் சத்தமிட்டார்கள். அவர்கள் என்னை, "சீ, நாயே!" என்று சொல்லி உதைத்தார்கள்.

நாய்? அதைவிடக் கேவலமானது ஒன்றுமில்லை. அன்று இரவு நான் கோயிலுக்குச் சென்றபோது, கடவுளுக்கு— என் அப்பனுக்கு—வந்தனம் செலுத்தினேன். அவர்கள் என்னை நாயினும் கடை கெட்டதாகக் கருதாததற்காக வந்தனம் செலுத்தினேன். எனினும், எனக்கு நம்பிக்கை இல்லை.

என்னை நாய்க்கும் கீழாக மதிக்காம லிருந்தால், நான் நாய்க்குரிய உரிமைகளுக்குப் பாத்திரமாகிறேன். மீண்டும் அந்த வெள்ளை நாய் தனது எசமாட்டியண்டையில் ஒண்டிச்சென்றதை நினைத்தேன்.

அடுத்த தடவையிலேயே தெரு வழியே, அந்த அழகான கால்கள் நகர்ந்து செல்லுவதைக் கண்டேன். அந்த வெள்ளை மனிதர்களின் கண்களில் நான் நாய் தானே! ஆதலால், நான் என் உரிமைகளைக் கொண்டாட ஆரம்பித்தேன். அந்தக் கால்களைத் தொடர்ந்து ஊர்ந்தேன். அவைகளைக் கட்டிப் பிடித்து அணைத்து, அவைகளைத் தவிர மற்றவற்றை மறந்தேன். திடீரென்று எழுந்து குழப்பிய கூச்சலும் குழப்பமும் என் காதுகளில் விழுந்தன. முதுகில் பலத்த அடிகளும் விழுந்தன. நூறுயிரம் கைகள் என்னை இழுபறி செய்தன. எனினும், எதுவும் என்னை உணர்வுக் கிழுக்கவில்லை. நான் அந்தக் கால்களை அணைத்து அநுபவிக்கும் சொர்க்கா நுபவத்தில் மூழ்கிக் கிடந்தேன்.

நான் கண்களைத் திறந்தபோது, அந்தக் குளிர்ந்த இருட்டுக் குகைக்குள் கிடப்பதை உணர்ந்தேன். மனுஷச் சத்தமே அங்கே கேட்கவில்லை. உடம்பெல்லாம் ஒரே வலி. மூச்சுக்கூடத் திணறியது.

கருணையும்நேர்மையும் கொண்ட என் அப்பன்—கடவுள்—அந்த இருளடைந்த கோயிலில் புழுதி மூடிக் கிடக்கிருன். ஆனல், நானே இனிமேல்—இனிமேல் ஒரு போதும்—அந்தக் கையாலாகாத நொண்டிக் கற்சிலையை வணங்க மாட்டேன்—வணங்கவே மாட்டேன்!

✱

தொழில் வளர்ச்சிக்கு இரண்டு விஷயங்கள் மிகவும் அத்தியாவசியம். அந்த இரண்டும் இப்போது இல்லை. அவை என்னவென்ருல், அபேத வாதமும் சர்வ தேசிய வாதமும்தாம். இவை யிரண்டும் இல்லையென்ருல், தொழில் வளர்ச்சி முரண்பட்டுப் போரிட்டு, பல ராக்ஷச வெறிகளையும், அந்த வெறிகளைத் தணித்துக்கொள்ளுவதற்காக ராக்ஷஸ் பலத்தையும் சிருஷ்டித்துவிடும். கடைசியில், ஒரு நூறு வருஷ காலத்துக்குள் தொழிலும் அழிந்துபோகும். இவை எதிர்பார்க்கக் கூடியவையே.

—பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்

கஷ்டத்திலும் புத்தகப் பெருக்கம்

புத்தகம் வெளியிடுவது இப்போது இங்கிலாந்தில் கஷ்டமான காரியமாக இருக்கிறது. இருந்தபோதிலும், 1947-ம் வருஷம் ஜனவரி முதல் தேதியிலிருந்து பிப்ரவரி மாத முடிவுக்குள்ளாக 1966 புத்தகங்களை வெளியிட் டிருக்கிருர்கள். அவற்றில் மொழிபெயர்ப்பாகவும் மறுபதிப்பாகவும் உள்ளவை 300 புத்தகங்கள்தாம்.

சமையல்காரன் சமாசாரம்

சமையல்காரர்களுக்கு, அவர்கள் கேட்கிற சம்பளம் கொடுப்பது என்று ஆரம்பித்தால், அப்புறம் அவர்களுக்குச் சமையல் செய்ய வீட்டில் என்ன மிச்சம் இருக்கும்?

—ஈவினிங் நியூஸ்

ஒவ்வொரு சமையல்காரனும் அரசாங்கத்தை நிர்வகிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

—லெனின்

அதிகாலையில் தோட்டத்தில் அழகான இந்திய ரோஜா முதல் முதலாக மலரும்பொழுது . . . உங்களுக்கு வினோலியா ஒயிட்ரோஸின் நினைவுகள் ஏற்படுகின்றன. மிருதுவான நுரையைத் தரும் வினோலியா உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் புரவச் செய்கிறது—மேலும் மிக மெல்லிய சருமத்தையும் சுகமாகச் சுத்தம் செய்கிறது. அழகை மென்மேலும் அதிகரிக்கச் செய்ய உங்கள் இஷ்டத்திற்குரிய இச் சோப்பைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 22-111 TM VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி: "HARANTALKY"	181, கீழ வாசல் மதுரை	போன் நெ. 219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள்:

மோஹன் ராம் கம்பெனியாரின் சேலைகள், வேஷ்டிகள்

✲

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸ்லிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ் சின்டஸ் வகையரா

✲

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

✲

மொத்த & சில்லரை ஆர்டர்களுக்கு எழுதவும்

அரசியல் வினா—விடை

ஸ்டாலின்—எலியட் ரூஸ்வெட்

கேள்வி: ஐக்கிய அமெரிக்க தேசம் போன்ற ஒரு ஜனநாயக அரசாங்கம், சோவியத் யூனியனில் இருப்பதைப் போன்ற ஒரு பொதுவுடைமை அரசாங்கத்துடன், ஒத்துப்போய்ச் சமாதானமாக வாழ முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? ஒருவருக்கொருவர், அவரவர்களின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிடாமலிருக்க முடியும் என்று நம்புகிறீர்களா?

பதில்: ஆம், நிச்சயமாக நம்புகிறேன். இது சொல்லளவில் சாத்தியமானது மட்டுமல்ல; புத்திசாலித்தனமானதும், காரியத்தில் நடத்திக் காட்டக் கூடியதுமாகும். சோதனை மிக்க யுத்த காலத்திலேயே இந்த இரு அரசாங்கங்களும் ஒன்றுபட்ட போது, எதிரியை முறியடிப்பதற்கு, இவைகளிடையே இருந்த வித்தியாசங்கள் தடையாயிருக்கவில்லை. இதே உறவைச் சமாதான காலத்தில் மேலும் நீடித்துக்கொள்ளுவது முற்றிலும் சாத்தியமே.

கேள்வி: ஐக்கிய நாடுகள் அணுக்குண்டைக் கட்டுப்படுத்த முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியானல், ஆயுத முஸ்தீப்புக்குச் சாதகமான எத்தகைய உற்பத்திச் சௌகரியங்களையும், அணுச் சக்தியின் சமாதான கால உபயோகத்தையும், வளர்ச்சியையும் கூட மேற்பார்வையின் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்றும் நம்புகிறீர்களா?

[இந்தச் சமயத்தில் ஸ்டாலின், "பொதுவாகவேயா?" என்று ஒரு கேள்வி கேட்டார். "ஆமாம், ஆனல் ருஷ்யாவோடு இப்படிப்பட்ட திட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்கும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுதான்" என்றார் எலியட் ரூஸ்வெல்ட்.]

பதில்: சந்தேகமின்றி நம்புகிறேன்; சமத்துவக் கொள்கைக்கு ருஷ்யா எந்த விதத்திலும் விதிவிலக்கு அல்ல. மற்ற எந்த நாட்டையும் போலவே ருஷ்யாவும், மேற்பார்வை, கட்டுப்பாடு முதலிய விதிகளுக்கு உட்பட்டுத்தானிருக்க வேண்டும்.

கேள்வி: உலகச் சமாதானத்துக்கு உலைவைத்துவிடக் கூடியவாறு தற்பொழுது நிலவும் பிரச்னைகளைப்பற்றி விவாதிப்பதற்காக மற்றொரு முப்பெருந் தலைவர்கள் மகாநாடு கூடுவது உபயோகமாயிருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: ஒன்றல்ல, பல சந்திப்புகள் நடைபெற வேண்டுமென நான் நினைக்கிறேன். பல சந்திப்புகள் நடந்தால்தான், மிகவும் உபயோககரமான பலன்களை அளிக்கும்.

கேள்வி: நம் இரு பெரிய நாடுகளின் இடையேயும் இருந்த

1946-ம் வருஷம் டிசம்பர் 26-ம் தேதியன்று ஸ்டாலினிடம் அமெரிக்கராகிய எலியட் ரூஸ்வெல்ட் கேட்ட கேள்விகளையும், அவற்றிற்கு ஸ்டாலின் கொடுத்த பதில்களையும் அமெரிக்க சஞ்சிகை 'லுக்' பிரசுரித்திருப்பதாக ருஷ்யாவின் டாஸ் செய்தி ஸ்தாபனத்துக்குச் செய்தி கிடைத்திருக்கிறதென்றுகூறி, மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்பிய வினா—விடையின் சில பகுதிகளை இங்கே காண்கிறோம்.

நேக உறவும், பரஸ்பர நல்லெண்ணமும் ரூஸ்வெல்ட்டின் மரணத்துக்குப் பிறகு, குறைந்திருப்பதற்கு நீங்கள் என்ன காரணம் கற்பிப்பீர்கள்?

பதில்: இந்தக் கேள்வி அமெரிக்க, ருஷ்யப் பொதுமக்களைப் பற்றிக் கேட்கப்பட்டதாக வைத்துக்கொண்டால், பரஸ்பர நல்லெண்ணத்தில் ஒரு குறைவும் ஏற்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது; அதற்கு மாருக அபிவிருத்தியே ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கங்களைப் பற்றியதானல் பரஸ்பரம் தவருன அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஆகவே, உறவில் ஓரளவு குறைவு ஏற்படவே செய்திருக்கிறது. ஆனல், இந்த உறவு இன்னும் மோசமாக க்ஷீணித்துப் போய்விடுமெனக் கூச்சல் போடுகிருர்கள். சமாதான பங்கமோ, ராணுவக் குழப்பமோ ஏற்படும் என்னும்படி, அப்படியொன்றும் பயப்படத் தேவையில்லை யென்றே நான் எண்ணுகிறேன்.

தற்சமயம் எந்தப் பெரிய சக்தியும் - அது ஆசைப்பட்டால்கூட - இன்னெரு கூட்டுச் சக்தியை— பெரிய சக்தியை—எதிர்த்துச் சண்டையிட, ஒரு பெரிய ராணுவத்தைச் சேகரிக்க, முடியவே முடியாது. ஏனெனில், தற்சமயம் எந்த நாடும் தன்னுடைய மக்களுடைய பலம் இல்லாமல் சண்டையிடுவது சாத்தியமில்லை. யுத்தத்தினல் அலுப்பும் சலிப்பும் அடைந்துள்ள மக்கள், யுத்தத்தில் கொஞ்சம்கூட நாட்டம் அற்றவர்களாக இருக்கிருர்கள்.

மேலும், புதிய யுத்தம் ஒன்று தொடங்குவதற்கு ஒரு நியாயமும் கிடையாது. எதற்காகச் சண்டையிடுகிருேம் என்பது யாருக்குமே தெரியாது. ஆகையினல், நம் உறவில் க்ஷீணம் ஏற்பட்டுவிட்டது என்று அமெரிக்க அரசாங்கத்துப் பிரதிநிதிகள் சிலர் கூறுவதைக் கேட்டுப் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. இவ்வளவையும் கவனித்துப் பார்த்தே, ஒரு புதிய யுத்தம் தொடங்கும் என்ற கூற்று, பொய்யானது என நான் எண்ணுகிறேன்.

கேள்வி: பிரிட்டிஷ், அமெரிக்க அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருக்கும் ஜெர்மன் பிராந்தியங்களில் நாஜி ஒழிப்புத் தீவிரமாக நடக்கவில்லை என்பதைக் கண்டு சோவியத் அரசாங்கம் பயப்படுகிறதா?

பதில்: இல்லை; இதனல் அதிகமாகப் பயப்படுவதற்கோ, கவலைப்படுவதற்கோ காரணம் இல்லை. ஆனல், நம்முடைய பொதுத் திட்டத்தின் ஒரு பகுதி காரியாம்சத்தில் நடத்திக் காட்டப்படாமல் இருப்பது சோவியத் அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லை.

✲

பள்ளிச் சிறுவனின் குறும்புகள்

புத்தர் தம்முடைய மனைவியுடனும் குழந்தையுடனும் சாதாரண வாழ்க்கை நடத்தி வந்தார்; முப்பது வயசானபோது வீட்டைத் துறந்து இன்பத்தைத் தேடிச் சென்ருர்.

விவாகரத்துக்கு முக்கியமான காரணம் விவாகம்தான்.

ஸிவ்வி ஸ்டீரீட்

ஹென்றி போர்டு

"பிரயாணி"

நம்முடைய ஊரில் எந்தத் தெருவில் எந்த மூலையில் போய் நின்றாலும், அங்கே ஒரு 'போர்டு' கம்பெனிக் காரை பார்க்கமுடியும். இந்த அளவுக்கு உலகமெங்கும் கார்களைச் செய்து பரப்பிய, உலகத்தின் பெரிய குபேரர்களில் ஒருவராகிய ஹென்றி போர்டு என்னும் அமெரிக்கக் கிழவர் தம் 84-வது வயதில் அமெரிக்காவில் டீயர்போர்ன் என்ற ஊரில் 8-4-47 அன்று இரவு நள்ளிரவுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாகக் காலமாய்விட்டார்.



போர்டு ஒரு சாதாரணக் குடியானவரின் மகன். சிறு வயதில் பண்ணையில் வேலை செய்தவர். ஆனால், சாகும்போது உலகத்துப் பெரும் பணக்காரர்களில் ஒருவராக மாறிவிட்டார். அவருடைய சொந்தச் சொத்து சுமார் இருபது கோடி டாலர் இருக்கும் என்று கருதப்படுகிறது. அவருடைய மோட்டார் உற்பத்திக் கம்பெனிகளின் பெறுமானம் எழுபத்தைந்துகோடி டாலர். தம்முடைய சொந்த முயற்சியினால், தம் அறிவின் திறமையால் இந்தக் குபேர சம்பத்தைப் பெற்றார் போர்டு.

சாதாரண ரத்தக் கொதிப்பின் காரணமாக மாண்டார் போர்டு. சாகும் தறுவாயில் அவருடைய 80-வயது நிறைந்த மனைவி கிளாராப்ரயாண்ட் அவருக்கு அருகே இருந்தார். தம் பண்ணையில் வேலை செய்யும் சிறுவனாக இருந்தபோது போர்டு இந்த அம்மாளைக் கல்யாணம் செய்து கொண்டார். போர்டினுடைய தொழிற்சாலை அவருடைய மனைவி, மருமகள், மருமகன் வயிற்றில் பிறந்த ஹென்றி (இப்போது அவர்தாம் தொழிற்சாலைக் கம்பெனித் தலைவர்) பென்ஸன், வில்லியம், ஜோஸ்பைன் ஆகியோருக்குச் சேரப் போகிறது.

அவருடைய மூத்த குமாரன் எட்ஸல்போர்டு 1919-ல் கம்பெனித் தலைவரானார். ஆனால், 1943-ல் காலமாய்விட்டார். ஆகவே போர்டு பழையபடியும் பொறுப்பைத் தாமே வகித்தார். ஜப்பானுடன் நடந்த யுத்தம் முடிந்ததும் தம் பேரப்பிள்ளை இரண்டாவது ஹென்றி போர்டிடம் பொறுப்பை ஒப்புவித்து விட்டார்.

'அஃகமும் வாழ்வும் அகத்துமட்டே' என்று தம் குபேர சம்பத்தை விட்டுவிட்டுக் காலமான உலகப் பணக்காரராகிய ஹென்றி போர்டின் வாழ்க்கைக் குறிப்பு இது.

போர்டு 1863-ம் வருஷம் ஜூலை மாதத்தில் மிச்சிகனிலுள்ள டியர்போர்ன் என்ற ஊரில் பிறந்தார். சிறு வயதில் பண்ணையில் வேலை செய்யும் சிறுவனாக இருந்தார். என்ஜினீரிங் படித்து என்ஜினீராக இருந்தார். சாதாரண மனிதனும் வாங்கக் கூடியவாறு கார்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்று அவருக்கு உண்டான ஆசையினால் மலிவான விலைக்கு எண்ணிலடங்காத கார்களைச் செய்து குவித்தார். தொழில் செய்யும் வழியெல்லாம் அவருடைய சொந்த வழிதான். அவருடைய தொழிற்சாலைகளில் லட்சம் பேர் வேலை செய்கிறார்கள். தொழிலாளர்கள் சங்கம் சேருவது அவருக்குப் பிடிக்காது. தொழிற்சங்கங்களை அவர் வெறுத்தார். தொழிலாளர்களுக்கு அவர் தம் லாபத்தில் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுத்தார்.

முதல் மகாயுத்தம் நடைபெற்ற போது இவர் யுத்த நாடுகளுக்கிடையே சமாதானம் ஏற்படுத்த எண்ணி ஐரோப்பாவுக்கு போனார். இந்த முயற்சியில் இவர் பெற்ற தோல்வி இவரை மிகவும் பாதித்துவிட்டது.

ரூஸ்வெல்ட் அமெரிக்காவில் தம் புதிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தபோது, அதை எதிர்த்தார் போர்டு. ரூஸ்வெல்ட்டின் திட்டம் தொழிற் சங்கங்களை அங்கீகரிப்பதைக் கண்டு, அதற்குப் பரிபூரணமாக எதிர்ப்பு காட்டினார். 1933-ல் இந்தப் போராட்டம் தொடங்கியது. அதன் பயனாகப் போர்டின் சாமான்கள் எல்லாம் பகிஷ்கரிக்கப்பட்டதோடு அவருடன் செய்துகொள்ளப்பட்ட சர்க்கார் ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்பட்டன. அப்புறம் 1934-ல் போர்டு திடீரென்று பணிந்து கொடுத்துவிட்டார்.

75 லட்சம் டாலர் செலவு செய்து தொழிலாளர்களுக்காக டிட்ராயிட் என்னும் ஊரில் போர்டு ஒரு பிரம்மாண்டமான ஆஸ்பத்திரி கட்டிக் கொடுத்துள்ளார். அமெரிக்கத் தொழிலாளர்கள் சம்பளக் கமிஷனில் போர்டை ஓர் அங்கத்தினராக்கினார் காலஞ்சென்ற அமெரிக்கத் தலைவர் வில்ஸன்.

"என் வாழ்க்கையும், தொழிலும்" என்று ஒரு புத்தகம் எழுதி 1925-ம் வருஷம் போர்டு வெளியிட்டார். "இன்றும் நாளையும்", "முன்னேக்கிச் செல்லுதல்" என்ற புத்தகங்களையும் போர்டு எழுதி வெளியிட்டிருக்கிறார்.

போர்டின் சவ அடக்கம் டிட்ராயிட்டில் உள்ள சென்ட்பால் எபிஸ்கோபல் மாதா கோவிலில் 10-4-47 வியாழனன்று நடைபெற்றது. அடக்கம் செய்யும் மட்டும் கிரீன்பீல்டு என்ற கிராமத்தில் உள்ள பொருட்காட்சிச்சாலையின் பொழுது போக்கு மண்டபத்தில் இவர் சடலத்தைக் கிடத்தியிருந்தார்கள். இந்தக் காட்சிச்சாலையைச் சிருஷ்டித்து போர்டு தம் வயோதிக காலத்தில் உல்லாசமாகப் பொழுதைக் கழித்து வந்தார். இவருடைய மரணத்துக்குத் துக்கம் தெரிவிக்கும் முறையில் உலகிலுள்ள போர்டு கம்பெனிகளெல்லாம் போர்டின் சவ அடக்கம் முடியும் மட்டும் மூடப்பட்டிருந்தன. அவற்றில் கட்டியிருந்த கொடிகளும் இறக்கமாக தொங்கவிடப்பட்டன.

ஜார்ஜ் டிமித்ராவ்

●

ஆர். எச். நாதன்

1933-ம் வருஷம் ஜெர்மனியில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த லிப்ஸிக் விசாரணை நடந்தது. அதிகாரத்தை அநியாயமாகக் கைப்பற்றியவுடன் கம்யூனிஸ்டுக் கட்சியையும், ஸோவியத் யூனியனையும் எதிர்ப்பதன் மூலமாக உலகப் பிற்போக்காளர்களின் ஆதரவைத் திரட்டத் திட்டம் போட்டான் ஹிட்லர். ஸோவியத் எதிர்ப்பு, கம்யூனிஸ்டு எதிர்ப்பு ஆகிய திரைகளுக்குப் பின்னல் உலகை அடிமைப்படுத்தும் திட்டத்தைப் போட்டிருந்தான் ஹிட்லர்.

கோயரிங், கோபல்ஸ் கும்பல்கள் ஜெர்மானிய சட்ட சபையைத் தீ வைத்துப் பொசுக்கி, "தீவட்டிக் கொள்ளைக்காரர்களான கம்யூனிஸ்டுகள்தாம் இந்த நாச வேலையைச் செய்தார்கள்" என்று அபாண்டப் பழியைச் சுமத்தினர்கள்.

லிப்ஸிக் விசாரணை நடக்கும் பொழுது உலக மக்களின் கவனத்தை ஒரு மனிதர் கவர்ந்திருந்தார். என்? வழக்காட வக்கீல் கிடையாது; தாமே திறமையாக வாதாடினர். அது மாத்திரம் அல்ல. குற்றவாளியாகக் கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டார். ஆனல், குற்றம் சாட்டுகிறவராக மாறினர் கோர்ட்டில்!

"கம்யூனிஸ்டுகளை வேரறுப்போம்" என்று தொண்டை கிழியக் கத்தினர்கள் நாஜிகள். "கம்யூனிஸ்டுகளை அழிக்கவே முடியாது. ஆனல், விரைவில் பாஸிஸ்டுகள்தாம் குழி வெட்டிப் புதைக்கப்படுவார்கள். இது நிச்சயம்" என்று இடி முழக்கம் செய்தார், நாஜிகளின் கோர்ட்டில் தனித்து நின்று.

பிற்போக்குக் கும்பல்கள் பாஸிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே நடக்கும் போராட்டமாக மாற்ற முயற்சி செய்தார்கள். ஆனல், பாஸிஸ்டுகளுக்கும், சுதந்தரத்தையும், ஜனநாயகத்தையும் விரும்பும் பொதுமக்களுக்குமிடையே நடக்கும் போராட்டமாக மாற்றினர் அன்று அஞ்சா நெஞ்சம் படைத்த போர்வீரர். உலகம் முழுவதும் அலை அலையாகப் பொது ஜனக் கிளர்ச்சி பொங்கி எழுந்தது. தொழிலாளர்களும் விவசாயிகளும் மத்திய தர வகுப்பார்களும், அறிவாளிகளும் இந்த "விடுதலை"க் கிளர்ச்சியில் லட்சக் கணக்கில், கோடிக் கணக்கில் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

கடைசியில் நாஜிகளின் அபாண்டப் பழிகள் சுக்குநூறாக உடைந்து போயின. வழக்குத் தள்ளுபடியாயிற்று. முதற் கோணல் முற்றும் கோணல் என்பதுபோல், முதல் முயற்சியில் பாஸிஸ்டுகள் படுதோல்வியடைந்தார்கள். இறுதியில் மண்ணோடு மண்ணாய்ப் போனர்கள்.

பாஸிஸ்டு எதிர்ப்பாளர்களின் வெற்றிக்கு அங்குரார்ப்பணம் செய்தவர் யார்?

கொள்கைப் பிடிப்பினல் எதற்கும் அஞ்சாதிருக்கும் எமகாதர்கள் சிலர் உலகில் உண்டு. அவர்களில், மரணத்துடன் நேருக்கு நேர் நின்று மல்லாடிய ஜார்ஜ் டிமித்ராவ் தலைசிறந்தவர். உலகின் தலைவர்களில் ஒருவராய்ப் புகழ் பெறுவதற்குப் பல்கேரியா பெற்றுக் கொடுத்த அந்த வீரரின் வாழ்க்கைக் குறிப்பு இது.

அவர்தாம், அன்று தூக்குமேடையிலே ஏறும் தறுவாயிலிருந்தவர்; இன்று பல்கேரியா தேசத்தில் பிரதம மந்திரியாக அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் ஜார்ஜ் டிமித்ராவ்தாம்.

"நான் பல்கேரியத் தொழிலாளர் வர்க்கத்தின் புதல்வன்" என்று லிப்ஸிக் விசாரணையின் போது பெருமையாகப் பேசினர். பெரிய குடும்பம்; ஆனல், பரம ஏழைக் குடும்பம். வறுமையால் வாடும் தொழிலாளர் குடும்பத்தில்தான் 1882-ம் வருஷம் ஜூன் மாதம் 18-ம் தேதி ஜார்ஜ் டிமித்ராவ் பிறந்தார்.

சின்னஞ்சிறு வயதிலேயே தணிக்கமுடியாத அறிவுத் தாகம் ஏற்பட்டது. ஆனல், பன்னிரண்டாவது வயதில் தமது பெரிய குடும்பத்தைப் பராமரிக்கும் மிகப் பெரிய பொறுப்பு அவர் தலையில் விழுந்தது. செகண்டரி பள்ளிக்கூடத்தில் இரண்டாவது வகுப்பு வரையிலும்தான் படித்தார்.

அச்சாபீசில் அச்சுக் கோப்பவராக வேலை பார்த்துவந்தார். அப்பொழுது, வீட்டில் ஒரு சிறு விளக்கை வைத்துக்கொண்டு இரவு நெடுநேரம் படித்துக் கொண்டிருப்பார். கல்வி கற்க விடாமல், சின்னஞ்சிறு வயதில் அற்பக் கூலிக்காகத் தன்னைக் கஷ்டப்பட்டு வேலைசெய்யும்படி நிர்ப்பந்தித்த சமூக முறையைப் பற்றிச் சிந்தித்தார்; பல புத்தகங்களைப் படித்தார்; அறிஞர்களோடு வாதம்செய்தார். பாட்டாளி மக்களின் புரட்சி விளக்கு அவருக்கு வழிகாட்டிற்று. தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டார். பதினைந்தாவது வயதிலேயே ஸோபியா நகரத்திலுள்ள அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர்களில் தலை சிறந்தவராகத் திகழ்ந்தார்.

டிமித்ராவ் 31-வது வயதில் பல்கேரியா சட்டசபை அங்கத்தினரானர். அப்பொழுது, அச்சுத் தொழிலாளியாக இருக்கும் பொழுது நடந்த ஒரு சம்பவத்தைக் கிளப்பினர் பிரதம மந்திரி. அதாவது 1899-ம் வருஷம் மே தினம் கொண்டாடப்பட்டது. ஸோபியா நகரத்தில் அப்பொழுது பிரதம மந்திரியாக இருந்தவர் தொழிலாளர்களைத் தாறுமாருகத் திட்டினர். அந்தப் பகுதிகளை அச்சுக் கோக்கும் பொழுது டிமித்ராவ் எடுத்து விட்டார்.

சின்னஞ் சிறு குழந்தையாக இருக்கும்பொழுதே முதன் முதலில் பிற்போக்காளர்களை எதிர்த்துப் போராடியவர் டிமித்ராவ்.

பின்னர் பல்கேரியாவிலுள்ள பாட்டாளி மக்களின் தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்தார்.

1923-ம் வருஷம் பல்கேரியாவில் புரட்சி நடந்தது. அதற்கு டிமித்ராவே தலைமை தாங்கினர்.

ஜார்ஜ் டிமித்ராவின் வாழ்க்கைச் சரித்திரம் போராட்டத்தின் சரித்திரம். பன்னிரண்டாவது வயதிலிருந்தே புரட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டார். பல்கேரியா சர்க்கார் அவரைப் பன்முறை சிறையிலடைத்தது. பின்னர் தேசப் பிரஷ்டம் செய்தது. தேசப் பிரஷ்டம் செய்த பின்னர் மூன்ருவது கம்யூனிஸ்டு இண்டர் நேஷனலின் பொதுக் காரியதரிசியானர். ஆம், ஒரு புரட்சிக்காரருக்குக் கிடைக்கும் உன்னதமான பதவி அது.

டிமித்ராவின் குடும்பமே புரட்சிக் குடும்பம். தாயும், தந்தையும், அவருடைய ஐந்து சகோ

தார்களும், இரண்டு சகோதரிகளும் புரட்சிக்காரர்கள்; மனைவியும்கூட.

கோன்ஸ்டன்டைன் என்ற சகோதரர் அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசியாக இருந்தார். பாட்டாளி மக்களின் போராட்டங்களில் முக்கியப் பங்கெடுத்துக்கொண்டார். ஆகவே, 1913-ம் வருஷம் நடந்த பால்கன் யுத்தத்தின்போது, பல்கேரியா சர்க்கார் அவரைக் குண்டு மாரி பொழியும் போர்க்களத்தின் முன்னணிக்கு அனுப்பிற்று. போர்க்களத்தில் கோன்ஸ்டன்டைன் இறந்துபோனர். "அவன் புதை குழிகூட எங்கே இருக்கிறது என்பது எனக்குத் தெரியாதே!" என்று அவர் தாய் பராஸ்கீவா டிமித்ராவ் அடிக்கடி கூறி வருந்துவாள்.

இரண்டாவதாக முதலாளித்துவத்திற்குப் பலியானவர் நிக்கோலா டிமித்ராவ். 1905-ம் வருஷம் ருஷ்யாவில் புரட்சி வெடித்த பொழுது, ருஷ்யாவிற்குச் சென்று, புரட்சிப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டார். 1908-ம் வருஷம் ஜார் கொடுங்கோலனின் உக்ரானு (ரகசியப் போலிஸ்) நிக்கோலாவைக் கைது செய்து, ஸைபீரியாவுக்குத்தேசப்பிரஷ்டம்செய்தது.

1917-ம் வருஷம் புரட்சி வெடிக்கப் போகும் தறுவாயில் சைபீரியா பனிக்குப் பலியானர் நிக்கோலா டிமித்ராவ்.

மூன்ருவது சகோதரர் டோடோர் டிமித்ராவை 1923-ம் வருஷம் ஸோபியா ரகசியப் போலிஸார் கைது செய்தனர். ரகசியங்களை வெளியிட மறுத்ததற்காகப் போலிஸார் அவரைச் சித்திரவதை செய்து கொன்ருர்கள்.

> **முன்னேறுகிறவனுக்கு**
>
> தன் குறைகளை ஒப்புக்கொண்டு பச்சாதாபப்படுகிறவன் பரிபூரணத்துவத்தை நோக்கி வேகமாகச் செல்லுகிருன்; தன்னைப் பூரணமடைந்தவன் என்று நினைத்துக் கொள்ளுகிறவன் சர்வ வல்லமை வாய்ந்தவனைப் பார்த்து முன்னேறுவதில்லை.
>
> —ஜலால் உத்தீன்ருமி
>
> **மகனை நடத்தும் முறை**
>
> உங்கள் மகனுக்கு ஐந்து வயது ஆகுமட்டும் அவனை அரசனைப் போல் நடத்த வேண்டும். அப்புறம் பத்து வருஷ காலத்துக்கு அவனை மாணவனைப் போல் நடத்த வேண்டும். அவனுக்குப் பதினறு வயது நிறைந்தபின் அவனை நண்பனைப் போல் நடத்த வேண்டும்.
>
> —சௌராஷ்டிர நீதி சம்பு

பின்னர், சகோதரி லெனவை வலைபோட்டுத்தேடத்தொடங்கினர்கள் போலிஸார். ஆனல், லென அகப்படவே யில்லை. "டோடோரைச் சித்திரவதை செய்தார்கள். ஆயினும்கூட அவன் ரகசியத்தை வெளியிடவேயில்லை. அதேமாதிரியாக லெனவைக் கண்டு பிடிக்க முடியாது; கண்டுபிடித்தாலும் அவளிடமிருந்து ஒரு வார்த்தையைக் கூடக் கறக்க முடியாது" என்று போலிஸாரிடம் பராஸ்கீவா, அடிக்கடி கூறுவாள்.

தாயையும் போலிஸ்காரர்கள் அடிக்கடி அடித்துத் துன்புறுத்தினர்கள்.

டிமித்ராவின் மனைவியும் ஒரு தொழிலாளி. ஒரு சாதாரணத் தையல் தொழிலாளியாக இருந்து, பின்பு பல்கேரியாவில்

முக்கியமான தொழிலாளர் தலைவியாகத் திகழ்ந்தாள். லிப் ஸிக் விசாரணை நடக்கும்போது இறந்துபோனள்.

லிப்ஸிக் விசாரணை நடக்கும் பொழுது, பாஸிஸ்டுகள் பல் கேரியா மக்களை நாக்கில் நரம் பில்லாமல் திட்டினர்கள்.

"காட்டுமிராண்டிகளாகவும் நாகரிகமற்றவர்களாகவும் திகழ்கிறவர்கள் பல்கேரியா மக்களல்ல. அதிகாரத்தி லிருக் கும் பல்கேரியா பாஸிஸ்டுகள் தாம்" என்று ஆணித்தரமாகப் பதில் கொடுத்தார் டிமித்ராவ்.

லிப்ஸிக் விசாரணை தூள் தூளாக உடைந்துபோன பிறகு பல்கேரியாவில் அதிகாரத்தி லிருந்த பாஸிஸ்டுகள் டிமித்ரா வைப் பல்கேரியாவுக்குள் அனு மதிக்க மறுத்தார்கள். உடனே ஸோவியத் யூனியன் டிமித் ராவைத் தனது பிரஜையாக அணைத்துக்கொண்டது. யுத்தம் முடியும் வரையிலும் ஸோவியத் யூனியனிலேயே இருந்தார்.

யுத்தம் முடிந்த பிறகு, பல்கேரியா மக்கள் தங்கள் தேசத்தி லுள்ள பாஸிஸ்டுகளைக் குழி வெட்டிப் புதைத்து, டிமித் ராவைத் திரும்பவும் பல்கேரியா வுக்கு இரு கைகளையும் கூப்பி அழைத்தார்கள். அத்துடன், அவருக்குப் பிரதம மந்திரி பதவி யையும் அளித்தார்கள்.

டிமித்ராவின் கனவு இன்று நனவாகிவிட்டது. முதலா ளித்துவத்தையும், நிலப்பிரபுத்து வத்தையும் ஒழித்து, இன்பம் கொஞ்சும் சுதந்தர, சுபிட்ச பல்கேரியாவைச் சமைக்கப் பாடு பட்டார், பன்னிரண்டாவது வயதிலிருந்து அறுபதாவது வயது வரையிலும். இப்பொழுது வெற்றியும் பெற்றுவிட்டார். டிமித்ராவின் தலைமையி லுள்ள பல்கேரியா சகல துறைகளிலும் இப்பொழுது தலை தெறிக்கும் வேகத்தில் முன்னேறிச் செல்லு கிறது.

✲

தலை வணங்குகிறேன்

மனிதனுக்கப்பால் உள்ள எதைப்பற்றியும் எனக்குச் சிந்தனை கிடை யாது. ஏனெனில், மனிதன்—மனிதன் மட்டுமே—பல பொருள்களைப் படைக்கிறன்; பல எண்ணங்களை எண்ணுகிறன்; அவன் ஒரு மாந்தி ரீகன்; இயற்கையின் பல சக்திகளை அடக்கி ஆளப்போகும் வருங்காலத் தலைவன். இவ் வுலகி லுள்ள மிக அழகிய பொருள்களை உருவாக்கியது மனித உழைப்பும், மனிதனின் கைத்திறனும்தாம். நம்முடைய எண்ணங் களும், கற்பனைகளும் விஞ்ஞானம், கலை முதலியவற்றின் அடியாகப் பிறந்தவைதாம். மனிதக் கற்பனையின் பலன்களுக்கு அப்பால், உலகத் தில் உள்ள மற்ற எவற்றைப் பற்றியும் எண்ணிப் பார்க்க முடியாது. ஆகவே, மனிதனுக்குத் தலை வணங்குகிறேன்.

—மாக்ஸிம் கார்க்கி

பெண் யார் ?

பெண் கடவுளின் ஓர் ஒளிக் கதிர்; கேவலம் மனைவி மாத்திரமல்ல. அவள் சிருஷ்டிகர்த்தாவின் ஆத்மா; கேவலம், ஜீவஜந்து மாத்திர மல்ல.

—ஜலால் உத்தீன்ரூமி

ஆசிய மாநாட்டுக் காட்சிகள்

1. புராண கிலாவில் (ஆசிய மாநாடு கூடுவதற்கு முன்) தலைவர்கள். 2. திபேத்துப் பிரதிநிதிகளுடன் வைஸ்ராய் தம்பதிகள் சம்பாஷணை. 3. சிலோன் பிரதிநிதிகள். 4. பர்மியப் பெண் பிரதிநிதிகளான நா ஓ மே, கீ மியோவ்ச்சி. 5. இந்தோனேஷியப் பிரதமர் டாக்டர் ஷாரியரும், பண்டித நேருவும். 6. ஷாரியருக்குச் சரோஜினி தேவியின் வரவேற்பு. 7. மாநாட்டுப் பிரதிநிதிகளில் ஒரு பகுதியினர். 8. மாநாட்டின் கடைசி நாளன்று மகாத்மா பேசுகிறார். 9. மாநாட்டுப் பிரதிநிதிகளில் மற்றொரு பகுதியினர். 10. மாநாட்டுக்கு வந்த வாங்கோலி மகாத்மாவுடன் அளவளாவுகிறார். 11. கொரியாப் பிரதிநிதி டாக்டர் வாங்கோலி நேருவுக்கு ஒரு பொம்மையைப் பரிசளிக்கிறார்.





TURKEY

MALAYA


MONGOLIA
TURKMENISTAH

CHICAGO
CHICAGO

காலம் மாறும்

●

பண்டித ஜவாஹர்லால் நேரு

நாம் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தை ஆதரித்தோம். ஏனெனில், உலக சமாதானத்துக்கும் உலக மக்களின் ஒத்துழைப்புக்கும் அது அடிகோலும் என்று எண்ணினேம். ஆனல், ஐக்கிய நாடுகள் ஒன்றுபட்டு வேலை செய்ததாகவே தெரியவில்லை. ஒத்துழைக்கும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் பரஸ்பர நல்லெண்ணத்துடன் உழைத்து, பிறருக்கு முன்மாதிரியாக இருக்கவில்லை. இந்தச் சில்லறைத் தகராறுகளுக்குப் பிறகு, உலக சமாதானத்தை நோக்கி அவை முன்னேறும் என்று நம்புகிறேன்.

மேல் நாட்டு நாகரிகம் மனித வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பெரிதும் துணை புரிந்திருக்கிறது; இருந்த போதிலும் அது சில சந்தர்ப்பங்களில் நம்மைச் சிறுமைப்படுத்தி விலங்குகளுக்குச் சமமாகக் கீழே தள்ளிவிடுகிறது. அதிலுள்ள குறைபாடு என்ன? அது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை, அறிவு வளம் பெற்ற ஆசியா, மேலை நாட்டு நாகரிகத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம். முதலில் ஆசிய மக்களாகிய நாம் ஆசிய தர்மத்தை நன்கு உணர வேண்டும். ஏனென்ருல், நாமே நன்ருகப் புரிந்துகொள்ளாவிட்டால், பிறருக்கு எடுத்துரைப்பது எளிதல்ல. கடந்த காலத்திலும், கடந்த தலைமுறையிலும் நாம் நமது பெருமையை உணராமல் இருந்துவிட்டோம். நாம் நிலைமையை உணர வேண்டும்; பிறகுதான் மற்றவர்களும் நம்மைப் புரிந்துகொள்வார்கள். இப்பொழுது நாம் நம்முடைய ஸ்தானத்தை உணர்ந்துகொண்டு வருகிருேம். ஆகவே, ஆசியா தேசப் படத்தில் இருக்கும் ஒரு நாடு, அதுதான் ஏகாதிபத்திய வல்லரசுகள் சுரண்டுவதற்குப் போட்டியிடும் ஒரு பரந்த பூமி, தங்களுடைய உற்பத்திச் சாமான்களை விற்றுப்பணமாக்கும் 'மார்க்கெட்' என்னும் எண்ணத்தை விட்டு, ஆசியாவில் வசிப்பவர்களும் மனிதர்கள் தாம், அவர்களுக்கென்று கலாசாரமும் பழம் பெருமையும் உண்டு, அது வருங் காலத்தில் உன்னதமான நிலையில் இருக்கப் போகும் மகத்தான நாடு என்றும் உலகம் தெரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டது.

வருங்காலத்தில் நாம் உன்னத நிலையில் இருக்கப் போகிருேம். ஆகையினுல், நாம் இப்பொழுது இருக்கும் நிலையைத் தற்காலிகமான ஒன்று என்றுகூடச் சொல்லலாம். உலகம் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. சதா மாறுதல்கள் அடைந்துகொண்டுதானிருக்கிறது.

ஆசிய நாடுகள் மகாநாட்டின் முடிவுரையில் பண்டித நேரு கூறியது.

✲

நவீன யமன்

அமெரிக்காவில் நடந்த யுத்தங்களில் எல்லாம் இறந்தவர்களைவிட, மோட்டார் யந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை மோட்டாரில் அடிபட்டு இறந்தவர்கள் அதிகம்.

—சார்லட் (என். ஸி.) அப்ஸர்வர்

புத்தக உலகம்

மனைவி: [ஆசிரியர்: தமிழ் வாணன், வெளியீடு: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி; சென்னை 5. விலை அணா 12]

சிரமமான கட்டுக் கோப்பில் இப்படிப்பட்ட கதைகளை எழுதித் தம் புகழை நிறுவியுள்ள எழுத்தாளர் கூட்டத்துக்கு இந்தப் புதிய சிறுகதை எழுத்தாளரை வரவேற்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். நாற்கோணங்களில் நின்று நோக்கி, அறிந்த நான்கு விஷயங்கள் 'மனைவி' யென்ற இந்தக் கதையை உருவாக்குகின்றன. கதையமைப்புப் படாடோப மின்றி இருக்கிறது; மனோதத்துவ அம்சம் அனுதாபத்துடனும், பரிச்சயத்துடனும் கையாளப் பெற்றுள்ளது. இதோ துடிப்பு நிறைந்த கலைஞர் ஒருவர் இருக்கிறார்; தமிழ் மக்களுக்கு நான் கூறுகிறேன்: தமிழ் வாணன் எழுத்துக்களைத் தவறாமல் படியுங்கள்.

—சாக்கியன்

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

நேதாஜி போர் முனைக் கடிதங்கள்: [வெளியிடுவோன்: க. ராமச்சந்திரன், கோலாலம்பூர்; விலை: $ 1. 50]

தேசத்தின் புனிதத் தந்தை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் யுத்த களத்தி லிருந்து பிரம்மசாரி கைலாஸம் அவர்களுக்கு எழுதிய கடிதங்களை அப்படியே நேதாஜியின் எழுத்துக்களுடன் பிரசுரித்து, அதற்கு நல்ல தமிழும் தந்திருக்கிறார்கள். நேதாஜி தம்கைப்படவே எழுதிய வாழ்க்கைக் குறிப்பு இத்துடன் சேர்க்கப்பட் டிருக்கிறது. இப் புத்தக வழி வரும் பணம் நேதாஜி மந்திரத்திற்கு நிதியாக வழங்கப்படும்.

ஏகாதிபத்திய பட்ஜெட்டா? தேசிய பட்ஜெட்டா?: [வெளியிட்டோர்: இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (தமிழ் நாடு கமிட்டி), 1/6 டேவிட்ஸன் தெரு, ஜி. டி. சென்னை. எழுதியது: "குப்...குப்...குப்"]

ரயில்வே முறைகளை நரக முறைகளாக்கிவிட்டுப் போனான் பெந்தால். பிரதிநிதித்துவம் பெற்ற இடைக்கால சர்க்காரில் அந்த ஸ்தானத்திற்கு ஜான் மத்தாய் வந்து ரூபாய்க்கு ஓர் அணாவை உயர்த்தி 10 கோடி ரூபாய் வருமானம் அதிகமாகும் ரயில்வே பட்ஜெட்டைச் சமர்ப்பித்தார். இதில் 9 கோடி ரூபாய்களைப் பாழும் ஏழை மக்கள் தான் கொடுக்கிறார்கள். இந்தப் பட்ஜெட்டின் முழு நிலைமையையும் அலசி நன்றாக ஆராய்கிறார் நண்பர் 'குப்...குப்...குப்'.

மனிதனும் சூழ்நிலையும்: [ஆசிரியர்: ஸ்ரீமதி ஆர். எஸ், ருக்மிணி, எம். ஏ. கிடைக்குமிடம்: புத்தக நிலையம், இராயவரம், புதுக்கோட்டை ஸ்டேட். விலை ரூ. இரண்டு]

மனோதத்துவத்தை முழுக்க முழுக்க விரிவாகச் சொல்ல முற்பட்டிருக்கும் முதல் தமிழ்ப் புத்தகம் இது. மனோதத்துவத்தை மிக எளிமையாக லாகவமான முறையில் புரியப் புரியச் சொல்லுகிறது. தட்டும் இடங்களிலே நடப்பி லிருக்கும் உவமை கொண்டு விளக்குகிறது. கேட்டிராத புதிய மொழிகளும் சொற்றொடர்களும் இதில் கையாளப் பட் டிருக்கின்றன. விளங்காத சொற்களுக்கு அங்கங்கே விரிவுரை தந்திருக்கும் முறை நல்ல முறை. பொதுவாக மானஸ சாஸ்திரத்தை ஓரளவு அறிந்துகொள்ள இது நன்கு பயன்படும். கூடுமான வரை பிழைகளின்றிப் பதிப்பிக்கப்பட் டிருக்கிறது.

நவகாளியில் காந்திஜீ: [ஆசிரியர்: வாசுதேவன். கிடைக்குமிடம்: பாரதமாதா பிரசுராலயம், துறையூர்

திருச்சி ஜில்லா. விலை ரூபாய் ஒன்றரை]

ரத்த—மத—வெறியை நிறுத்த நவகாளியில் காந்திஜீ கொண்ட வழியைக் கண்டு சரித்திரம்—உலகம்—பிரமித்தது. அந்த வழியைப் பற்றிய முழு விவரத்தையும் விறு விறுப்பான நடையில் சொல்லும்—தொகுக்கப்பட்ட—கோவை இது.

ஹிந்துஸ்தானி நண்பன்: [ஆசிரியர்: திருவையாறு டாக்டர் என். பி. சாஸ்திரி, இந்திய வைத்தியர் & ஜர்னலிஸ்ட், துறையூர்—திருச்சி. விலை ரூபாய் ஒன்று]

ஹிந்தியை அறிந்தவர் மூலம் முறையாகப் படிப்பதுதான் முறை. அப்படித்தான் படிக்க வேண்டும். அதுதான் சிறப்பு. அப்படிப் படிக்கத் தவறிவிட்டவர்களுக்கு இப் புத்தகம் ஓரளவு பயன்படும். முதல் முதலாகத் தமிழ் நாட்டில் தமிழ் மூலம் ரோமன் எழுத்தைக் கொண்டு ஹிந்துஸ்தானியைப் பேசக் கற்பிக்கும் முதல் புத்தகம் இதுதான்.

மின்மினி: [ஆசிரியர்: 'சிரஞ்சீவி'. பேசும் படம் வெளியீடு. கிடைக்குமிடம்: பேசும் படம் காரியாலயம், சென்னை 14. விலை ரூபாய் ஒன்றரை]

லெட்சுமிகாந்தனுடைய வரலாற்றுச் சரித்திரம் போல இருக்கிறது 'மின்மினி'. இதில் ஒரு சிறந்த நாவலுக்கு இருக்க வேண்டிய 'ரொம்ப'ச் சிறந்த அம்சங்களான கொலை, களவு, காமம், வாசகர்கள் அறியா வண்ணம் துப்பறிதல், மணிக் கணக்கில் நீளுகிற நீண்ட மேடைப் பிரசங்கங்கள், வாசகர்களின் முடிவுக்கு விட்டு விடும் அபார முடிவுகள் முதலிய பண்புகளும் கத்தி, துப்பாக்கி, கைக் குட்டை, விஷம் முதலிய கருவிகளும் வேண்டிய வேண்டிய இடங்களிலே வந்து பதிந்திருக்கின்றன தவறாமல்! இந்த மாதிரித் துறையில் பயனில்லா பல் நாவல்களை எழுதி எழுதித் தங்கள் உயிரையும் விட்டுத் தமிழர்களின் பொன்னான பொழுதையும் கொள்ளை கொண்ட புண்ணியம் வடுவூர், ஆரணி சந்ததியோடு முடிவடைந்துவிட்டது என்று நினைத்துப் பூரித்து மகிழ்ந்துவிட்ட தமிழர்களின் எண்ணத்தை மாற்றி, எச்சரிக்கைச் சங்கு ஊதுகிறது 'மின்மினி.'

வேண்டிய அளவு பிழைகள் இருக்கின்றன. இவையெல்லாம் போதாவென்று இப் புத்தகத்திற்குப் பின் உரையும் வேறு இருக்கிறது!

பாஸ்கர பஞ்சாங்கம் (1947-48: சர்வஜித் வருஷம்) [கணித்தவர்: பண்டிட் K.V.S. வெங்கடேச அய்யர். பரிசோதித்தவர்: மோகனூர் கிருஷ்ண விலாஸ் ஜோதிஷ சாலை அத்யக்ஷகர். கிடைக்குமிடம்: பாஸ்கர ஜோதிஷ நிலயம், வடக்கு வீதி, கரூர். விலை அணா ஆறு]

நல்ல புதிய அம்சங்கள் பல சேர்க்கப்பட்டு, திருந்திய முறையில் நன்றாக அச்சிடப்பட் டிருக்கிறது. மோகனூர் கிருஷ்ண விலாஸ் ஜோதிஷ சாலை அத்யக்ஷகரால் இது பரிசோதிக்கப் பட் டிருப்பது இதற்குரிய ஒரு தனிச் சிறப்பு. விலை ஆறணா மிக மலிவுதான்.

நந்துவின் பிறந்த நாள் [ஆசிரியர்: குமுதினி; வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர் சென்னை. விலை ரூபாய் இரண்டு]

இத் தொகுப்பி லிருக்கும் பதிமூன்று கதைகளும் நல்லசித்திரங்கள். 'சுமார் பத்து வருஷங்களாய் எழுதப்பட்டவை' என்பது முன்னுரையைப் படித்தால்தான் தெரியும். கதைகளில் பழமை தட்டவில்லை. சம்பவங்களைப் பஞ்சைத் திணிப்பதுபோல் திணிக்காமல், எந்த அளவு வேண்டுமோ, அந்த அளவு மட்டும் சேர்க்கப்பட் டிருக்கிறது. இது இதற்குரிய தனிச் சிறப்பு. தழுவியசரக்குகளில் விஷயம்-இயல்பு—இல்லை. தழுவிய சரக்குகளைவிடச் சொந்தச் சரக்கில்தான் விறு விறுப்பும், பொருளும், நடையழகும் இருக்கின்றன. ஒவ்வொரு கதையின் கூடும் மிக நன்று. தழுவிய கதைகள் மூன்றைத் தவிர மற்றப் பத்துக் கதைகளும் படிக்க வேண்டியவைகள் தாம்.

ஆலய வழிபாடு: [தருமபுர ஆதீன வெளியீடு. விலை இலவசம்]

தகுதி அறிந்து-நாட்டின் நிலை அறிந்து—இதில் ஆலயத்தை வழிபடும் முறை சொல்லப்படுகிறது.

விவேகானந்தரின் வீரமுரசு: [வெளியிட்டோர்: தலைவர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர்: சென்னை. விலை அணா ஆறு]

சுவாமி விவேகானந்தரின் கொள்கைச் சாரத்தை இதில் வடித்துத் தந்திருக்கின்றனர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார். உருவும் முகப்பும் உள்ளத்தை அள்ளுகிறது. கையடக்கப் பதிப்பாகிய இதை எல்லோரும் வாங்கிக் கையில் எப்பொழுதும் வைத்துக் கொண்டு பயனடையலாம்.

சுதந்தரப் போர்: [ஆசிரியர்: T. M. வாசுதேவன். வெளியிட்டோர்: தியாகக் கொடிப்பதிப்பகம் துறையூர், திருச்சி ஜில்லா. விலை ரூபாய் ஒன்றே கால்]

நேதாஜியைப் பற்றிய வரலாற்றுச் சூழ்நிலை,—சம்பவ சரித்திரங்கள்—முடிவற்று வந்துகொண்டே இருக்கின்றன. அந்த வரிசையில் இடம் பெற நிற்கும் இந்தப் புத்தகம் எப்பொழுதோ வந்திருக்க வேண்டியது. இப்பொழுதுதான் வந்திருக்கிறது. அதற்குக் காரணம் அழகாகச் சொல்லுகிறார் பதிப்பாளர். பொதுவாகப் பயன்படுத்தப்பட வேண்டிய புத்தகந்தான்.

சுடர்: [விசேஷ மலர்; பதிப்பாசிரியர்: இனியன்; விலை: ரூபாய் இரண்டரை]

அழகாக இருக்கிறது அமைந்த விதம். கி. வா. ஜ. வின் மனிதத்துவத்தைத் திறக்கும் 'கப்பற்கார'னும், மூடத்துவத்திற்குச் சூடு கொடுக்கும் தி. ஜ. ர. வின் 'படித்துறைப் பிசாசு'ம், வல்லிக்கண்ணனின் ஓவியமான கற்பனையும் சுந்தரத்தின் நாடகமும் இதில் அவசியம் படிக்க வேண்டியவைகள்.

இந்தியத் தாய்: [பொங்கல் விசேஷ மலர்; விலை: ரூபாய் இரண்டு; கிடைக்குமிடம்: இந்தியத் தாய் அச்சகம், மதுரை]

நாவலர் சோமசுந்தர பாரதி அவர்களின் படிக்கவேண்டிய நல்ல அழகான கட்டுரை ஒன்று இருக்கின்றது.

வரப்பெற்றோம்

திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள்; திருக்கண்ணூர் கோயில் திருப்பதிகம்; திரு எதிர்கொள்பாடித் திருப்பதிகம்; திரு ஒற்றியூர்த் திருப்பதிகங்கள்; திரு மயிலாப்பூர்த் திருப்பதிகம்; இவை தருமபுர ஆதீன வெளியீடுகள்.

சுதர்மம்: மாசம் ஒரு புத்தகம் பதிப்பாசிரியர்: ஆனந்தூர், கே. வேங்கடராமன். கிடைக்குமிடம்: D. K. A. M. Sabha, Vysya St., Coimbatore. விலை அணா நான்கு.

பாரதி தமிழ்ச் சங்கம் ஆண்டு அறிக்கை 1946—1947 கிடைக்குமிடம் 93—ராஷ்விஹாரி அவென்யூ, கல்கத்தா.

முருகு—முதல் மணம்—தொகுப்பாளர்: நா. அறிவழகன். பொறுப்பாளர்: வெ. முருகன். விலை அணா: 0-4-0. கிடைக்குமிடம்: 69 நயினியப்பன் தெரு, மண்ணடி—சென்னை—1.

—ராமையா

✱

88870

கற்கோபுரத்தின் கதை

எகிப்தி லுள்ள பிரமிட்ஸ் என்ற கற்கோபுரங்களைக் கட்ட நைல் நதி ஓரத்திலுள்ள மலைகளிலிருந்து கற்கள் பெயர்த்தெடுத்துக்கொண்டு வரப்பட்டன. ஒவ்வொரு கல்லின் எடையும் 21 டன். கி. மு. 2900-ல் சுமார் லட்சம் பேர் சேர்ந்து இருபது வருஷகாலம் செய்து, சியோப்ஸ் என்ற ஒரு கோபுரத்தைக் கட்டி முடித்தார்கள். இப்படி நாற்பது கோபுரங்கள் கட்டப்பட்டன.

—டிஹென்றி

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd.,
(Shanti Press) 115 - E, Mowbrays Road, Royapettah, Madras - 14

இரண்டு மகத்தான புதிய இசைத்தட்டுகள்!

ஏ. ஐ. ஆர். ஆர்கெஸ்ட்ரா

N.18942

மனமே ஈசன் நாமத்தை

சௌராஷ்ட்ரம் & மங்களம்

நாதஸ்வர வித்வான்
திருவாவடுதுறை (கக்காயி)

T.N.R. நடராஜசுந்தரம்

N.18943

ஸிந்துபைரவி -
௨ பாகங்கள்

எல்லா அத்தாக்ஷி பெற்ற
வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"HIS MASTER'S VOICE"

SAMUEL

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

இந்தியாவின் மிகப் பிரபல ஔஷதம்



வலியை விரைவில் போக்கடிப்பது!

நரம்பு நோய், கீல் வாயு, வாயுப் பிடிப்புகள், பல்வலி, சுளுக்கு அல்லது தலைவலி நீங்க மிகச் சிறந்ததான ஔஷதத்தை வாங்குங்கள். ஆனால் அதிகப்படி செலவில்லை.

DJK 19

பட்டு

என்றால் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானால் ஸ்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு — கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK 11 TM

பூச்சிகள் நாசினியாகிய இது

அசல் DDT தயாரிப்பாகும்; பூச்சிகளை ஒழிக்கும் DDT தயாரிப்புகளை முதன் முதலில் உபயோகத்திற்குக் கொண்டு வந்தவரான ஜே. ஆர். கேய்கி என்பவரளித்துள்ள தயாரிப்பு முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது வீடுகளில் ஈக்கள், எறும்புகள், கரப்பன் பூச்சிகள், கொசுக்கள், விளக்குப் பூச்சிகள், வெள்ளைப்பாச்சா இவைகளின் தொல்லையை ஒழிப்பதற்குறியதாகும். 10-சத விகிதம் DDT கலந்துள்ள நியோஸிட் இப்பொழுது பவுடர் ஒத்தி சகிதம் 2-அவுன்ஸ் டப்பிகளிலும், ½-பவுண்டு டின்களிலும், 1-பவுண்டு டின்களிலும் கிடைக்கும். ஆஸ்பத்திரி, பாடசாலை முதலிய ஸ்தாபனங்களுக்கு 28-பவுண்டு டின்களிலும் கிடைக்கும்.

DDT Geigy DDT

நியோஸிட் முற்றிலும் பலனளிக்க வேண்டுமானால் வீட்டின் அறைகள் எல்லாவற்றிலும், முக்கியமாக சமையலறை உக்கிராணங்களிலும் அதை விடாமல் தூவி வரவேண்டும்; இலேசாகத் தூவினால் போதும். பவுடரை தூவி 3 அல்லது 4 தினங்களாவது அப்படியே போட்டிருக்க வேண்டும். தவறுதலாகத் தூத்து தள்ளப்பட்டுவிட்டால் மீண்டும் தூவ வேண்டும். உடனே பலனளிக்கவில்லையே யென்று அவசரப்படவேண்டாம். நியோஸிட் மெதுவாகத்தான் வேலைசெய்யும். ஆனால் பூச்சிகளை அது ஸ்திரமாக ஒழித்துவிடும். சில தினங்களில் அதன்பலன் தெரிந்துவிடும்.

நியோஸிட்டை

சரியானபடி உபயோகியுங்கள்!

கெய்கீ இன்ஸெக்டிஸைட்ஸ் லிமிடெட் — Geigy — நெவில் ஹவுஸ், நிக்கல் ரோடு பல்லார்டு எஸ்டேட், பம்பாய்

D.J.K. 5314 TM

விநியோகஸ்தர்கள்: மைசூர் சமஸ்தானத்திற்கும், வட சர்க்கார் ஜில்லாக்களுக்கும்:

மெஸ்ஸர்ஸ். மகமது ரஹிம் கலீலி, 99—உஸ்மான்கான் ரோடு, பெங்களூர் ஸிடி.

தென்னிந்தியாவிற்கு: மெஸ்ஸர்ஸ், அடிஸன் அண்டு கோ., லிமிடெட், மவுண்டு ரோடு, மதராஸ்



சைத்ரிகன் தனக்கு முதலாக வேண்டியது ஒரு பென்சில் என்பதை அறிவான். வர்ணங்கள் 'பிரஷ்'கள் முதலான ஆடம்பரங்கள், அந்தப் பென்சிலுக்குப் பிறகுதான்.

அழகான படம் வரைவதற்குத் திறமை கொண்ட சைத்ரிகன் தேவை.

ஒரு நல்ல பென்சில்தான் சைத்ரிகனது திறமையை வெளிப்படுத்த முடியும்.

ஸ்டார் ஆப் இந்தியா பென்சில்தான் அந்த நல்ல பென்சில்!

அணில்

குழந்தைகளின்
வாரப் பத்திரிகை

கதை, விடுகதை, கணக்கு, கட்டுரை, சயன்ஸ், பாட்டு, விளையாட்டு, பெரியார் சரித்திரம்—இன்னும் குழந்தைகளுக்கான எல்லா விஷயங்களும் வெளியிடப்பெறும்

முதல் பத்திரிகை மே மாதம் வெளிவரும்

தனிப் பிரதி	வருட சந்தா
ஒரு அணா	ரூ. 3

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14

சுமங்கலி

அவள் அணிந்திருக்கு நகைகளிலிருந்து சுமங்க என்று தெரிகிறது.

நவரத்தினங்களும், புஷ்பங்களும் தெய்வங்களுக்கு உரியவை. ஒவ்வொரு பெண்ணுக்கும் தெய்வ அம்சம் உண்டு. நவரத்தினங்களும் நகைகளும், ஒரு கணமேனும் அணியாதிருந்தால் பெண்களது போக பாக்ய ஐச்வரியங்களுக்கு குறைவு ஏற்படுகிறது.

வைரங்கள் அவர்களுக்கு அழகு தருவதோடல்லாமல் நிரந்தர ஐச்வரியமாகவும் இருக்கிறது.

வைரம் வாங்குவது செலவல்ல. அது ஒரு சேமிப்பே

ஸூரஜ்மல்ஸ் மனச் சாந்தியும் வாழ்க்கையில் முன்னேற்றமும் அளிக்கக் கூடிய வைர நகைகளை விற்பவர்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்குமேல் ஒழுங்காகவும், நாண மாகவும், பொதுஜன சே செய்து வருகிறார்கள். அ களது வியாபாரம் அவ்வ நேர்மையானது.

ஸூரஜ்மல்ஸ்

313, எஸ்பிளனேட், மதராஸ்